பக்கங்கள் : 12+IV=பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆடி 30 வெள்ளிக்கிழமை (15-08-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:260

## வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாகம்:

# அரசு - புலிகள் இணங்குவதை எல்லாம் ஜனாதிபதி ஏற்பார் என எண்ணாதீர்கள்

## பிரதமருக்கு அவரே தெரிவிப்பு

கொழும்பு,ஓகஸ்ட்15

**வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பாக பிரதமராலும், புலிகள் இயக்கத்தாலும் இணக்கம் காணப்படும் அனைத்து விடயங்களும் தன்னாலும் நாட்டு மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்படும் என்று எண்ண வேண்டாமென பிரதமருக்கு ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.**

இடைக்கால நிர்வாகசபை யோசனைகள் தொடர்பான பிரதமரின் பதில் கடிதத்துக்கு ஜனாதிபதி அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கு அனுப்பப்பட்ட கடிதத்துக்கும், தமக்குத் தரப்பட்ட கடிதத்துக்கும் இடையில் சில முக்கிய விடயங்களில் வேறுபாடுகள் உள்ளதாகவும் ஜனாதிபதி மீண்டும் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் உத்தேச இடைக்கால நிர்வாக சபையில் இரண்டு இணைத் தலைமைகள் இருக்கும் என குறிப்பிடப்பட்டிருந்த போதும், புலிகளுக்கு அனுப்பப்பட்ட

(12ஆம் பக்கம் பார்க்க)

## மூதூரில் ஊரடங்கு

மூதூர்,ஓக.15

மூதூர் பொலீஸ் பிரதேசத்துக்குட்பட்ட பகுதியில் நேற்று இரவு 7 மணி முதல் இன்று காலை 6 மணி வரை பொலீஸ் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மூதூர் பிரதேசத்தில் அமைதியை நிலைநாட்டும் முகமாக இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக கிழக்கு மாகாண பிரதிப் பொலீஸ்மா அதிபர் நெவில் விஜயசிங்க தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் திருகோணமலை, செல்வநாயகபுரம் பகுதியில் கொலை செய்யப்பட்ட இருவரினதும் இறுதிக்கிரியைகள் நேற்று மூதூரில் இடம்பெற்றன. இதனால், மூதூர் பிரதேசத்தில் பதற்ற நிலை ஏற்படுவதைத் தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பொலீஸார் தெரிவித்தனர். (ம)

## மட்டக்களப்பில் ஈ.பி.டி.பி. நபர் நேற்றுப் பகல் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு,ஓக.15

மட்டக்களப்பு நகரில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். இச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் 12.45 மணியளவில் இடம்பெற்றது.

இவருடன் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இன்னொரு நபர் தப்பிச் சென்றுள்ளார்.

மட்டக்களப்பு, அதிகார் வீதியைச் சேர்ந்த அரசரட்ணம் ரதீஸ்வரன் என்ற 32 வயது இளைஞரே சுட்டுக் கொல்லப்பட்டவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் நீண்டகாலமாக மட்டக்களப்பில் செயற்பட்டு வந்த ஈ.பி.டி.பி. உறுப்பினராவார்.

வீதியில் சைக்கிளில் வந்த இருவரே இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். கொல்லப்பட்ட ரதீஸ்வரனின் மார்பில் 4 துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்துள்ளன. சம்பவம்

(12ஆம் பக்கம் பார்க்க)



இலங்கைக்கு வந்துள்ள தாய்லாந்துப் பிரதமரை நேற்று விமான நிலையத்துக்கு நேரில் சென்று வரவேற்றார் பிரதமர் ரணில். இருநாட்டு பிரதமர்களும் செய்தியாளர்களிடம் பேசியபோது எடுத்த படம் இது.

*(விரிவான செய்திகள் 2 ஆம் பக்கத்தில்)*

## மனித உரிமைகள் பற்றி ஆராய நோர்வே நாட்டவர் யாழ்ப்பாணம் வருகை

யாழ்ப்பாணம்,ஓக.15

யாழ்.குடாநாட்டில் மனித உரிமைகளின் நிலைமை எப்படி இருக்கின்றது என்பது தொடர்பாக ஆராய்வதற்காக நோர்வே நாட்டின் மனித உரிமை ஆர்வலரான பேர்ண்ட் நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தந்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு தொலைபேசி எண்களில் மாற்றம்

கொழும்பு,ஓக.15

கொழும்பு மாநகரத்தையும் அதனை அண்டிய பிரதேசங்களையும் சேர்ந்த பகுதிகளில் ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தின் தொலைபேசிகளின் இலக்கங்களில் இன்று

(12ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாக வரைவு பற்றி

# 21 முதல் 27 ஆம் திகதி வரை பாரிஸில் புலிகள் - சட்டவல்லுநர்கள் ஆராய்வு!

கொழும்பு,ஓக.15

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாக அரசு முன்வைத்துள்ள வரைவு குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளும், சர்வதேச சட்ட வல்லுநர்களும் எதிர்வரும் 21 ஆம் திகதிமுதல் 27 ஆம் திகதி வரை பாரிஸில் கூடி விரிவாக ஆராய்வர்.

இதற்கான சகல ஏற்பாடுகளும் பிரான்ஸ் அரசினால் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. இதனை பிரான்ஸ் உத்தியோகபூர்வமாக நேற்றுக்காலை அறிவித்துள்ளது.

இத்தகவல்களை அமைச்சரவை பேச்சாளரும், அரசியல் விவகார அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# 17 ஆயிரம் பேரை இராணுவத்துக்கு சேர்க்கும் பணி அடுத்த மாதம் ஆரம்பம்

கொழும்பு,ஓக.15

இராணுவத்தில் நிலவும் 17 ஆயிரம் வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு அடுத்த மாதம்முதல் நான்கு கட்டங்களாக ஆள்சேர்ப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது. இதில் தமிழர்களும் இணைந்துகொள்ளலாம். படையினருக்கு சம்பள உயர்வும் வழங்கவுள்ளோம்.

- இப்படிக் கூறியுள்ளார் இராணுவத்தின் சிரேஷ்ட தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் லொஹான் குணவர்த்தன. இராணுவ தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது 17 ஆயிரம் பேருக்கு இராணுவத்தில் வெற்றிடம் உள்ளது.

இந்த வெற்றிடத்திற்கு நான்கு பகுதிகளாக ஆள்களைச் சேர்க்கும் நடவடிக்கை அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தமிழ் இளைஞர்கள் இராணுவத்தில் சேருவதற்கு ஆர்வமின்றியே காணப்படுகின்றனர்.

இலங்கைத் தமிழர்களும் இராணுவத்தில் சேருவதற்கு தகுதியுடையவர்களே. அவ்வாறு இராணுவத்தில் இணைய விரும்புபவர்கள் இந்த ஆள்

(12ஆம் பக்கம் பார்க்க)

# திருமலையில் இரு இளைஞர் சுட்டுக்கொலை இதனால் மூதூரில் நேற்று பெரும் பதற்றம்

திருகோணமலை,ஓக.15

மூதூரைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள் நேற்றுமுன்தினம் இரவு திருகோணமலையில் இனந்தெரியாதவர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இதனை அடுத்து மூதூரில் நேற்றுப் பெரும் பதற்றம் ஏற்பட்டது. கடைகள் மூடப்பட்டிருந்தன; அலுவலகங்கள் இயங்கவில்லை. வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன.

மூதூர் தக்வா நகரைச் சேர்ந்த அப்துல் குத்தூஸ் பரீட் (வயது-35, திருகோணமலை துறைமுக அதிகார சபையில் காவலராகப் பணிபுரிபவர்) என்பவரும், மூதூர், நயினார் நகரைச் சேர்ந்த முகமட் றிஸ்வான் (வயது-26 சேருவிலவில் இழுவைப்படகுத் தொழிலாளியாகப் பணிபுரிபவர்) என்பவருமே சுட்டுக்கொல்லப்பட்டவர்களாவர்.

திருகோணமலை, செல்வநாயகபுரம் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றில் இருவரும் வந்து கொண்டிருந்த சமயம் வழிமறிக்கப்பட்டு ரி-56ரகத் துப்பாக்கியினால் தலையில் சுடப்பட்டனர் என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

அவர்களின் மோட்டார் சைக்கிள் சம்பவ இடத்தில் இல்லை. அது காணாமற்போயுள்ளது. எனினும், அவர்களின் ஹெல்மெட்டுக்கள் அங்கு கிடந்தன. அவர்கள் தம்முடன் சுமார் எண்பதினாயிரம் ரூபா எடுத்து வந்திருந்தனர் என்றும் அதுவும் காணாமற்போயிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இருவரின் சடலங்கள் மீதான

(12ஆம் பக்கம் பார்க்க)

அவசரமாக காசு தேவைப்படுகின்றதா ?

இப்போது தேசிய சேமிப்பு வங்கியின் ரன் சஹன அடகுச்சேவை



NSB

- ஒரு தங்க சவரனுக்கு கூடுதலான பணம்
- இரகசியம் பேணல் மற்றும் துரித சேவை
- தவணை அடிப்படையில் திரும்ப செலுத்தும் வசதி
- வருடாந்தம் 17% குறைந்த வட்டி
- கண்ணி மூலம் பரிசோதனை

NSB தேசிய சேமிப்பு வங்கியின் தங்கமான சலுகை

PHOENIX O&M

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்ஹெய்ம் நேற்று மட்டக்களப்பு சென்றார்

## தளபதி ரமேஷையும் சந்தித்தார்

மட்டக்களப்பு,ஓக.15

நோர்வே சமாதான அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்ம் நேற்று மட்டக்களப்பை வந்தடைந்தார். தரை வழியாகப் பயணம் செய்து மட்டக்களப்புக்கு வந்த அவரை மட்டக்களப்பு மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் அன்ரி ஜக்கியூன் வரவேற்றார்.

ஜோசப் பரராஜசிங்கம் எம்.பியைச சந்தித்துப் பேசிய சொல்ஹெய்ம் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடினார்.

முற்பகல் 10 மணியிலிருந்து 11.45 மணிவரை இக்கலந்துரையாடல் இடம் பெற்றது. அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் வகமலதாஸுடன் எகெட், சரீரம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், பெண்கள் - மகளிர் மன்றம் ஆகிய அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் பாரபட்சமாக நடந்து கொள்கின்றனர் எனவும் மக்களின் மீள்குடியேற்ற செயற்பாடுகளில் அக்கறை காட்டுவதில்லை எனவும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் சுட்டிக் காட்டினார்கள்.

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் கரடியனாற்றிலுள்ள 'மீனகத்'தில் சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களின் சிறப்புத் தளபதி தரமேஷைச் சந்தித்தார்.

(ம)



மட்டக்களப்புக்கு நேற்று விஜயம் செய்த நோர்வே சமாதானக் குழுவின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்ம் மற்றும் அவரது உதவியாளர் ஆகியோர் மட்டு - அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஷை சந்தித்து கலந்துரையாடினர். மீனகத்துக்கு வருகை தந்த அவர்களை தளபதி ரமேஷ் கைலாகு கொடுத்து வரவேற்றார்.

# கூடுதல் இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியாவில் விசேட போர்ப் பயிற்சிகள்

## அமைச்சரவைப் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு,ஓக.15

இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியாவில் விசேட போர்ப்பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. கடந்த வருடத்தைவிட இம்முறை கூடுதலான இராணுவத்தினர் அங்கு பயிற்சிக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இத்தகவலை வெளியிட்டார்.

தற்போதைய சமாதான முயற்சிகளில் இந்தியா நேரடியாகத் தலையிடாவிட்டாலும் இலங்கைஅரசு மேற்கொண்டுவரும் சமாதான முன்னெடுப்புகளுக்கும் அபிவிருத்தித் திட்டங்களுக்கும் அது தொடர்ந்து பெரும்பங்களிப்பைச் செய்து வருகின்றது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந் சின்ஹா எதிர்வரும் 18ஆம் திகதி இங்கு வருகின்றார். ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஆட்சிக்கு வந்தபின் இந்திய வெளிவிவகார அமைச்சர் மேற்கொள்ளும் இரண்டாவது விஜயம் இதுவாகும் நல்லெண்ண விஜயத்தை மேற்கொள்ளும் அவர் இரண்டு நாள்கள் இங்கு தங்கியிருப்பார்.

இலங்கை - இந்திய அரசுகளுக்கிடையிலான உறவுகள் கடந்த 19 மாத காலத்தில் மேலும் நெருக்கமடைந்துள்ளன.

கடந்த வருடம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தகப் பரிமாற்றம் ஆயிரம் கோடி ரூபாவாக அதிகரித்துள்ளது.

இலங்கை உற்பத்திகளை இறக்குமதி செய்வதில் மூன்றாவது இடத்தையும் அதேபோன்று இந்திய உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதில் ஐந்தாவது இடத்தையும் இந்த வர்த்தகப் பரிமாற்றம் பிடித்துள்ளது.



கடந்த வருடம் இங்குவந்த சுற்றுலாப் பயணிகளில் 12 வீதமானவர்கள் இந்தியர்கள் என்பதும் குறிப்பிடத் தக்கது.

இந்தியாவிடமிருந்து பெற்ற மொத்தக்கடனை திருப்பிச் செலுத்தும் தவணைக்காலம் 12 வருடங்களில் இருந்து 20 வருடங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கல்வி, விவசாயம், பாதுகாப்பு ஆகிய துறைகளிலும் இந்தியா பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றது.

குறிப்பாக, எமது இராணுவத்தினருக்கு விசேட போர்ப்பயிற்சிகளையும் வழங்கிவருகின்றது. கடந்த ஆண்டு 1,089 பேருக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இந்த வருடம் 1,510 இராணுவத்தினர் பயிற்சி பெறுகின்றனர்.

மேலும், பலாலி விமான நிலைய ஓடுபாதை விஸ்தரிப்பு நடவடிக்கைகளுக்காக இந்தியா 30 கோடி ரூபாவை வழங்கியுள்ளது.

- இவ்வாறு அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

(ம)

# தாய்லாந்துப் பிரதமரை நேற்று ரணில் நேரில் சென்று வரவேற்பு

கொழும்பு,ஓக.15

தாய்லாந்துப் பிரதமர் தக்ஸின் சினவத்ராவுக்கு நேற்றுக்காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, விமான நிலையத்துக்கு நேரடியாகச் சென்று தாய்லாந்துப் பிரதமரையும் குழுவினரையும வரவேற்றார்.

தாய்லாந்துப் பிரதமருடன் வெளிவிவகார, வர்த்தக, கலாசார அமைச்சர்கள் உட்பட 22 முக்கியஸ்தர்கள் அடங்கிய குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்திருக்கின்றனர். தாய்லாந்தின் விசேட விமானம் ஒன்றில் அவர்கள் வந்திருக்கின்றனர்.

விமானப்படையினரின் அணிவகுப்பு மரியாதையை தாய்லாந்துப் பிரதமர் ஏற்றுக்கொண்டார். பின்னர் மோட்டார் கார் பவனியில் தாய்லாந்துப் பிரதமரும், குழுவினரும் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டனர். வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ, பிரதியமைச்சர் லால் தர்மப்பிரிய கமகே ஆகியோரும் விமான நிலைய வரவேற்புக்குச் சென்றிருந்தனர்.

# மீண்டும் ஈழப்போரா? அரசு முடிவெடுக்கட்டும்

## அடைக்கலநாதன் எம்.பி.

தமிழர்கள் ஈழத்துக்களப் புனிதப் போரினை மேற்கொள்வதா, இல்லையா என்பதனை சிங்கள ஆட்சியாளர்கள்தான் முடிவு செய்யவேண்டும்.

- இவ்வாறு தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ இயக்கத் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

"இடைக்கால நிர்வாகம் வழங்குவதில் தொடர்ந்து அரசு பின்நிற்பது போல் தெரிகிறதே" என்று கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார.

அடைக்கலநாதன் மேலும் கருத்துக் கூறுகையில் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்குப் பகுதியின் நிர்வாக அமைப்பில் நிச்சயமாகத் தமிழர்களுக்கு அதிக அளவிலான அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும். அப்போதுதான் வடக்கு - கிழக்குப் பகுதியில் ஒரு சுமுகமான நிலை தோன்றும். அப்படி இல்லை என்றால் பாரிய விளைவுகள் ஏற்படும்.

கடந்த காலங்களைப் போல சிங்கள அரசு, தமிழர்களின் இரத்தத்தின் மீது நடக்க நினைக்கக்கூடாது. அப்படி அரசு நினைத்தால் ஒவ்வொரு தமிழ் மகனும் ஈழம் மீட்கும் புனிதப் போரினை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும். - இவ்வாறு கூறினார் அடைக்கலநாதன்.

# பயங்கரவாதம், ஆயுதக் கடத்தலுக்கு தாய்லாந்து இடமளிக்கவே மாட்டாது!

## அந்நாட்டுப் பிரதமர் கொழும்பில் உறுதி தெரிவிப்பு

கொழும்பு,ஓக.15

ஒரு நாட்டின் ஸ்திரத்தன்மையைக் குலைக்கும் பயங்கரவாதத்துக்கு தாய்லாந்து அரசு துணை போகாது, தாய்லாந்து மண்ணிலிருந்து ஆயுதங்கள் கடத்துவதைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாய்லாந்து பிரதமர் டாக்டர் தக்ஸின் சின்வத்ரா நேற்று அலரி மாளிகையில் செய்தியாளரொருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்றுக்காலை இலங்கை வந்த தாய்லாந்துப் பிரதமர் பகல் 12.30 மணிக்கு ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்துப் பேசினார்.

பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை தாய்லாந்துப் பிரதமர் அலரி மாளிகையில் சந்தித்தார். இருநாட்டு தேசியக் கொடிகளுக்கு முன்னால் நின்றுகொண்டு இருவரும் செய்தியாளர்கள் எழுப்பிய ஒருசில கேள்விகளுக்குப் பதிலளித்தனர்.

இலங்கை, தாய்லாந்து ஆகிய இரு நாடுகளுக்கும் இடையே உல்லாசப் பயணத்துறையை அபிவிருத்தி செயவது குறித்தும், இரத்தினக்கல் வர்த்தகம் உட்பட பொருளாதார ஒப்பந்தங்கள் குறித்தும் நாம் பேச்சு நடத்தவுள்ளோம் என்று தாய்லாந்துப் பிரதமர் டாக்டர் தக்ஸின் சின்வத்ரா தெரிவித்தார்.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெறும் சமாதானப் பேச்சு வெற்றிபெறும் என்றும் அவர் அங்கு நம்பிக்கை தெரிவித்தார்.

அங்கு பிரதமர் ரணில் கூறியதாவது:-

அரசு-புலிகள் சமாதானப் பேச்சுகளுக்கு தாய்லாந்து இடமளித்தது, அதற்காக நாம் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

தேரவாத பௌத்தத்தை இரு நாடுகளும் பின்பற்றுகின்றன. இரு நாடுகளுக்குமிடையிலான கலை, கலாசாரத் தொடர்புகள் அதிகரிக்க வேண்டும் - என்றார்.

இவ்வைபவத்தில் பிரதமருடன் வர்த்தக நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் ரவி கருணாநாயக்க, பெருந்தோட்டத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ ஆகியோரும் தாய்லாந்து வெளிவிவகார அமைச்சர் சுரகியாட் உத்திராத்தேயும் கலந்து கொண்டனர்.

(ஒ)

## சில அமைச்சர்களுக்கு எதிரான

# ஊழல் குற்றச்சாட்டுக்களை ஆராய காணி அமைச்சர் ராஜித கோரிக்கை

கொழும்பு,ஓக.15

அரசாங்கத்தின் சில அமைச்சர்களுக்கு எதிராக பெரும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் உள்ளன. எனவே, அந்த அமைச்சர்களுக்கு எதிராக விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று காணியமைச்சர் ராஜித சேனாரத்ன கோரிக்கை விடுத்திருக்கிறார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற முன்னோடி அமைச்சரவைக் கூட்டத்திலேயே அவர் இக்கோரிக்கையை விடுத்தார். ஐ.தே.கவின் பிரதித் தலைவரும மின்சக்தி, எரிசக்தி அமைச்சருமான கரு ஜயசூரியவின் தலைமையில் அலரிமாளிகையில் இக்கூட்டம் நடைபெற்றது.

இக்கோரிக்கையை அடுத்து, எமிரேட்ஸ் நிறுவனத்துடன் அரசு செய்து கொள்ளவிருக்கும் ஒப்பந்தம் குறித்து அமைச்சர் சேனாரத்ன கண்டித்துப் பேசினார். அந்த ஒப்பந்தம் குறித்து ஏற்கனவே பல குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன என்று அவர் கூறினார்.

இதற்கிடையே, திறைசேரி செயலாளர் சரித்த ரத்வத்தவின் சில செயற்பாடுகளினால், தான் இக்கட்டான நிலைக்கு உள்ளாகியிருப்பதாக வர்த்தக, நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

சீன விஜயத்தை முடித்து நாடு திரும்பியிருக்கும் பிரதமர், இந்த விடயங்கள் அவரது கவனத்துக்குக் கொண்டுவரப்படும் என்று கரு ஜயசூரிய கூறியிருக்கிறார்.

# மேல்மாகாண ஆஸ்பத்திரிகளில் நேற்று பணிகள் அனைத்தும் ஸ்தம்பிதம்!

மேல்மாகாண அரச வைத்திய சாலைகளில் நேற்று அலுவல்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டன. வெளி நோயாளர் சிகிச்சைப் பிரிவுகளுக்கு வந்த நோயாளர்கள் சிகிச்சை பெற முடியாது திரும்பிச் சென்றனர்.

சத்திர சிகிச்சைகள், நோயாளரைச் சேர்ப்பது, உணவு பரிமாறுதல் உட்பட பல அலுவல்கள் நடைபெறவில்லை. கொழும்பு தேசிய வைத்திய சாலையின் பணிகள் ஸ்தம்பித்திருக்கின்றன.

சம்பள முரண்பாடுகளை நீக்குவது உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து சுகாதாரத் துறையைச் சேர்ந்த பல பிரிவு ஊழியர்கள் நேற்று ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

# பிரமனாதன்குளம் சந்தியில் மடுமாதா சொரூபம் ஸ்தாபிப்பு

வவுனியா,ஓக.15

கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்ட மடுமாதா திருச்சொரூபம் நேற்று நண்பகல் பிரமனாதன்குளம் சந்திக்கு பவனியாக எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மக்களின் வழிபாட்டுக்காக ஸ்தாபிக்கப்பட்டது.

பிரமனாதன்குளம் சந்தியில் அமைக்கப்பட்டிருக்கும் ஒரு விசேட மேடையில் மாதாவின் திருச்சொரூபம் பெருந்திரளான மக்கள் முன்னிலையில் ஸ்தாபிக்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை மாலை வவுனியாவை வந்தடைந்த மாதா திருச்சொரூபம், இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

நேற்றுக்காலை ஆலயத்தில் நடைபெற்ற விசேட பிரார்த்தனையின் பின்னர் மன்னார் வீதி வழியாக திருச்சொரூபம் எடுத்துச் செல்லப்பட்டது. இதற்கிடையே, மடுமாதா ஆலய ஆவணி திருவிழா இன்று [illegible] யில் கொண்டாடப்படுகின்றது.

# அமைதி பேணக் கோருகிறது மு.காங்கிரஸ் செயலாளர் நாயகம் ஹசன் அலி அறிக்கை

கொழும்பு,ஓக.15

திருகோணமலையில் இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டிருப்பது தொடர்பாக அறிக்கை வெளியிட்டுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இத்தகைய சம்பவங்களில உணர்ச்சிவசப்படாமல் அமைதி பேணும் படி [illegible] சமூகத்தவரையும் கோரி [illegible]

முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் அதன் செயலாளர் எம்.ரி.ஹசன் அலி நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னணிப் போராளிகளான சகோதரர்கள் பரீட், றிஸ்வான் ஆகியோர் புதனன்று திருகோணமலையிலுள்ள செல்வநாயகபுரம் என்னும் இடத்தில் மிலேச்சத்தனமாகச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

அண்மைக் காலமாக திருமலை மாவட்டத்தில் - குறிப்பாக மூதூர் பிரதேசத்தில் - அவ்வப்போது முடுக்கி விடப்பட்ட தமிழ் - முஸ்லிம் இனக் கலவரங்களின் பின்னணியில் இவ்வாறான சம்பவம் நடைபெற்றிருப்பது பல விதமான சந்தேகங்களைக் கிளப்புவதுடன், முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் ஆத்திரத்தையும் வேதனைகளை

(11.ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீன தீவிரவாதத் தலைவரை இஸ்ரேலிய இராணுவம் கொன்றது!

ஜெருசலேம்,ஓக.15

பலஸ்தீனத் தீவிரவாதத் தலைவர் ஒருவரை மேற்குக்கரை நகரான ஹெப்ரானில் இஸ்ரேலியப் படையினர் நேற்றுக் கொன்றனர். பலஸ்தீன விடுதலை அமைப்புக்களில் ஒன்றான இஸ்லாமிய ஜிகாத்தின் ஆயுதப் பிரிவின் தலைவரான மொஹமட் செடார என்பவரே கொல்லப்பட்டவராவார். ஹெப்ரானில் உள்ள தனது வீட்டில் தங்கியிருந்த செடாரை இஸ்ரேலியப் படையினர் சுட்டுக்கொன்றதாகவும் -

இஸ்ரேலின் வேண்டுகோளையடுத்து பலஸ்தீனத் தீவிரவாதிகள் கடைப்பிடித்த தாக்குதல் நிறுத்தத்தை சீர்குலைக்கும் செயல் இதுவென்றும் -

பலஸ்தீன வட்டாரங்கள் தெரிவித்தன.

இஸ்லாமிக் ஜிகாத் அமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் கூறுகையில்:-

செடார் கொல்லப்பட்டமை பாரிய குற்றச்செயல் என்றும் - இதற்கு இஸ்ரேல் தனது படையினர் மற்றும் யூதக் குடியிருப்பாளர்களின் உயிர்களை விலையாகக் கொடுக்க வேண்டியிருக்கும் என்றும் -

தெரிவித்தார்.

இதேவேளை, இஸ்ரேலிய நிலை மீது கார்க் குண்டுத் தாக்குதல் நடத்த செடார் திட்டமிட்டிருந்ததாகவும் - தகவல் கிடைத்து தாம் சென்றவேளை தம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் -

பதில் தாக்குதலில் செடார் கொல்லப்பட்டதாகவும் -

இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

ஆனால், செடார் இருந்த வீட்டை சுற்றிவளைத்த இஸ்ரேலியப் படையினர், வீட்டின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் -

அதன்பின்னரே வீட்டுக்குள்ளிருந்து பதில் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் -

நேரில் கண்டவர்கள் தொலைக்காட்சி செய்திச் சேவை ஒன்றுக்கு தெரிவித்தனர்.

முன்னதாக நேற்றுக்காலை நப்லஸ் நகரில் உள்ள வீடொன்றை இஸ்ரேலிய இராணுவம் தகர்த்துத் தரைமட்டமாக்கியது. கடந்த செவ்வாய்க்கிழமை இஸ்ரேலியக் குடியிருப்பான ஏரியலில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலை நடத்திய பலஸ்தீனத் தீவிரவாதியின் வீடே தகர்க்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.




பிரிட்டிஷ் படையினரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் ஆயிரக்கணக்கான கென்யப்பெண்களும், அவர்களது கலப்பினக் குழந்தைகளும் தலைநகர் நைரோபியில் உள்ள பிரிட்டிஷ் தூதரகத்தின் முன பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட படம்.

கென்யாவில் உள்ள பிரிட்டிஷ் இராணுவப் பயிற்சித் தளத்தில் நிலைகொண்டிருந்த பிரிட்டிஷ் படையினரே இந்த வல்லுறவுக் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ளனர்.

## டாக்டர் கெலி மரண விசாரணையில் பி.பி.சி. செய்தியாளர் சாட்சியம்!

லண்டன்,ஓக.15

டாக்டர் டேவிட் கெலியின் தற்கொலை தொடர்பான விசாரணையில சாட்சியமளித்த பி.பி.சி. செய்தியாளர் அன்றூ கிலிக்கன், ஈராக் சிறியளவு அச்சுறுத்தலையே கொண்டிருந்தது என்றும் ஆனால், ஒருபோரை நியாயப்படுத்துமளவுக்கு அரசாங்கம் அதனை பொதாக்கியது என்றும் கெலி நம்பியதாகத் தெரிவித்துள்ளார்.

ஆயுதங்கள் தொடர்பான அரசின் ஆவணம் குறித்து பிரிட்டிஷ் புலனாய்வு நிபுணர்கள் மனவேதனை அடைந்திருந்தனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கெல்லியுடன் நடத்திய உரையாடலின்படி யாவுமே எதிர்பார்த்தபடி நடந்தாலும் சதாமினால் பெருமளவு மக்களை அழிக்க முடியாது. என்று கிலிக்கன் மேலும் கூறினார்.

பயன்படுத்தக்கூடிய ஆயுதங்கள் ஈராக்கில் இருந்திருக்கவில்லை என்றும் கெல்வி கூறியதாகவும் அவர் கூறினார்.

கிலிக்கன் இது பற்றி மேலும் தெரிவித்ததாவது:-

புலனாய்வு ஆவணத்தை, அரசு மாற்றியதாகவும் ஆவணம் வெளியிடப்படுவதற்கு 2 வாரங்களுக்கு முன்னரே அவை மாற்றப்பட்டதாகவும் கெல்வி கூறினார் என்றார் செய்தியாளர்.

## பசு வதைத் தடைச் சட்டத்துக்கு கேரள மாநிலத்தில் எதிர்ப்பு

திருவனந்தபுரம்,ஓக.15

பசு வதைக்குத் தடை விதிக்க வகை செய்யும் சட்டத்தை நாடு முழுவதும் அமுல்படுத்த இந்திய அரசு மேற்கொண்டுள்ள முயற்சிக்கு கேரள அரசு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கேரள முதல்வர் ஏ.கே.அந்தோனி கூறியதாவது:

விலங்குகள் பராமரிப்பு, மாநில அரசின் பட்டியலில் உள்ளது. இதை பொதுப்பட்டியலில் கொண்டுவந்து தேசிய அளவில் பசு வதையைத் தடை செய்ய சட்டம் கொண்டுவர முயற்சிப்பதை ஏற்க முடியாது.

மலிவான விலையில் கிடைப்பது மாட்டிறைச்சி, இத்தகைய சட்டத்தை நாடு முழுவதும் அமுல்படுத்தினால் இறைச்சி உண்போருக்குப் பாதிப்பு ஏற்படும். இது தவிர, வயதான பசுக்களுக்கு தீவனம் வழங்குவது மற்றும அவற்றைப் பராமரிப்பது விவசாயிகளுக்குப் பெரும் சுமையாகிவிடும்.

வயதான பசுக்களைப் பராமரிக்க கேரளத்தில் கோசாலைகள் இல்லை.

மாநிலத்தில் நிறைய குடும்பங்கள் இறைச்சி விற்கும் தொழிலையே நம்பி உள்ளன. அத்தகையோரின் எதிர்காலம் கேள்விக்குறியாகும் என்றார் அந்தோனி.

(ஒ)

## இன்று இந்திய சுதந்திர தினம்

இந்தியாவின் 57 ஆவது சுதந்திரதினம் இன்று ஆகும். டில்லியில் சுதந்திர தினவிழாவைக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் இன்றைய சுதந்திர தினவிழாவின் போது பிரதமர், துணைப் பிரதமர் ஆகியோரின் உயிர்களுக்கு தீவிரவாதிகளினால் ஆபத்து ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனால் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் புதுடில்லி வான் வெளியில் விமானங்கள் பறப்பதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. டில்லியிலுள்ள செங்கோட்டையில் விழா இந்திய நேரப்படி காலை 7 மணி முதல் 8.30மணிவரை நடைபெறவுள்ளது.



இந்திய சுதந்திர தின அணிவகுப்பின் ஒத்திகை நேற்று இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படம்.

## அமெரிக்காவுக்கு பாக்.கண்டனம்

விமானத்தில் பொருத்தும் ரேடார்களை இந்தியாவுக்கு இஸ்ரேல் விற்பனை செய்ய அனுமதி அளித்த அமெரிக்காவுக்கு பாகிஸ்தான் கண்டனம் தெரிவித்துள்ளது.

'பால்கன்' என்ற அதி நவீன ரக ரேடாரை இந்தியாவுக்கு இஸ்ரேல் விற்க அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளது.

விற்பனைக்கு 2ஆண்டுகளுக்கு முன்பே ஆதரவு தெரிவித்தது அமெரிக்கா. ஆனால், இரு நாடுகளுக்கும் இடையில் பதற்றம் இருந்ததால், விற்பனையை ஒத்திவைக்கும்படி இஸ்ரேலுக்கு அமெரிக்கா அறிவுரை அளித்தது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் தற்போது சுமுக உறவுக்கான முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், இந்த அனுமதியை அமெரிக்கா அளித்தது.

ஆனால், இதற்கு பாகிஸ்தான் கண்டனம் தெரிவித்துள்ளது.

## தீவிரவாதிகளின் தாக்குதலில் இந்தியாவில் 8 பேர் பலி!

புதுடில்லி,ஓக.15

இந்தியாவின் வட கிழக்கு மாநிலங்களான மணிப்பூர் மற்றும் திரிபுராவில் பிரிவினை கோரும் தீவிரவாதிகள் நேற்று நடத்திய தாக்குதல்களில் 8 பேர் உயிரிழந்தனர்.

மணிப்பூர் மாநிலம், இம்பால் மாவட்டம் லிவாங்க் பகுதியில் நேற்று தீவிரவாதிகள் நடத்திய வெடிகுண்டு தாக்குதலில் 3 பெண்கள் உட்பட 6 பேர் மாண்டனர். மேலும் 15 பேர் காயமடைந்தனர்.

இம்பாலுக்கு 15 கி.மீ தொலைவில் லிவாங்க் பாலத்தில் தீவிரவாதிகள் வெடிகுண்டு வைத்திருந்தனர். பாலத்தின் மீது பஸ் ஒன்று வந்து கொண்டிருந்த போது வெடிகுண்டு தொலைவில் இருந்து வெடிக்க வைக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் பஸ்ஸில் பயணம் செய்தவர்களில் 3 பேர் சம்பவ இடத்திலேயே மாண்டனர். 2 பேர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் இறந்தனர். ஒருவர் மருத்துவமனையில் மரணமடைந்தார் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

குண்டு வெடித்ததில் பாலத்தின் ஒரு பகுதி சேதமடைந்தது. பாதுகாப்புப் படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

இதற்கிடையில் நேற்று திரிபுரா மாநிலத்தில் வங்காளிகளின் குடியிருப்பு ஒன்றில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில் 2 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். மேலும் 6 பேர் காயமடைந்தனர்.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் பிரிவினை கோரிப் போராடும் தீவிரவாத இயக்கங்கள் இந்திய சுதந்திர தினத்தைப் புறக்கணிக்கும்படி தத்தமது மாநில மக்களை கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)



அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடைபெறவுள்ள ஆளுநர் தேர்தலில் நடிகர் ஆனோல்ட் ஷ்வாஸ்நேகரை எதிர்த்துப் போட்டியிடும் மேரீ கரே மனுத்தாக்கல் செய்ய தேர்தல் அலுவலகத்துக்குச் செல்கிறார்.

## அமெரிக்காவின் உளவாளியாக 42 வயதுப் பெண்

வாஷிங்ரன்,ஓக.15

அமெரிக்காவில் அல்-கெய்டா இயக்கத்தைச் சேர்ந்த தீவிரவாதிகளை வலைவீசித் தேடும்பணி நடைபெற்று வருகின்றது. இதில் சில பெண்களையும் அமெரிக்கா ஈடுபடுத்தியுள்ளது.

இவர்களில் மிகஸ் கால்ட் என்ற 42 வயதுப் பெண்ணும் ஒருவர். இப்பெண் தீவிரவாதிகளுடன் இனிக்க இனிக்கப் பேசி அவர்களைத் தனது வலையில் சிக்க வைத்து விடுகிறாராம். பின்னர் தீவிரவாதிகளின் திட்டங்களை அறிந்து அமெரிக்க இராணுவத்திற்கு சொல்லுகின்றார்.

இதன் மூலம் தீவிரவாதிகளின் திட்டங்கள் முறியடிக்கப்பட்டுள்ளனவாம்.

## தமிழகத்தில் பெப்சி, கோக்கை தடை செய்யக் கோரி மனுதாக்கல்

தமிழகத்தில் பெப்சி மற்றும் கோக குளிர்பானங்கள் விற்பனை செய்வதற்குத் தடைவிதிக்கக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட பொதுநல வழக்கை உயர்நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றது.

வழக்கறிஞர் ராஜேந்திரன் என்பவர் தாக்கல் செய்த பொதுநல மனு நீதிபதிகள் சுபாஷின் ரெட்டி மற்றும் ஏ.கே.ராஜன் ஆகியோர் அடங்கிய அமர்விடம் விசாரணைக்கு வந்தது.

இந்த மனுவை விசாரணைக்கு ஏற்ற நீதிபதிகள் சம்பந்தப்பட்ட துறைக்கு நோட்டீஸ் அனுப்பினர். இவ்வழக்கின் விசாரணையை எதிர்வரும் 21ஆம் திகதிக்கு ஒத்திவைத்தனர்.

## பாலியல் தொழிலில் ஈடுபட்டதாக சென்னையில் தமிழ் நடிகை கைது!



சென்னை,ஓக.15

சென்னையில் பாலியல் தொழிலில் ஈடுபட்டதாக பிரபல தமிழ் நடிகை வினிதா உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டனர்.

கேரளாவைச் சேர்ந்தவர் அன்வர் பாஷா. இவர் தமிழ்நடிகை வினிதாவையும், மும்பையைச் சேர்ந்த இந்தி துணைநடிகை ஒருவரையும் வைத்து பாலியல் தொழிலில் ஈடுபட்டதாகப் பொலீஸாருக்குத் தகவல் வந்தது.

இதனையடுத்து சென்னை, அண்ணாநகரில் உள்ள ஒரு பங்களாவில் இம்மூவரும் கையும்மெய்யுமாகக் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் தவிர வினிதாவின் தாய் மற்றும் தம்பி ஆகியோரும் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

நடிகை வினிதா கட்டப்பொம்மன், சின்னஜமீன், வியட்நாம்காலனி, பெரிய தம்பி ஆகிய படங்களில் கதாநாயகியாக நடித்தவர். சமீபத்தில் திரைக்கு வந்த கும்மாளம் திரைப்படத்தில் ஒரே ஒரு பாடலுக்கு கவர்ச்சி நடனம் ஆடி இருந்தார். (ஒ)

A/L முடிந்தோறு என்றுவிட்டு நீங்களா?
PRASHANNAA COMPUTER STUDY CENTRE CSC
உங்கள் எதிர்காலத்தை நீங்களும் பிரகாசிக்கச் செய்யலாம்!
இன்றே இணையுங்கள்!!
பிரசன்னா கணனிக் கல்வி நிலையம்
K.K.S. வீதி, சுன்னாகம்
புதிய பிரிவுகள் ஆரம்பம் 18.08.2003
★Dip. in MS Office ★Dip. in Desktop Publishing
★Hardware Engineering
Infra Graphics

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளை வளர்ச்சி குன்றியோரின் நலனில் பொதுவிழிப்புணர்வு தேவை

## யு.என்.எச்.சி.ஆர். அதிகாரி தெரிவிப்பு

வலி.தெற்கு,ஓக.15

மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான பயிற்சி நிலையம் போன்ற அமைப்புக்களுக்கு தாராள மனதுடன் நாம் ஒவ்வொருவரும் உதவிக்கரம் நீட்டவேண்டும். அதேவேளை, இது குறித்து பொது விழிப்புணர்வு தேவை.

உடுவிலில் அமைந்துள்ள மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான நிலையத்தின் (ஆர்க்) புனரமைக்கப்பட்ட கட்டடத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனத்தின் யாழ். மாவட்ட முதன்மை அதிகாரி கே.முராட்டா மேற்கண்டவாறு கூறினார்.

பூர்த்திசெய்யப்படாதிருந்த குழந்தைகளுக்கான விடுதிக் கட்டடம் அண்மையில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டது.

இக்கட்டடத்தை நிறுவன அதிகாரி கே.முராட்டாவும், வலி.தெற்கு உதவிப் பிரதேச செயலர் தி.தேவராஜனும் திறந்துவைத்தனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இது போன்ற பல நிறுவனங்கள் சேவையில் ஈடுபட்டுவருகின்றன. குறைபாடு உடையவர்களாகக் கருதப்படும் குழந்தைகள் சமூகத்தில் தாமும் ஓர் அங்கத்தவர்கள் எனக் கருதி இணைந்துகொள்ளக் கூடியவாறு அவர்களை வளர்த்தெடுக்கும் பணியினை மேற்கொண்டுவரும் நிறுவனங்களுக்கு தொண்டு நிறுவனங்கள் உதவமுன்வரவேண்டும். எமது நிறுவனம் புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகளுடன் நின்றுவிடாது இது போன்ற நிலையங்களுக்கு தேவையான உதவிகளையும் செய்துவருகின்றது - என கே.முராட்டா தமது உரையில் தெரிவித்தார்.

உதவிப் பிரதேச செயலர் தி. தேவராஜன் உரை நிகழ்த்துகையில்:-

இந்த நிறுவனத்தின் பொறுப்பாளர்களுடைய அன்பும் அரவணைப்புமே இந்நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உந்துசக்தியாக உள்ளன. மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளை யாழ்ப்பாண மாவட்டத்தில் பராமரிக்கும் ஒரேயொரு நிறுவனமான 'ஆர்க்' தமது பணிகளால் அளப்பரிய சேவையாற்றி வருகிறது. இந்நிறுவனம் பிள்ளைகளின் தேவையைக் கருதி மேற்படி விடுதியை அகதிகளுக்கான ஐ. நா. நிறுவனத்தின் ஆதரவுடன் பிரதேச செயலகமும் இணைந்து அமைத்துக் கொடுத்துள்ளது - என்றார்.

இவ்விழாவில் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினார்.

25ஆவது ஆண்டு வெள்ளிவிழாக் கொண்டாட்டமும் 'ஆர்க்' நிறுவனம் இதுவரை காலத்தில் 287 மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளைப் பராமரித்து வந்துள்ளது. 5 வயது தொடக்கம் 15 வயதுவரையான இதுபோன்ற குழந்தைகள் இங்கு பராமரிக்கப்பட்டு கலை நிகழ்ச்சிகள், விளையாட்டு விழாக்கள் நடத்தப்படுகின்றன. 15 வயதின் பின்னர் தாம் பெற்ற பயிற்சிகளைக் கொண்டு இவர்கள் சுய தொழில்களில் ஈடுபடக்கூடியவாறு அடுத்தவருடம் முதல் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இதுபோன்ற நிறுவனங்களில் சேவை புரிய இளம்யுவதிகள் முன்வர வேண்டும். மனிதநேய பணிக்கு அர்ப்பணிப்புடன் செயலாற்ற இளம் பெண்கள் முன்வரவேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன் - என்றார். (எ-152)


## MATHS CENTRE

M.M.V. Road - Nelliady

**A/L - 2004 DAY CLASS**

(கலை - வர்த்தகம்)

(எமது வழமையான அசிரியர் குழு சகல பாடங்களும் நடைபெறும்)

ஆரம்பம்: 23.08.2003 சனி 7.00a.m

(C/29490) (26)


### யா/அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் பழைய மாணவர் சங்கக் கூட்டம்

பழைய மாணவ அங்கத்தவர்களை இணைத்தலும் பாடசாலை அபிவிருத்தி பற்றிய கலந்துரையாடலும்

நாளை (16.08.2003) சனிக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் அனைத்து பழைய மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

-பழைய மாணவர் சங்கம்.

(21398)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



வதிரியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தாதிகள் பயிற்சிப் பாடசாலையில் பாதுகாப்பு உத்தியோகத்தருமான

**திருமிகு மயிலு சத்தியநாதன்**

அவர்கள் யாழ். மாவட்ட நீதவான் முன்னிலையில் 13-08-2003 அன்று சமாதான நீதிவானாக பதவிப்பிரமாணம் செய்து கொண்டமையையிட்டு மன மகிழ்வுறுவதுடன், அவரது பணி மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

*அதிபர்,*
*போதனாசிரியர்கள், விடுதிப் பொறுப்பாளர்,*
*உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள்.*

தாதிகள் பயிற்சிப் பாடசாலை, யாழ்ப்பாணம். (21410)(21-19-15)


**STUDY B.Eng IN INDIA**
**ADMISSIONS 2003 - 04**
**VINAYAKA MISSIONS' GROUP OF COLLEGES**

(Approved by AICTE, New Delhi, Affiliated to Anna University- Chennai)
Paiyanoor, Chennai. TAMIL NADU
www.vinayakamissions.com

Vinayaka Missions' is the leader in the field of education for more than two decades running totally 25 Educational Institutions imparting Medical, Engineering, Management and Computer education, in addition to various other courses.

A.V.INSTITUTE OF TECHNOLOGY (A.V.I.T)
(Approved by AICTE, New Delhi, Affiliated to Anna University)

B.E Degree (4 years)
Electronics & Communication Engg. (ECE)
Mechanical Engg. (Mech.)
Electrical & Electronics Engg. (EEE)
Computer Science & Engg. (CSE)

Eligibility: Maths, Physics, & Chemistry at GCE A' Level

Contact for more details: -

NN EDUCONSULT
181/1 W A Silva Mawatha,
Colombo – 6

SPOT ADMISSIONS ON 16th & 17th August for Sri Lankan Students

Telephone:075 55 88 44
E mail:nnimpex@sltnct.lk


### பாடசாலைகள் இன்று முதல் விடுமுறை

யாழ்ப்பாணம்,ஓக.15

அரசாங்கப் பாடசாலைகள் அனைத்தும் மூன்றாம் தவணைக்காக எதிர்வரும் 25ஆம் திகதி ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு நடைபெற்று முடிந்த ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையின்போது பரீட்சை நிலையங்களாகச் செயற்பட்ட பாடசாலைகள் இரண்டாம் தவணை விடுமுறைக்காக இன்று மூடபபடவுள்ளன.

ஏனைய பாடசாலைகள் யாவும் கடந்த 8ஆம் திகதி விடுமுறைக்காக மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ஒ-10)

### விழிப்புணர்வு கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஓக.15

வெண்புறா இயக்கத்தின் அனுசரணையுடன் யாழ். நகர்மைய றோட்டறக்ட் கழகம் நடத்தும் மிதிவெடி விழிப்புணர்வு தொடர்பான கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு யாழ். கஸ்தூரியார் வீதியில் உள்ள 'உதயன்' கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.(ஒ-10)

### வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.15

தெல்லிபபழை புற்றுநோய் வைத்தியசாலைக்குச் செல்லும் வீதியைப் புனரமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்கான திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதால் அடுத்தவாரம் இவ் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-12)


### விற்பனையாளர் தேவை (பெண்)

ஊரெழு கலைமதி கல்வி நிலையத்தினரால் புன்னாலைக்கட்டுவன் தெற்கு சந்தியில் ஆரம்பிக்கப்படவுள்ள புத்தக விற்பனை நிலையத்திற்கு 2 பெண் விற்பனையாளாகள் தேவை. விண்ணப்பிப்பவர் க.பொ.த. உயர்தரம் சித்தி பெற்றிருக்க வேண்டும். 16.8.2003 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு ஊரெழு கலைமதி கல்வி நிலையத்துக்கு நேரில் வரவும்.

(21381) (25-21-12-13)


### சுவிஸ் நாட்டில் பிரம்மோற்ஸவ விழா



சுவிஸ் நாட்டின் தலைநகர் சூறிச்சில் உள்ள முருகன் ஆலய வருடாந்த பிரம்ம மஹோற்சவ விழாவை நடத்தி வைப்பதற்கு மேற்படி ஆலய நிர்வாகத்தினரின் அழைப்பை ஏற்று ஊரெழு மீனாட்சி அம்மன் ஆலயத்தைச் சேர்ந்த

**சிவஸ்ரீ கிருஸ்ணபங்குச குருக்கள்**

அவர்கள் இம்மாதம் 12ஆம் திகதி முதல் சென்று நடத்துகிறார். இவர் தென்னிந்திய பிள்ளையார்பட்டி பிச்சிக் குருக்களின் சிரேஷ்ட மாணவனும் இலங்கையின் பிரபல ஆலயங்களின் மஹோற்சவ சிவாச்சாரியாரும் பிரபல சமஸ்கிருத ஆசிரியருமாவார்.

- குடும்பத்தினர்.

(21406)(21-19-15)

### வாசுதேவலிங்கம் முத்தழகன் அவர்களின் புலம்பெயர்ந்தவர்களின் புலம்பல் கவிதை நூல் வெளியீட்டு விழா

இடம்: யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்

காலம்: 17.08.2003 ஞாயிறு காலை 9.30 மணி

தலைவர்: திருமிகு பாலசுப்பிரமணியம் தனபாலன் *(உபபீடாதிபதி கல்வியும் தரமேம்பாடு, யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி)*

**நிகழ்ச்சிகள்**

- மங்கள விளக்கேற்றல் - இறைவணக்கம்
- வரவேற்புரை: திருமிகு பொ.சிவரூபன் *(பொதுச்சுகாதார உத்தியோகத்தர்)*.
- ஆசியுரை: திருமிகு கா. நடராசா *(அதிபர், யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்)*
- வாழ்த்துரைகள்: திருமதி நாச்சியார் செல்வநாயகம் *(தலைவர், இந்துநாகரிகத்துறை - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)*
  திருமிகு வே. ஞானகாந்தன் *(அதிபர், யா/இந்து ஆரம்பப் பாடசாலை)*
- சிறப்புரை: திருமதி மா.கலாராணி *(உபஅதிபர், யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்)*
- வெளியீட்டுரை: பேராசிரியர் அ.சண்முகதாஸ் *(தலைவர், தமிழ்த்துறை - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)*
- மதிப்பீட்டுரைகள்: திருமிகு மதுரகவி .காரை.எம்.பி.அருளானந்தன் *(ஆசிரியர், யா/ஸ்ரான்லி கல்லூரி)*
  திருமிகு ச. நித்தியானந்தன் *(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)*
  பண்டிதை பொன்.பாக்கியம் *(ஓய்வுபெற்ற ஆசிரியை)*
- முதற்பிரதிபெறுநர்: திருமிகு அப்பாப்பிள்ளை வாசுதேவலிங்கம்
- சிறப்புப்பிரதி வழங்கல்
- நூலாசிரியர் கௌரவிப்பு
- பதிலுரை
- நன்றியுரை: செல்வி சோமாஸ்கந்தராசா ஹேமலதா

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஈழத்தமிழர் சைவப்பண்பாட்டுக்கழகம்,
யாழ்ப்பாணம்.

(21395)(21-26-19-15)

### 31ஆம் நாள் நினைவுகளில்

மண்ணில 1963 - 12 - 14



விண்ணில 2003 - 07 - 16

### அமரர் நடராசா பாலகிருஷ்ணன்

*மணப் பந்தலில் அமர்ந்து*
*மாதம் பத்து ஆகுமுன்பு*
*மண்ணுலகம் நீத்தாயே!*
*மனையாளும் தவித்தாளே!*
*உன்னவர்கள் உருகுகிறோம்*
*உனைப் பார்க்க எண்ணுகிறோம்*
*சுற்றமெல்லாம் சூழ்ந்து அழ*
*தலைவா நீ போனதெங்கே?*

உன் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.
சிவபுரவீதி,
வல்வெட்டித்துறை.

தகவல்:-
மனைவி பா.சித்திரகலா

(21374)(21-15-19)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஏமாற்றத்தின் வெளிப்பாடே வழிமறிப்புப் போராட்டங்கள்

இலங்கை அரசின் அமைச்சர்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் விவகாரம் இப்போது பலத்த சர்ச்சையாக உருவாகி வருகின்றது.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் அமைச்சர்களை இங்கு பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளவிடாது மக்கள் வழிமறிப்புப் போர் நடத்துவது ஒரு புறமிருக்க, இத்தகைய வழிமறிப்புப் போரைத் தூண்டினார் என ஓர் அமைச்சர்மீது மற்றோர் அமைச்சர் குற்றஞ்சுமத்துவதும் மறுபுறம் இடம்பெற்று வருகின்றது.

"எமது இயல்புவாழ்விற்கான தடைகளை அகற்றாத நிலையில் இலங்கை அரசின் அமைச்சர்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வதை நாம் அனுமதிக்கப் போவதில்லை. இத்தகைய நிலையில், இவர்களின் பயணங்கள் எம்மை ஏமாற்றும் சுற்றுலாக்கள் என்றே நாம் கருதுகின்றோம்" - என்று ஓர் அறிக்கை மூலம் சுட்டிக்காட்டியிருக்கின்றது வலிகாமம் வடக்கு இடம்பெயர்ந்தோர் சங்கங்களின் சமாஜம்.

கடந்த இரண்டு தசாப்த காலக் கொடூரப் போரினால் சொல்லொணாத் துயரத்தில் மூழ்கிக்கிடந்த தமிழ் மக்கள் சமாதானக் கோஷத்தோடு இந்த அரசு பதவிக்கு வந்தபோது அதிகந்தான் எதிர்பார்த்தார்கள். தங்களின் அவல வாழ்வுக்கு முடிவு கிட்டும் என நம்பினார்கள்; ஆனால், அது வெறும் பகல் கனவாகிக் கொண்டிருப்பதைக் கண்டு பொறுக்கமுடியாது துடிக்கிறார்கள்.

அவர்களின் ஏக்கத்தின் - ஏமாற்றத்தின் - வெளிப்பாடே அமைச்சர்களுக்கெதிரான வழிமறிப்புப் போர் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகள்.

இந்தக் கொடூர யுத்தத்தினால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள், தமது வீடு வாசல்களை இழந்து அகதிகளாக பிற இடங்களில் தஞ்சம் புகுந்திருக்கும் ஏதிலிகளே. குறிப்பாக வலிகாமம் வடக்குப் பிரதேசத்திலிருந்து - லட்சக்கணக்கில் - கூண்டோடு விரட்டியடிக்கப்பட்ட மக்களின் அவலம் சொல்லும்தரமன்று. போர் காரணமாக இடம்பெயர்ந்து பதினைந்து வருடங்களாகியும் தமது சொந்த வீடு வாசல்களுக்கு - அவை பெரும்பாலும் அழிந்துவிட்ட நிலையில் தமது வெறும் காணி பூமிகளுக்காவது - திரும்ப இயலாது அவதிப்படும் அவர்களின் மன வேதனையை ஆட்சியில் இருப்பவர்கள் புரிந்துகொள்வதாக இல்லை.

இதனால்தான், வேறுவழியின்றி தங்களின் ஆதங்கத்தை அரசுக்கு உறைப்பாக உரைப்பதற்காக வழிமறிப்புப் போர் என்ற எதிர்ப்பு ஆயுதத்தை அவர்கள் கையிலெடுத்திருக்கின்றார்கள்.

அரசுக்கும் தமிழர்களின் ஏகபிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகள் ஒரு தேக்கநிலையில் இறுகிப்போய் நிற்கின்றன.

போரினால் துவண்டுகிடக்கும் தமிழர்களுக்கு அவர்களின் அன்றாட அவசரப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் நடவடிக்கையாக இடைக்கால ஏற்பாடு செய்யப்படவேண்டும் என்று புலிகளோடு இணக்கம் கண்ட அரசு, அந்த இடைக்கால ஏற்பாட்டைக் கூடச் செய்யமுடியாத நிலையில் இழுபறிப்பட்டு நிற்கின்றது. அதுவே, இந்தத் தேக்க நிலைக்குக் காரணம்.

சமாதான முயற்சிகள் ஆரம்பமாகி ஒன்றரை வருடங்களாகின்றன. ஆனால், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்களின் அன்றாட அவலத்துக்குக்கூட தீர்வுகாணும் வழிவகைகள் காணப்படவில்லை. இந்தநிலையில் அமைச்சர்களுக்கு ஆரவார வரவேற்புக்கள், வைபவங்கள், தடல்புடல் திருவிழாக்கள் போன்றவை அவசியமா? அதுவும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு அவதியுறும் மக்கள் கூட்டமாக வாழும் யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களில் இந்தக் கேளிக்கைகள் இடம்பெறுவது நியாயமா? - இதனை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் அமைச்சர்களே சற்றுச் சிந்தித்துப் பார்ப்பது நல்லது.

இந்த மக்களின் பிரச்சினை அவசரமாக, அவசியமாகத் தீர்க்கப்பட வேண்டியதொன்று. அதனைத் தீர்ப்பதற்கு சிரத்தை எடுத்து, அதற்கு வழிகண்டு, பிரச்சினையைத் தீர்த்த பின்னர் யாழ். மக்களிடம் வருவதுதான் அமைச்சர்களுக்கும் நியாயம்; அரசுக்கும் நியாயம்

அதைவிடுத்து, யுத்த வெறிபிடித்து நிற்கும் இராணுவத்தரப்பின் இழப்புக்கெல்லாம் இழுபட்டு, தமிழர் தாயகத்தைத் தொடர்ந்து யுத்த நெருக்கடித் தீவிரத்தில் துடிக்க வைத்துக்கொண்டு, அங்கு ஆரவார 'விசிட்' அடிப்பது பொருத்தமற்றது. அதனை உணர்த்துவதற்கு மக்களுக்குள்ள ஒரே வழி, வழிமறிப்புப் போர்தான். அஹிம்சை மார்க்கத்தில் அவர்கள் வெளிப்படுத்தும் கருத்தைப் புரிந்துகொள்வது அமைச்சுப் பதவி வகிக்கும் அரசியல்வாதிகளின் பொறுப்பு.

# உயிர்களுக்குப் பாதிப்பு ஏற்படாமல் வீதிகளைப் பயன்படுத்துவோம்

## தமிழீழ சுகாதார சேவைகள் அறைகூவல்

யாழ்ப்பாணம்,ஓக.15

உயிர்களுக்குப் பாதிப்பு ஏற்படாதவாறு வீதிகளைப் பயன்படுத்துவோம்.

- இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது தமிழீழ சுகாதார சேவைகள் பணிமனை.

இதுகுறித்து மேற்படி பணிமனை விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தற்பொழுது முழு இலங்கையிலும் விபத்துக்களால் ஏற்படும் மரணங்களின் தொகை அதிகரித்து வருகின்றது. சமாதான சூழ்நிலைக்குப் பின்னர் வடக்கு - கிழக்குப் பகுதிகளிலும் விபத்துக்களால் ஏற்படும் இறப்புக்கள் அதிகரித்து வருகின்றன. இவ்விபத்தானது மனித இறப்பிற்கான முதல் மூன்று காரணிகளில் ஒன்றாக விளங்கு...தால் இவ்விடயத்திலும் வருமுன்காப்பு அறிவுரைகளை வழங்கவேண்டியது அவசியமாகும்.

விபத்துக்கள் பல இடங்களிலும் பலகாரணங்களினால் நிகழ்கின்றபோதும், முக்கியமாக தற்பொழுது அதிகரித்துவரும் இறப்புக்கள், பாதை, வீடு, உயரம், தொழிற்சாலை, விளையாட்டு மைதானம் ஆகிய இடங்களில் இடம்பெறுகின்றன. இவற்றில் முக்கிமாக கவனத்திற்கொள்ள வேண்டியது பாதை விபத்துக்கள். இவை பாதசாரி மற்றும் சாரதிகளாலும் பாதைகளிலுள்ள பிழைகளாலும், வாகனத்திலுள்ள பிழைகளாலும் ஏற்படலாம்.

★ பாதசாரிகளும், சாரதிகளும் போக்குவரத்து வீதிகளைப் பாவிக்கும் முறை:- வீதி ஒழுங்குகளை பேணுபவர்களால் விடுக்கப்படும் வீதி ஒழுங்கு தொடர்பான அறிவித்தல்களுக்கு முரணாகச் செயற்படுதல்.

★ வீதிப்போக்குவரத்தில் ஏற்படும் அவசரம்:- அவசரம் ஒரு பெரிய எதிரி. வாகனம் செலுத்துபவர்கள் திட்டமிடல் இன்றி அவசரமாக வாகனத்தை ஓட்டுதல். பாடசாலை, நகரப் பகுதி, சந்தை, பஸ் நிலையம், வாகனத் தொடரணி கூடிய இடங்களில், மக்கள் கூடிய இடங்களில் வேகமாக வாகனங்களைச் செலுத்துதல், வாகனம் செலுத்துவதற்கு முன்னர் 'பிறேக்' போன்ற வாகனத் தடை உறுப்புக்களை சரி பார்க்காமை போன்றவை. பொறுமையின்றி மற்றவரின் உரிமையை மதிக்காமல் வாகனம் செலுத்துதல்:- எதிர்வரும் வாகனத்திற்கு அரைவாசிப்பாதை கொடுக்காமை, வீதிச்சமிக்ஞை காட்டாமல் (Signal) வாகனத்தை நினைத்த வகையில் செலுத்துதல், திரும்புதல் போன்ற செயற்பாடுகள்.

★ வேகமாகச் செலுத்துவதை, வேகம் குறைக்க வேண்டிய இடத்தில் குறைக்காமல் செலுத்துவது:- உரியநேரகாலத்தில் வாகனத்திற்கான வீதிச் சமிக்ஞை (Signal) காட்டாமல் வாகனத்தைச் செலுத்துதல்.

★ மதுபானங்களைப் பாவித்து வாகனங்களைச் செலுத்துவது:- மதுபானம் பாவித்தபின்னர் வாகனம் செலுத்தமுடியும் என நம்புவது மூடத்தனம். குடித்தபின் ஒருவரின் கவனமோ, பொறுமையோ உடன் நடவடிக்கை எடுக்கும் நேரமோ பாதிக்கப்படுகின்றது.

★ களைப்பு, நித்திரை இல்லாமை, நோய்க்காரணங்கள் கண்பார்வை பாதிக்கப்பட்டிருந்தால் வாகனம் செலுத்துதல், களைப்பு, நித்திரைத் தூக்கம் என்பனவற்றுடன் வாகனத்தைச் செலுத்துதல்.

★ துவிச்சக்கர வண்டி செலுத்துபவர்கள் வீதி ஒழுங்கு விதிகளை மதிக்காமல் துவிச்சக்கர வண்டி செலுத்துதல்:- வேகமாகத் துவிச்சக்கர வண்டி செலுத்துதல், வெளிச்சமின்றி துவிச்சக்கரவண்டி செலுத்துதல், பிறேக் இல்லாமல் செலுத்துதல், பாதை ஒழுங்குகள், அடையாளங்கள் மீறுதல், பாதசாரிகள் வீதி ஒழுங்குடன் வீதிகளைப் பயன்படுத்தாமை, வீதியைக் கடக்கவேண்டிய இடங்கள், வாகனத்திற்கு பின்னோ, முன்னோ வேகமாக வீதியைக் கடத்தல் நிறுத்திய வாகனங்களில் அவசரமாக ஏறுதல், இறங்குதல் போன்றவற்றால் வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன.

★ துவிச்சக்கர வண்டி செலுத்துபவர்களுக்கு இடையூறு இன்றி வாகனங்களை ஒளிக்குறைப்புச் செய்து செலுத்துதல் வேண்டும். அத்துடன், துவிச்சக்கரவண்டி செலுத்துபவர்கள் இரண்டு, மூன்று பேர் இணைந்து செலுத்துவதால் வீதி விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புள்ளன.

மேற்படி காரணங்களினாலும், வீதிகளில் கணிசமானளவு வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. இதனால், இறப்பு வீதம் அதிகரித்து வருகின்றது. அத்துடன், மருத்துவச் செலவு என பல்வகையான பாதிப்புக்களை ஏற்படுத்துவதுடன், இறப்புக்கான காரணங்களில் இவ்விபத்துக்கள் முக்கிய காரணத்தை வகிக்கின்றன. சமூக பின்னடைவுகளைக் கொடுப்பதுடன் பெறுமதிமிக்க உயிரைக் கொல்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துகின்றோம். உயிர்களுக்கு எப்பாதிப்பும் ஏற்படாமலே வீதிகளைப் பாவிக்கவேண்டும் என்பதில் சிரத்தையுடன் இருக்க வேண்டும் - என்று அதில் உள்ளது. (எ)

## மீளக்குடியமர்வோருக்கான கொட்டகை அமைப்பதில் ஊழல்

### சமாசத் தலைவர் குற்றச்சாட்டு

வலி.வடக்கு,ஓக.15

மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் உதவியும், அமைத்துத் தரப்படும் தற்காலிக கொட்டகைக்கு அக்குடும்பங்களிடம் மேலதிகப் பணம் கோரப்பட்டுள்ளதாக வலி.வடக்கு இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசத் தலைவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் கூறியதாவது:-

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட பின்னர் வன்னியிலிருந்து மீளக்குடியமர வந்த குடும்பங்களுக்கு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் தலா 15 ஆயிரம் ரூபா செலவில் தற்காலிகக் கொட்டகைகளை அமைத்து வழங்கிவருகிறது.

வன்னியிலிருந்து இரண்டு மாதங்களுக்கு முன்னர் திரும்பி வந்து அளவெட்டி தெற்கு, குருவளை முகாமில் தங்கியுள்ள ஆறு குடும்பங்களுக்கு மேற்படி திட்டத்தின்கீழ் தற்காலிக கொட்டகைகளை அமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன்படி அப்பகுதியைச் சேர்ந்த பொது அமைப்பு ஒன்றிடம் தற்காலிக கொட்டகை அமைக்கும் பொறுப்பு பிரதேச செயலகத்தால் கையளிக்கப்பட்டது. இக்கொட்டகைகளை அமைப்பதற்கான செலவை அகதிகளுக்கான ஐ.நா. தூதரகமே பொறுப்பேற்கும்.

ஆனாலும், குறிப்பிட்ட வேலையை ஒப்பந்த அடிப்படையில் பெற்ற பொது அமைப்பு சம்பந்தப்பட்ட ஆறு குடும்பங்களிடமும் மேலதிக பணம் கேட்டு கொட்டகை போடாது இழுத்தடித்து வருகின்றது. இதனால், வன்னியால் வந்த அந்த 6 குடும்பங்களும் நிலையான இருப்பிட வசதியற்று சிரமப்படுகின்றன - இவ்வாறு சமாசத் தலைவர் தெரிவித்தார். (ஒ-86)

## பாணாவெட்டியில் மிதிவெடி அபாயம் இம்முறையும் பெரும்போகம் இல்லை

### விவசாயிகள் தரப்பில் கவலை தெரிவிப்பு

சண்டிலிப்பாய்,ஓக.15

மாதகல், பாணாவெட்டி குளத்தின் சுற்றாடலில் உள்ள சுமார் 750 பரப்பு விஸ்தீரணமுடைய வயல் காணிகளில் மிதிவெடி அபாயம் காரணமாக இம்முறையும் விவசாயிகள் தமது காணிகளில் காலபோக நெற்செய்கையை மேற்கொள்ள முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இங்குள்ள மிதிவெடிகளை அகற்றித்தருமாறு மாதகல் விவசாயிகள் சம்மேளனம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மீண்டும் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளதாகவும் - கூறப்பட்டது.

இதேவேளை -

பெரியவிளான் - மாதகல் ஆகிய இடங்களுக்கிடையில் கடந்த 1992 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட மண் அணையின் சுற்றாடலில் மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. இதனால், அப்பகுதிகளில் உள்ள காணிகளில் நெற்செய்கையை மேற்கொள்ளமுடியாத நிலையில் விவசாயிகள் இருந்து வருகின்றனர்.

இப்பகுதியில் மேய்ச்சலுக்காகச் சென்ற மாடுகள் சில மிதிவெடியில் சிக்கிப் படுகாயமடைந்தும் இறந்தும் போயுள்ளமை தெரிந்ததே.

தற்போது யாழ். மாவட்டத்தில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் தமது பகுதியிலும் மிதிவெடிகளை அகற்றி உதவுவதற்கு முன்வரவேண்டும் என்றும் - சம்பந்தப்பட்ட விவசாயிகள் கருத்துத் தெரிவித்தனர். (எ-135)

**நாளை**

ஆடி 31
சனிக்கிழமை
(16.08.2003)
திதி : சதுர்த்தி
நண்பகல் 12.02 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி
நண்பகல் 12.00 வரை
சுபநேரம்: 3.05 - 4.35
ராகுகாலம்: 9.05 - 10.35
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

இல்லாதவனுக்கு உணவளித்தால் நீங்கள் வலிமை பெற்றுவிடுவீர்கள்.

## தொல்பொருள்களைப் பேண அக்கராயனில் கலைச்சாலை

வவுனியா,ஓக.15

கிளிநொச்சி மாவட்டம் அக்கராயனில் தொல்லியல் சான்றுகளைப் பேணிக் காட்சிப்படுத்தும் கலைச்சாலை ஒன்று நிறுவப்படவுள்ளது.

அக்கராயன் குளத்தின் வலதுகரையில் உள்ள பிரதான வீதியிலேயே இந்தக் கலைச்சாலை நிறுவப்படவுள்ளது.

இப்பகுதியில் இற்றைக்கு 2 ஆயிரத்து 700 ஆண்டுகள் பழைமைவாய்ந்த பாரிய ஈமச்சின்னக் கட்டுமானம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அக்கராயனில் பெருங்கற்காலத்திற்குரிய பல தொல்பொருள் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

எனவே, இப்பகுதியிலிருந்து பெறப்பட்ட அத்தகைய புராதனக் கலைப்பொருள்களைப் பாதுகாக்கும் நோக்குடனும் பிறதேசத்தவர்களுக்கும் ஈழத் தமிழினத்தின் தொன்மை பற்றி எடுத்துக்காட்டும் வகையிலும் இக்கலைச்சாலை நிறுவப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-12)

### வலி.மேற்கு, தென்மேற்கு பகுதிகளில்

## காலபோகத்துக்கு முன்னோடியாக நிலத்தைப் பண்படுத்தும் விவசாயிகள்

சண்டிலிப்பாய்,ஓக.15

வலி.தென்மேற்கு மற்றும் வலி.மேற்கு பகுதிகளில் இவ்வாரம் பெய்துள்ள பெருமழையையடுத்து விவசாயிகள் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளும் பொருட்டு தங்கள் வயல் காணிகளை உழுது பண்படுத்தி வருகின்றனர்.

இதேவேளை - கடந்த காலபோல நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளில் பலர் இம்முறை விதைப்பதற்காக விதை நெல்லைச் சேமித்து தயார் நிலையில் வைத்துள்ளனர்.

தாழ்ந்த - வெள்ளம் நிற்கக் கூடிய நெறகாணிகளில் விதைப்பவர்கள் ஐந்தரை மாதகால விளைச்சலையுடைய பாரம்பரிய நெல் இனங்களை விதைப்பதில் ஆர்வங்காட்டி வருகின்றனர்.

மேட்டுக் காணிகளில் விதைப்பவர்கள் மூன்று மாத கால விளைச்சலையுள்ள விதை நெல் இனங்களைப் பெற்று விதைப்பதையே விரும்புகின்றனர்.

வன்னிப் பிரதேசத்திலிருந்தும் விதை நெல்லைக் கொள்வனவு செய்து இங்கு விதைப்பில் ஈடுபடுவதற்கும் விவசாயிகளில் சிலர் முயற்சி செய்துவருவதையும் அவதானிக்கமுடிகின்றது.

இதேவேளை - கடந்த வருடங்களைப் போல இவ்வருடமும் யாழ். கமநல சேவைகள் திணைக்களம் தென்னிலங்கையிலிருந்து நல்ல தரமான விதை நெல்லை இங்கு எடுத்து வந்து யாழ். மாவட்டத்திலுள்ள கமநல கேந்திர நிலையங்கள் ஊடாக விநியோகம் செய்யுமா? என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறு கமநல சேவை திணைக்களம் விதை நெல்லை விநியோகம் செய்யும் பட்சத்தில் நியாயமான விலையில் விவசாயிகள் தட்டுப்பாடு இன்றி பெற்றுக்கொள்ளமுடியும் என்ற கருத்தும் விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ-135)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்புவலயம் பேணப்படுவதற்கான நியாயமான காரணம் எதுவும் கிடையாது

**யாழ். குடாநாட்டில் அதி உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் படும் இன்னல்களை நேரில் கண்டறிந்து கட்டுரை வடிவில் தருகிறார் "ராவய" பத்திரிகையின் செய்தியாளர் உவிந்து கருணதிலக. அதன் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

"மாங்கிளியும் மரங்கொத்தியும்
கூடு திரும்பத்தடையில்லை.
நாங்கள் மட்டும் உலகத்திலை
நாடு திரும்ப முடியல்லே."

இராணுவக்குண்டு வீச்சின் காரணமாக தன் இரு கண்களின் பார்வையையும் இழந்த நிலையில், சுன்னாகம் பகுதியிலுள்ள இடம்பெயர்ந்தோர் முகாமொன்றில் வசிக்கும் சிறுவனான ஜெகதீஸ்வரன் எமக்குப் பாடிக்காட்டிய தமிழ்ப் பாடலின் ஆரம்ப வரிகள் இவை.

சமாதானப்பேச்சு தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதற்கு முக்கிய காரணங்களாக இரு விடயங்கள் அமைந்தன. முதலாவது காரணம், இடைக்கால நிர்வாகம் தொடர்பான விடுதலைப் புலிகள் அமைப்பின் கோரிக்கை ஆகும். இராணுவத்தின் அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் மீண்டும் பொதுமக்களைக் குடியமர அனுமதிக்கவேண்டுமென்ற கோரிக்கை இரண்டாவதாகும். தற்போது மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு ஏதுவான வகையில், இடைக்கால நிர்வாகம் தொடர்பான அரசின் ஆலோசனைகள் விடுதலைப் புலிகள் அமைப்பிடம் கையளிக்கப்பட்டுள்ளது ஆனால், அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான சிக்கலுக்குத் தெளிவான தீர்வொன்றினை முன்வைப்பதில் சகல தரப்பினரும் தோல்வி கண்டுள்ளனர்.

இடம்பெயர்ந்த பொதுமக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்வதற்குக் காட்டும்




ஆர்வமும், அதேசமயம் அவர்களது வாழ்விடங்கள் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமையுமே இந்த அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான பிரச்சினை இந்த அளவுக்குத் தீவிரமடைந்ததற்குக் காரணமாகும்.

அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காணும் விதத்தில் இராணுவ ஜெனரல் சரத் பொன்சேகாவினது ஆலோசனைகள் மற்றும் ஓய்வுபெற்ற இந்திய இராணுவ அதிகாரி ஜெனரல் சதீஸ் நம்பியாரின் ஆலோசனைகள் என இது வரையில் இரு அறிக்கைகள் முன்வைக்கப்பட்டிருப்பினும், யுத்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட அந்த ஆலோசனைகளை விடுதலைப் புலிகள் அமைப்பு ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டது.

அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்திலிருந்து இராணுவத்தினரை விலக்கிக்கொள்ள வேண்டுமானால் விடுதலைப் புலிகள் அமைப்பு தம் வசமுள்ள ஆயுதங்களைக் கைவிட வேண்டுமென்ற ஜெனரல் சரத் பொன்சேகாவினது தீர்வுயோசனையானது சமாதானம் தொடர்பான கருத்தாக அமையாது. அது களநிலைத் தகவல்களின் அடிப்படையில் வெளியிடப்பட்ட கருத்தெனக் கருதமுடியும். அதேபோன்று, அதியுயர் பாதுகாப்பு வலயங்களைக் கைவிட்டால் அது தென்பகுதிப் பொது மக்களிடையே அதிருப்தியைத் தோற்றுவிப்பது மட்டுமன்றி, அவர்களிடையே எதிர் உணர்வு உருவாகவும் காரணமாய் அமையுமென்பதே ஜெனரல் சரத் பொன்சேகாவின் கருத்தாகும். ஆயினும், இது ஓர் அரசியல் விடயமேயன்றி இராணுவ விடயமல்ல. அதியுயர் பாதுகாப்பு வலயத்தை நீக்குவதன் மூலம் பாதுகாப்புச் சமநிலையைப் பேண இயலாதென்ற ஜெனரல சதீஷ் நம்பியாரின் கருத்துப்போன்றே, அவரது ஆலோசனைகளும் யுத்தம் தொடர்பான கோணத்திலிருந்து நோக்கப்பட்ட தீர்வு ஆலோசனைகளாகும்.

யாழ்ப்பாண அரச அதிபரின் கணிப்பீட்டின்படி, யாழ். குடாநாட்டில் மட்டும் மக்கள் தொகையின் நூற்றுக்கு 13.5 வீதமானோர் தற்போதும் அகதி வாழ்க்கையையே மேற்கொண்டுள்ளனர். இந்த வகையில் 21ஆயிரத்து 483 குடும்பங்களைச் சேர்ந்த 80 ஆயிரத்து 408 பொதுமக்கள் அகதி வாழ்வு வாழ்ந்து வருகின்றனர். இவ்வித குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 169 குடும்பத்தினர் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருவதோடு, மீதியான 19ஆயிரத்து 319 குடும்பங்களைச் சேர்ந்த பொது மக்கள் நலன்புரி நிலையங்களுக்கு வெளியே வாழ்ந்து வருகின்றனர். ஆனால், விடுதலைப் புலிகள் அமைப்பின் மதிப்பீட்டு அறிக்கையின்படி யாழ். மாவட்டத்தின் அதியுயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் அடங்கும் 145 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பைக்கொண்ட பிரதேசத்துள் 30 ஆயிரத்து 388 குடும்பங்களைச் சேர்ந்த பொதுமக்கள் முன்னர் வாழ்ந்து வந்தனர். தற்போது 286 குடும்பங்களைச் சேர்ந்த பொதுமக்கள் மட்டுமே அப்பாதுகாப்பு வலயப் பிரதேசத்துள் வாழ்ந்து வருகின்றனர். இந்த அதியுயர் பாதுகாப்பு வலயம் பேணப்படுவதன் காரணமாக 24 ஆயிரத்து 178 குடும்பங்களைச் சேர்ந்த பொது மக்கள் அகதிகளாக ஆகியுள்ளனர்.

நாட்டினுள் இடம்பெயர்ந்து வாழும பொதுமக்களை முக்கிய இரு பிரிவுகளாகக் கொள்ளமுடியும். இவர்களில் பாதுகாப்புப் படையினர் மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பு ஆகிய தரப்பினரால் தத்தம் பாதுகாப்புக் கருதி சொந்த வாழ்விடங்களிலிருந்து விரட்டப்பட்ட பொதுமக்கள் முதலாவது பிரிவினுள் அடங்குவர். மறு பிரிவினர் யுத்தம் தொடர்பான அச்சம் காரணமாக தமது வாழ்விடங்களைக் கைவிட்டு வெளியேறிச் சென்ற பிரிவினராவர். யாழ். மாவட்டத்தில் தற்போது அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களில் வாழ்ந்த போது பாதுகாப்புக் காரணமாக இராணுவத்தினரால் வெளியேற்றப்பட்ட பொதுமக்களும், யாழ். மாவட்டத்திலிருந்து பாதுகாப்புக் காரணமாக விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம் பொதுமக்களும் இம் முதற் பிரிவினுள் அடங்குவர்.

இந்த அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தினுள் பயணம் செய்யும் ஒருவரால் இப்பிரதேசத்தின தற்போதைய யதார்த்த நிலையை உணர்ந்துகொள்ளக் கூடியதாயிருக்கும். தெல்லிப்பழை, கீரிமலை, பலாலி மற்றும் காங்கேசன்துறை ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய இந்த அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் பயணிக்கக்கூடிய சந்தர்ப்பமொன்று அண்மையில் எனக்குக் கிட்டியது.

மாற்றுக் கொள்கைக்கான நிலையத்தால் ஒழுங்கு செய்யப்பட்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வேலைப் பட்டறையில் பங்கேற்கச் சென்றதன மூலம் இவ்வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்த அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தினுள் பயணம் மேற்கொள்ளும் ஒருவர் அழிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பொதுமக்களின் சொத்துக்கள் மற்றும் விவசாய நிலங்களைக் காண நேர்வதால் கவலையுணர்வடைய நேர்கிறது. உண்மையில் இந்த அதியுயர் பாதுகாப்பு வலயம் தற்போதைய நிலையில் பேணப்படுவதற்கான நியாயப்படுத்தக் கூடிய காரணம் எதுவும் கிடையாது. தெளிவான விதத்தில் இதனைக் குறுக்கி மீளமைத்துக்கொள்ள இயலும். நாம் சந்தித்த விடுதலைப் புலிகள் அமைப்பின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் மக்கள் மீண்டும் குடியமர்த்தப்பட வேண்டும் என்ற தமது கோரிக்கைகள மூலம் பாதுகாப்புப் படையினர் மீது நெருக்குதல் கொடுப்பதற்கோ அல்லது பாதுகாப்புப் படையினரிடையே கருத்து வேறுபாடுகளை உருவாக்குவதற்கோ தமது அமைப்பு எந்த விதத்திலும் முயற்சிக்கவில்லையெனவும், அதேசமயம், அதியுயர் பாதுகாப்பு வலயத்தை முற்றுமுழுதாக அகற்றிவிட வேண்டுமெனத் தாம் கோரவில்லையெனவும் தெளிவுபட விளக்கினார்.


XX - உயர் பாதுகாப்பு வலயங்கள்.

நாட்டின் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைபேணல் ஆகிய விடயங்களிடையே தெளிவான ஒற்றுமை காணப்படுகிறது. உண்மையில் நாட்டின் பொதுமக்களின் பாதுகாப்பைப் பேணி, உறுதிப்படுத்துவதல் அரசு தோல்வி கண்டுள்ளது. அரச பாதுகாப்பு என்ற பெயரில் தாம் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்த தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்வதற்கு பொதுமக்களுக்குரிய அடிப்படை உரிமையை மறுப்பதற்கான உரிமை எந்த அரசுக்கும் இருக்க முடியாது.

அதி உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான மேலுமொரு கவலை தரும் அனுபவம் பற்றியும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். அது நாம் கீரிமலை வரை பிரயாணம் செய்த வேளையில் ஏற்பட்ட அனுபவமாகும். நாம் பிரயாணம் செய்த வழியில் விளையாட்டு மைதானமொன்றைச் சுற்றி அமர்த்தி வைக்கப்பட்டிருந்த மனித உருவிலான பொம்மைகளைக் கண்ணுற நேர்ந்தது. அந்தப் பொம்மைகளில் சில கதிரைகளில் அமர்ந்து மதுபானம் அருந்திக்கொண்டிருக்கும் தோரணையிலும் அதேவேளை வேறுசில வெவ்வேறு மூலைகளிலிருந்து விளையாட்டு மைதானத்தை நோக்கிப் பார்வையைச் செலுத்தியவாறு இருப்பது போலவும் அவை ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன. அவற்றில் மூன்று பொம்மைகள் வீடியோ புகைப்படக்கருவி மூலம் மைதானத்தைப் படம் எடுத்துக் கொண்டிருக்கும் தோரணையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன. ஆனால், மைதானத்துள் எந்த விளையாட்டு வீரரும் காணப்படாததால் அக்காட்சி எமக்குப் பெரும் புதிராகத் தோன்றியது.

அதே வழியாக நாம் திரும்பிக் கொண்டிருந்தவேளை பாதுகாப்புப் படையைச் சேர்ந்த வீரர்கள் அம் மைதானத்தில் 'கிரிக்கெட்' விளையாட்டில் ஈடுபட்டிருந்தனர். அவர்களில் ஒருவர் [illegible] பில் ஈடுபடுவதான பாவனையில் நிலை நிறுத்தப்பட்டிருந்த பொம்மையைச் சரிப்படுத்திக் கொண்டிருந்தார். அந்த வேளையிலேயே எமக்கு அத் தோற்றத்தின் உண்மை வெளிப்பாடு புலப்பட்டது. மனித நடமாட்டத்தையே காணமுடியாத அவ்விசாலமான அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் தமது கிரிக்கெட் விளையாட்டை கண்டுகளிக்கப் பொதுமக்களும் கூடியிருக்கின்றனர் என்ற தோற்ற வெளிப்பாட்டைக் காட்டிக்கொள்வதற்காகவே அவ்விதம் மனித உருவிலான பொம்மைகளை நிறுத்தி வைத்திருந்ததை எம்மால் புரிந்துகொள்ள முடிந்தது.

உண்மையில் இந்த அதியுயர் பாதுகாப்பு வலயத்தை குறுக்க முடியும் என்று முன்னாள் விமானப்படைத் தளபதி எயர் வைஸ் மார்ஷல் ஹரி குணதிலக, வடபகுதிக்குச் சென்று நிலைமையை அவதானித்த பின்னர் தனது கருத்தை வெளியிட்டிருந்தார்.

'எனது சகல தனிப்பட்ட அவதானிப்பின்படி அதியுயர் பாது காப்பு வலயத்தை மேலும் சுருககிக கொள்ள வாய்ப்புக்கள் உள்ளன. தெல்லிப்பழை தொடக்கம் பலாலி வரை இந்த அதியுயர் பாதுகாப்பு வலயம் 32 கிலோமீற்றர் தூரத்தை உள்ளடக்கியுள்ளது. அதனைக் குறுக்கி அமைத்துக்கொள்வதால் பாரதூரமான பாதுகாப்பு அச்சுறுத்தல் எதுவும் உருவாக வாய்ப்பில்லை என்பது எனது கருத்தாகும்' என அவர் தெரிவித்த கருத்து இவ்வாண்டு ஜனவரி மாதம் 5ஆம் திகதி வெளியான 'லங்காதீப' பத்திரிகையில் பிரசுரமாகியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவை நான் போட்டிகண்ட வேளையில், அதியுயர் பாதுகாப்பு வலயம் குறுக்கிக் கொள்ளப்படாமல் தற்போது பேணப்படும் வகையிலேயே பேணப்படவேண்டுமெனத் தாம் கருதவில்லை எனத் தெரிவித்துள்ளார். அவர் கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் இவ்வித கருத்தை வெளியிட்

## வியெஸ்ரி

டிருந்த போதிலும், இன்றுவரை இப்பிரச்சினைக்குத் தெளிவான விதத்தில் தீர்வொன்றினைக் காண முடியாத நிலையே நிலவுகின்றது.

சம்பிரதாய யுத்த கண்ணோடு நோக்காமல், அதியுயர் பாதுகாப்பு வலயத்தை சர்வதேச கண்காணிப்பாளர்களின் கண்காணிப்புக்கு நிரந்தரமாக உட்படுத்தி சமாதான வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட முடியாதா? பாதுகாப்புப் படையினர் மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பினர் இச்சமாதான வலயத்தினுள் ஆயுதங்களை எடுத்துச்செல்ல முடியாதவாறானதொரு நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்க முடியாதா?

எவ்வாறான போதும் பாதுகாப்புப படையினரால் இந்த அதியுயர் பாதுகாப்பு வலயம் கைவிடப்பட்டு அப்பிரதேசம் சமாதான வலயமாகப் பிரகடனப்படுத்தபட்டாலுங்கூட உடனடியாக அப்பிரதேசத்தில் மீளக்குடியமரக்கூடிய வாய்ப்பு அப்பகுதி மக்களுக்கு கிடைக்குமா என்பன போன்ற கேள்விகள் யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் பிரயாணம் செய்த வேளையில் எனது மனதில் எழுந்தன.

இவ்வாறான பிரச்சினை எழுவதற்கான ஒரேகாரணம், 1990ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் அமைப்பினால் யாழ். குடாநாட்டிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பானதாகும். இப்பிரச்சினை இந்த அதி உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான பிரச்சினைக்கு அப்பாற்பட்டதாகும். வடபகுதியிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களது அமைப்பின் தலைவரான எஸ்.ஏ.சீ.மூபீன் தெரிவிக்கும் தகவல்களின்படி சோனகதெரு, ஹிஜ்ரா, ஹுசேனியா மற்றும் பள்ளிவாசல் வீதி ஆகிய பகுதிகளில் 6 ஆயிரம் முஸ்லிம் குடும்பங்கள் வாழ்ந்துவந்துள்ளன. அவர்கள் இடம்பெயர்ந்து இன்று 13 ஆண்டுகள் கழிந்துவிட்ட நிலையில், அக் குடும்பங்களின் எண்ணிக்கைகளில் மேலும அதிகரிப்புக் காணப்பட இடமுண்டு. அவர்களது ஆறாயிரம் வீடுகளிலும் 176 வீடுகளில் தற்போது தமிழ் மக்கள் குடியேறி வாழ்ந்து வருகின்றனர். அவர்களில் பெரும்பாலானோரின் சொந்த வீடுகள் அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தினுள் அகப்பட்டுள்ளமையினாலேயே அவர்கள் இம் முஸ்லிம் மக்களது வீடுகளில் குடியேறி வாழ நேர்ந்துள்ளது. விடுதலைப் புலிகள் அமைப்பின் இணககத்துடன் அத்தமிழ்க் குடும்பங்களை முஸ்லிம் மக்களது வீடுகளிலிருந்து வெளியேற்ற முடிந்தாலும் அம் முஸ்லிம் மக்கள் மீண்டும் தமது வீடுகளில் குடியேறி வாழ்வதாயின் அவர்களது வீடுகளைப் புனரமைக்க நிதியுதவி வழங்கப்படுவது அவசியமாகும். ஆனால், அரசு இதுவரையில அவ்விடயம் தொடர்பாக எதுவித அக்கறையும் செலுத்தவில்லை. அவர்கள் தமது வாழ்க்கையை மீண்டும் ஆரம்பிப்பதாயின் அவர்கள் ஏதாவது தொழில் தேடிக்கொள்ள வேண்டிய அவசியம் உருவாகியுள்ளது. அவ்விதமே முஸ்லிம் மக்களது பிள்ளைகள் தமது படிப்பைத் தொடருவதற்காக அவர்களுக்கென முஸ்லிம் பாடசாலை எதுவும் தற்போது இல்லை. பொது மக்கள் மீளக் குடியமரும் விடயத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினைக்கு மேலாக மற்றொரு வகையான சிக்கலும் உள்ளதென்பது இதிலிருந்து புலனாகிறது.

இரண்டாவதாக அதியுயர் பாதுகாப்பு வலயத்தைக் குறுக்கிக் கொள்வதன் மூலம் இராணுவத்தினர் விட்டு வெளியேறிய நிலப்பகுதியைப் பொதுமக்களின் பாவனைக்கு அனுமதிப்பதாயினும், புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணிகள் அகற்றப்படா விட்டால் அதனால் எவ்வித பிரயோசனமும் கிடைக்கப்போவதில்லை. உதாரணமாக தனங்களப்பிலுள்ள 3 ஆயிரம் ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட நிலப்பரப்பில் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட போதிலும் இதுவரையில் பொதுமக்களில் எவரும் அப்பகுதியில் மீளக் குடியமரவில்லை. இந்த நிலைமையைச் சாதகமாக்கி தென்பகுதி ஊடகங்களும் இராணுவத்தரப்பும் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் மீளக் குடியமர ஆர்வம காட்டவில்லை எனவும் இதுவும் இராணுவத்தை விலகச்செய்யும் நோக்கத்துடன் செயற்படும் விடுதலைப் புலிகள் அமைப்பின் ஓர் உத்தியாக இருக்கலாமெனத் தோன்றுவதாகவும் பிரசாரம் செய்கின்றன. உண்மையில் இவ்வாறான அறிக்கைகளை இனவாத அடிப்படையில் வெளியிடப்படும் அறிக்கைகளாகக் கருத முடியுமேயன்றி வேறெவ் விதத்திலும் நியாயப்படுத்த முடியாது. இவ்வாறான அறிக்கைகளை வெளியிடுவோர் குறிப்பிட்ட பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணிகள் அகற்றப்படாமை காரணமாகவே பொது மக்கள் அப்பகுதிகளில் மீளக்குடியமர முடியாதுள்ளது என்ற உண்மையை ஏனோ மறைத்துவிடுகின்றனர்.

புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணிகளை அகற்றுவது இலேசானதொரு நடவடிக்கையல்ல. பெருந்தொகை நிதியை ஒதுக்கீடு செய்து, நெல் மணிகளைப் பொறுக்கியெடுப்பது போன்ற விதத்தில் மிக மெதுவான வேகத்தில் ஓர் ஒழுங்கு முறைக்கமைய மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடு இது. இந் நடவடிக்கைக்குத் தேவையான நிதியைப் பெற்றுக்

(8ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய வாழ்வு வாழ்தலே முத்திபேற்றுக்கு ஒரே வழி

மனிதன் எதிர்பார்த்ததற்கு மேலாகவே விஞ்ஞானம் வளர்ந்துவிட்டது. ஆனால், இன்றுவரை மனிதப் பண்பாடு இனனும் வளரவில்லை; கடவுள் வழிபாடு வளரவில்லை; நீதி வளரவில்லை; நியாயம் வளரவில்லை; மக்களிடம் அன்பு வளரவில்லை இதுதான் கலியுக தர்மம் என்று பலர் கூறுகிறார்கள்.

அதற்குக் காரணம் மக்களிடையே ஆத்மீக சிந்தனை உணர்வு இன்னும் வளரவில்லை என்பதே காரணமாகும். நன்றாகப் படித்தவர்களாக இருந்தும் அறிவுக்கெல்லாம் அறிவாக இருக்கின்ற பகவானுக்கு உள்ளன்போடு வணக்கம் செலுத்த மறுக்கின்றவர்களும் நம் மத்தியில் இன்னும் அநேகர் இருக்கின்றார்களே! அவர்கள் படித்த படிப்பினால் என்ன பயன் இருக்கின்றது.

நாம் கல்வி கற்பது அறிவுக்காகவே. நாம் எவ்வளவு கல்வி கற்றாலும் அதிலிருந்து அறிந்து கொண்ட

சமூகமணி
சி.சி.வரதராசா

அறிவுக்குமேல் இன்னும் அறியவேண்டிய அறிவு இருந்து கொண்டே இருக்கிறது. மனித வாழ்க்கையின் குறிக்கோள் ஒன்று உண்டு. அதுதான் உண்மையான இறைவன் திருவடி. உண்மையான கல்வியின் பயனும் அதுவே. இதனைத் திருவள்ளுவர் தமது இரண்டாவது குறளிலேயே நல்ல முறையில் விளக்குகின்றார்.

ஆகவே, நாம் அறிந்துகொள்ள முடியாத அறிவு இருந்து கொண்டே இருப்பது மட்டும் நிச்சயமாகத் தெரிகிறது. நம் அறிவுக்கு எட்டாத அந்த அறிவின் பூரணத்தைத்தான் வாலறிவன் என்றும், பகவான் என்றும் சொல்லுகின்றோம்.

இந்த அறிவின் பூரணத்தை அறிவதுதான் உண்மையான கல்வியின் குறிக்கோள் என்றும் வள்ளுவர் கூறுகின்றார். அப்பர் சுவாமிகள் குறிக்கோள் இல்லாது கெட்டேன் என்றும் சுட்டுகின்றார்.

## ஞானக்கதிர்

உண்மைப் பொருளை அறிய விடாது தடுப்பது அகங்காரம். இதனை அகஇருள் என்றும் ஆணவம் என்றும் பெரியோர்கள் கூறுவர். அகஇருள் புற இருளிலும் கொடியது. புறஇருள் தன்னைக் காட்டும் அகஇருள் தன்னைக்காட்டாது தனக்குள் இருக்கும் பொருளையுங் காட்டாது.

எதிர்கால சைவ உலகம் இன்றைய சைவ இளைஞர்களுடைய கையிலேதான் உண்டு. நாம் சைவர்களாகப் பிறந்துவிட்டோம் சைவர்களாக வாழ்ந்து உண்மையான சைவர்களாகவே இறக்கவேண்டும். இது உண்மையிலே மிக முக்கியமானது.

சிவமே அன்பு, சிவமே நீதி, சிவமே கருணை, சிவமே உண்மை, சைவர்களாகிய நாம் அன்பு, நீதி, கருணை, உண்மை என்பவற்றோடு உறவு கொண்டு சிவசம்பந்திகளாக வாழ்ந்து இன்பம் பெறுவோமாக.

இன்றைய சைவ இளைஞர்களின் உள்ளங்களில் புனிதம், தெய்வீக சிந்தனை, இரக்க சிந்தனை, கருணை உள்ளம், நல்ல எண்ணம், நல்ல சிந்தனை, நல்ல நோக்கம், நல்ல தத்துவம், நல்ல செயற்பாடுகள், தொண்டு உள்ளம் உள்ளத்தில் குடிகொண்டு நல்ல பணிகளைச் செய்ய இளைஞர் சமுதாயம் தம்மை அர்ப்பணிக்க முன்வரவேண்டும்.

சிவம் ஆதியானது, சிவம் ஜோதியானது, நீதியே சிவம், அறிவே சிவம், அழகே சிவம், நன்மையே சிவம், உண்மையே சிவம், செம்மையே சிவம், சர்வமும் சிவம், சைவம் காட்டும் கடவுட்கோட்பாடும் மனித நலவியல் கோட்பாடும் ஒன்றோடொன்று இணைந்து காணப்படுகின்றன. சைவம் ஒரு சமயத்துவம். அதேவேளை அது ஒரு வாழ்க்கை நெறியுங்கூட.

உள்ளன்போடு சிவனை வழிபடுவோர் அத்தனை பேரும் உண்மையான சைவர்களே. சிவம் என்ற சொல்லுக்கு இன்னொரு பொருள் அன்பு என்பது. அன்பு வேறு சிவம் வேறு அல்ல. அன்பு வேறு சிவம் வேறு என்று நினைப்பவர் அறிவில்லாதவர் என்பது திருமூலருடைய கருத்து.

இன்றைய இளைஞர் சமுதாயம் கடவுள் நம்பிக்கையுடன, புனிதமாக வாழ்ந்து "அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்ப நிலை தானே வந்து எய்தும் பராபரமே" என சைவம் கூறும் சமய, சமூக சேவையை மனதில் கொண்டு, நற்சேவைகள் செய்து நாம் உண்மையான சைவர்களாக வாழ்வோமாக. ✦

# மதபேதமின்றி வழிபடுவோர்க்கு வேண்டும் வரம் நல்கும் மடு அன்னை

வரலாற்றுப் பிரசித்திபெற்ற மருதமடு அன்னையின் வருடாந்த திருவிழா இன்று நடைபெறுவதை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.

பிரான்சில் லூர்து பதி, போத்துக்கலில் பற்றிமா பதி, இங்கிலாந்தில் வோள்சிங்கம், இந்தியாவில் அன்னை வேளாங்கன்னி யாத்திரைத் தலம் என்று உலகளாவிய ரீதியில் அன்னையின் - புகழ் பாடுகின்ற - அன்னையின் அற்புதங்களை அள்ளிப் பொழிகின்ற திருத்தலங்கள் வரிசையில் இலங்கையில் மருதமடு மாத திருத்தலம் சிறப்புப்பெற்று விளங்குகின்றனது.

இன்று எம் மண்ணில் நிலவும் அமைதியான சூழலும் போக்குவரத்து வசதியும் அன்னையின் பதியை அன்றாடம் ஏராளம் பக்தர்கள் வந்து தரிசித்துச்செல்ல வகைசெய்துள்ளது. இதனால், மருதமடுப் பதியானது இன்று என்றும் இல்லாத முதன்மையையும் முக்கியத்துவத்தையும் பெற்றுள்ளது.

கத்தோலிக்க மக்கள் மட்டுமல்ல மத பேதமின்றி மருதமடுப் பதியை அறிந்தும் - தரிசித்தும் மருதமடு அன்னையிடம் வரம் கேட்டும் - அருள் பெற்றும் இருக்கின்ற பிற மதத்தவர் பலர் அன்னையின்பால் ஆழ்ந்த பக்தி கொண்டுள்ளனர்.

இலங்கையில் சிங்கள, தமிழ், கத்தோலிக்க மக்களை இனபேதமின்றி அழைக்கின்ற ஒரு பதியாக விளங்கிய மருதமடு அன்னையின் பதி, இன்று அவர்களை இணைக்கின்ற ஒரு பதியாகவும் மாறி பலரின் கவனத்தையும் கரிசனையையும் தன்பால் ஈர்த்துள்ளது.

இன்று மருதமடு மாதாவின் பக்தியானது இலங்கை முழுவதிலும் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் வேகமாகப் பரவியுள்ளது. போரின் காரணமாக இலங்கையின் பல பாகங்களிலும் சிதறி இருக்கும் தமிழ் மக்களும் அங்கு ஏற்கனவே இருக்கின்ற பக்கர்களும் மருதமடு அன்னையின் விழாவினைக் கொண்டாடத் தவறுவதில்லை. கொழும்பு, கண்டி, திருகோணமலை போன்ற பல இடங்களில் மருதமடு மாதாவின் திருவிழா கொண்டாடப்படுகிறது. புலம்பெயர்ந்து உலகின் பல பாகங்களிலும் பரவியிருக்கும் தமிழ்மக்கள் அங்கெல்லாம் மருதமடு அன்னையின் விழாவினைக் கொண்டாட மறப்பதே இல்லை. கனடா - பிரான்ஸ் - இங்கிலாந்து சுவிற்ஸர்லாந்து - ஜேர்மனி போன்ற பல இடங்களில் மருத மடு அன்னையின் திருவிழா கொண்டாடப்படுகிறது.



அருள்திரு.
ரூபன் மரியாம்பிள்ளை

இலங்கை மண்ணில் மிகநீண்ட காலமாக நடைபெற்ற கொடிய போரோடும் அதன் தாக்கங்களோடும் நெருங்கிய தொடர்புபெற்று மடுப்பதி விளங்குகிறது. 450 வருட வரலாற்று சிறப்புமிக்க மடுப்பதியில் 20.11.1999 இல் 38 பேர் கொல்லப்பட்டும், 65 பேர் காயமடைந்தும் ஆலயம் சேதமடைந்தும் போன நிகழ்வு அன்னையின் பக்தர்கள் பலரின் மனதுகளில் தாங்காத சோகத்தையும் வரலாற்று ஏடுகளில் நீங்காத வடுவையும் ஏற்படுத்தியிருந்தது.

மிகநீண்ட காலமாக இம்மண்ணில் நிகழ்ந்த அவலங்களையும் உயிர் இழப்புக்களையும் தடுத்து நிறுத்திய அன்னையே இப்போது பேச்சுகளில் ஏற்பட்டுள்ள தடங்கல் நிலைகளிலும் தன் பங்களிப்பைச் செய்யவேண்டுமென மன்றாடுவோம். மருதமடு அன்னையிடம் இவ்வாண்டுத் திருவிழாவின்போது இலங்கையிலும் வெளிநாடுகளிலும் கூடுகின்ற பக்தர்களின் வேண்டுதல் இதுவாகவே இருக்க வேண்டும் என விரும்புகிறோம். அன்னை எம் மண்ணில் நீதியோடு கூடிய இப்புதுமையினை நிறைவு செய்வாள். ★

# கூட்டுறவு தினவிழா

அரியாலை,ஓக.15

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை நடத்தும் 81ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழா நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெறும் விழாவில் தமிழீழ நிர்வாக சேவை பொறுப்பாளர் வீ.பூவண்ணன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இவ்விழாவின் இறுதியில் கலை நிகழ்வுகள் இடம்பெறும்.

## நல்லூர் ஆலய சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.15

நல்லூர்க் கந்தன் உற்சவத்தையொட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினரால் நடத்தப்பட்டுவரும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் தவநாதன் றொபேட்டின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும்.

இதில் பக்கவாத்தியக் கலைஞர்களாக வயலின் - எம்.றதீஸ்குமார், மிருதங்கம் - கே.கஜன், முகர்சிங் - கே.நந்தகுமார் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (எ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.15

நல்லூர்க் கந்தன் உற்சவத்தையொட்டி நல்லூர் சைவமகா சபையினால் நல்லூர் ஆலய மேற்கு வீதியில் உள்ள ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய அரங்கில் நடத்தப்பட்டுவரும் தெய்வீகத் தொடர் இசைச் சொற்பொழிவு நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு 'மாமனாக வந்த தாமன்' பற்றி சி.வை.நித்தியானந்த சர்மா இசைச்சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (எ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.15

நல்லூர்க் கந்தன் உற்சவத்தையொட்டி வடபிரதேச இந்துப் பேரவையால் நல்லூர் அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் நடத்தப்பட்டுவரும் தெய்வீக நிகழ்ச்சித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6மணிக்கு 'கந்தன் கருணை' எனும் பொருளில் திருவாசகமணி [illegible] சொற்பொழிவாற்றுவார். (எ-10)

# நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

பதின்மூன்றாம் திருவிழா



## பாடிடுவோம் மால்மருகனை

ஆடி அமாவாசையை அடுத்து
ஆறாம் நாள் கொடியேறி
தேடி வரும் உள்ளங்களில்
தென்றல் நடை பயின்று
பாடி மகிழும் நல்லை முருகா
பத்தாம் நாளில் மஞ்சமேறி
கூடியே பத்தினிகளுடன் மூவராய்
குதுகலிக்கும் காட்சிதான் என்னோ?
நாடி வரும் நமக்கெல்லாம்
நன்மை தரும் வேல் முருகா
ஆடியை அடுத்துவரும் கார்த்திகையில்
அமர்ந்து அழகுதரும் பூச்சப்பறமும்
ஓடி வரும் மரகதத் தேரினில்
ஒய்யாரமாய் திகழும் மால்மருகா
தோடியுடன் பண் இசைக்கும்
தொண்டர்களின் துயர் துடைக்க
நாடி வந்து நல்லூரில்
நன்னீரில் தீர்த்தம் ஆடி
பாடி மகிழும் பக்தர்களைப்போல்
பாரினில் வேறெங்கும் கண்டிலனே!

- செ.சண்முகலிங்கம் *நல்லூர்.*

## கந்தன் கழல்தொழ வேண்டும்!

காலம் கனிந்திட வேண்டுமெடி ! - என்றும்
கந்தன் கழல்தொழ வேண்டுமெடி!
சீலம் சிறந்திட வேண்டுமெடி! - நின்று
செய்தொழில் ஓங்கிட வேண்டுமெடி!

நாதம் பெர்ழிந்திட வேண்டுமெடி! - நல்லை
நாதன் நயந்திட வேண்டுமெடி!
கீதம் கிளர்ந்தெழ வேண்டுமெடி! - வல்ல
கீதை ஒளிர்ந்திட வேண்டுமெடி!

- மகேஸ்வரி *சாவகச்சேரி.*

## பட்டதுயர் நீக்கிவிடு

*இந்நாள்வரை தமிழர் நாம் பட்டதுயர் நீக்கிவிட....!*
*இந்நாநிலத்தே துன்பமெல்லாம் அகன்றுவிட....!*
*குவலயத்தோர் உள்ளமெல்லாம் மகிழ்ந்துவிட....!*
*குன்றாத மெய்யமைதி நிலைத்துவிட....!*
*வெறிபிடித்த உள்ளங்களில் பாசமழை பொழிந்துவிட...!*
*நிம்மதியாய் வாழ்வதற்கு தீர்வொன்று வந்துவிட.....!*
*நிரந்தரமாய் இருந்துவரும் சமாதானம் நிலைத்துவிட....!*
*உறவிழந்த உள்ளங்களிற்காறுதலாய் அமைந்துவிட....!*
*உத்தமராய் வாழுமொரு சமுகத்தைப் படைத்துவிட....!*
*யாழ்மண்ணில் மீண்டுமொரு பசுமைமழை பெய்துவிட...!*
*நீறுபட்ட நெஞ்சங்கள் நிம்மதிப் பெருமூச்சுவிட....!*
*உன்திரு வீதிதனில் தேரேறி வாராயோ மயிலவனே....!*

கார்த்திகா கந்தசாமிசர்மா.

## துன்பம் தீர்க்க விரைந்து வா!

நீல மயில் மீதுமுருகன் பவனி வருகிறான்
வேலொருகை யேந்தி வினைகள் தீர்க்க வருகிறான்
தங்க மயில் மீது முருகன் தாவி வருகிறான்
தருணமிது காக்க வெனத் தேடி வருகிறான்
நந்த கோபன் மருகன் நம்மை நாடிவருகிறான்
வந்தடியார் துன்பந் தீர்க்க விரைந்து வருகிறான்
ஓராறு மங்கையர்கள் உவந்த பாலனாம்
ஈரேழு லோகமும் புகழும் சீலனாம்
ஈராறு கையன் எம்மை யாளும் மெய்யனாம்
சூரறுத்து தேவர் குறை தீர்த்த ஐயனாம்
வள்ளி தெய்வயானையுடன் இணைந்து வருகிறான்
துள்ளும் வேலால் துயர் துடைக்கத் தாவி வருகிறான்.

மு.தணிகாசலம் கற்கோவளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கோழி எரு விற்பனைக்குண்டு. தொடர்பு ராஜீவ் ஆனைக்கோட்டைச் சந்தி T.P. 222 3529 (21408)

தச்சுவேலை செய்யும் சீனா மெசின்கள் 10",12",14",16" ஆகியனவும் மின்சார றில்லர்கள், அலுமினிய கட்டிங் மெசின், வெல்டிங் டிரான்ஸ்போமர்கள், ஜெனரேற்றர்கள் ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு: கி.சுதாகரன், இல.20, 2ஆம் ஒழுங்கை, அரசடி வீதி, நல்லூர். (21409)

### காணி விற்பனைக்கு

சத்திரந்தை, நவிண்டிலில் 41/2 பரப்புக் காணியும் வீடும் (காலஞ்சென்றவரான சொக்கலிங்கத்தின் வீடு) விற்பனைக்குண்டு. தொடர்பு கோ.பரமநாதன் C/o S.பாலகுமார், நவிண்டில், கரணவாய்மத்தி, கரவெட்டி (T.P.021 3339) இம்மாதம் 14ஆம், 15ஆம், 16ஆம் திகதி களில் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணிக்கிடையில் தொடர்பு கொள்ளவும். அதற்குப் பின்னர் T.P. 01-505740 இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம். (21379)

நீர்வேலி கந்தசுவாமி கோயிலடியில் யாழ்ப்பாணம் வீதியில் நாலு புறமும் சுற்று மதில் உடைய 6பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 55, சீனியர் லேன், யாழ்ப்பாணம். T.P.No 222 3772. (21388)

நவற்கிரி, அச்சுவேலியில் நவற்கிரி சந்திக்கு மிக அண்மையில் வீதியில் இருந்து 50யார் ஒழுங்கையில் பாதையைக் கொண்ட கல் இல்லாத 18 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 55, சீனியர் லேன், யாழ்ப்பாணம் T.P.No. 222 3772. (21389)

### வீடு விற்பனைக்கு

அரியாலையில் இல.678/11, கண்டி வீதி, முள்ளி ஒழுங்கையில் 4அறைகள் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: த.சுந்தரலிங்கம், இல.150, நெடுங்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். T.P.No. 222 2894.(21426)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள (விலை 45/-) தடுப்பூசி போடப்பட்ட சிவப்பு சேவல் குஞ்சுகள் (விலை 15/-) 25-08-2003 பிற்பகல் விநியோகிக்கப்படும் க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (21417)

### தவறிவிட்டது

S.இராசையா என்பவரின் தேசிய அடையாள அட்டை (443602801V) நெல்லியடிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கரணவாய் தெற்கு, கரவெட்டி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P. 077 - 6027632. (21421)

யாக்கரு, கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை இராசமணி என்பவரது தேசிய அ.அட்டை (535341290V), விசேட அ.அட்டை என்பன நெல்லியடிக்கும் கலிகைச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மொடேன் ஸ்ரோர்ஸ், நெல்லியடி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவும். (21396)

த.நாகபரமேஸ்வரி என்பவருடைய தே.அ.அட்டை (இல.697410864V), வி.அ.அட்டை என்பன தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் சரவணை கிழக்கு, வேலணை எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (21422)

## பாதை திறக்க அனுமதி

மன்னார் மறிச்சுக்கட்டி ஊடாக புத்தளம் கொழும்புப் பாதையினைத திறப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

15ஆண்டுகளுக்கும் மேலாக மூடப்பட்டுள்ள இந்த வீதியைத் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்தப் பாதையை மீளத் திறப்பதன் மூலம் மன்னாரில் இருந்து கொழும்பிற்கு நான்கு மணித்தியாலங்களில் சென்றடைய முடியும் எனவும்-

தற்போது இப்பாதையின் இருபகுதியிலும் புதைக்கப்பட்டிருக்கும் வெடிபொருள்களை அகற்றும் பணியில் 'ஹலோ ட்ரஸ்ற்' அமைப்பினர் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பணிகள் நிறைவடைந்ததும் போக்குவரத்திற்கெனப் பாதை திறந்து விடப்படும். (ஒ-12)

# பாதுகாப்பு வலய...

6ஆம் பக்கத் தொடர்ச்சி

கொள்ள வேண்டுமாயின், அரசும் விடுதலைப் புலிகள் அமைப்பும் எதிர்காலத்தில் தாம் நிலக்கண்ணிகளைப் புதைக்கும் நடவடிக்கைகளில ஈடுபடப் போவதில்லையென சர்வதேச ரீதியில் இயங்கும் அமைப்புக்களுக்கு எழுத்து மூல உத்தரவாதம் வழங்கவேண்டும். நிலக்கண்ணி வெடிப்பாவனை தொடர்பான "ஒட்டாவா" ஒப்பந்தத்தில் ஸ்ரீலங்கா அரசு இதுவரையில் கையெழுததிடவில்லை என்பதோடு, தான் எப்போது அந்த ஒப்பந்தச் சரத்துக்களை ஏற்று அதில் கையெழுத்து இடப் போவதான திகதியை நிர்ணயிப்பது தொடர்பாகவும் எதுவித உறுதிமொழியினையும் இதுவரையில் தெரிவிக்கவில்லை.

இறைமையுள்ளதோர் அரசு என்ற வகையில் கருதப்பட முடியாத காரணத்தால் விடுதலை புலிகள் அமைப்பு 'ஒட்டாவா' ஒப்பந்தத்தில் கையெழுத்திட முடியாதாயினும், அவர்கள் 'ஜெனீவா' ஒப்பந்தத்தை ஏற்று அதில் கையெழுத்திட முடியும். அவ்விதம் குறிப்பிட்ட ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் வரை ஏற்கனவே வழங்கியுள்ள உதவி நிதிகளுக்கு மேலதிகமாக ஒரு சதத்தையேனும் வழங்கப் போவதில்லையென சர்வதேச சமூகம் அரசுக்கும், விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் தெரிவித்துள்ளபோதிலும், இருதரப்பினரும் இது தொடர்பாக இதுவரை எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

இவையாவற்றையும் நோக்குமிடத்து, அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் பொதுமக்கள் மீளக்குடியமர்வதாயின், தற்போது கைக்கொள்ளப்படும் அணுகுமுறைகளைவிடுத்து, பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளை முன்னிலைப்படுத்தும் வகையிலான நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டியது அவசியமாகும். அதேவேளை, இப்பிரச்சினைக்கு விரைவான தீர்வொன்றைக் காணத்தவறுவோமாகில், அதுசமாதான நடவடிக்கைகளுககுப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலான இறுக்கமான நெருக்குதல்களை உருவாக்கும்.

அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களிலுள்ள தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர அனுமதிக்குமாறு கோரும் தமது கோரிக்கைக்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படாவிட்டால், சமாதானப் பேச்சுகளில் மீண்டும் கலந்துகொள்ள வேண்டாமென வலிகாமம் வடக்கு பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்து வாழும் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனைக் கடிதம் மூலம் கோரியுள்ளனர். தனங்களப்பு பிரதேசத்தைச் சேர்ந்த 350 பொதுமக்களால் கையொப்பமிடப்பட்டு, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் மீளக் குடியமர்வது தொடர்பான தமது பிரச்சினைக்கு உரிய தீர்வு வழங்கப்படாவிட்டால் தாம் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்கப்போவதாகத் தெரிவிக்கப்பட்டுள்[illegible]. சாதாரண பொதுமக்களின் அடிப்[illegible]த் தேவைகளுக்கும், அரசியல்[illegible]திகளின் தேவைகளுக்கும் இடையேயான வேறுபாட்டைப் புரிந்துகொள்ளாத ஊடகவியலாளர்கள் வெளியிடும் கருத்துக்களால் பிரச்சினை மேன்மேலும் தீவிரமடைய வழிவகுக்குமேயன்றி பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவதாய் அமையப்போவதில்லை என்பதனை நாம் உணர்ந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். ◆


## பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. விடுதிக்காப்பாளர் :**
கல்வித்தகைமை : பட்டதாரி
முன்னனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.
வயதெல்லை : 35 - 60

**02. உபவிடுதிக்காப்பாளர் :**
கல்வித்தகைமை : க.பொ.த. சா/த
வயதெல்லை : 30 - 60

✪ வேட்பாளர் தேகாரோக்கியம் உடையவராகவும், இல்லப் பிள்ளைகளை பரிவோடு கவனிப்பதிலும், சைவாசாரம் பேணுவதிலும், வழிகாட்டுவதிலும் அர்ப்பணிப்போடு ஈடுபடுபவராகவும் இருக்கவேண்டும்.

✪ கணவன் - மனைவி விண்ணப்பிக்கலாம்.

தொண்டூதியம் பேசி நிர்ணயிக்கப்படும்.

அண்மையில் பெறப்பட்ட இரு நற்சான்றிதழ் பிரதிகளோடு விண்ணப்பங்கள் கிடைக்கவேண்டிய கடைசித் திகதி **25.08.2003.**

**சோ. பத்மநாதன்**
செயலாளர்,

சைவவித்தியா விருத்திச்சங்கம்.
கலாசாலை வீதி. திருநெல்வேலி. (29494)

(21-19-16)


## ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில்
01 - 10 - 1925

விண்ணுலகில்
28 - 07 - 2002

அமரர்
### முருகேசு வைரவப்பிள்ளை

அன்பு காட்டி நின்றாய் ஐயா
நான் இருக்க பயம் ஏன்? என்றாய் ஐயா
ஊரார் பசிபோக்கி நின்றாய் ஐயா
பார்க்கும் இடமெல்லாம் பாசமுகம் தெரியுதய்யா
நாள் முழுவதும் நடமாடிய எம்ஐயா
எந்நாளும் எம்மோடு வாழ்ந்திடுவீர் என எண்ணினோம் ஐயா
கொடிய நோய் வந்ததுவே ஐயா
நாங்கள் படும்வேதனைகள் உங்களுக்கு
தெரியவில்லையே ஐயா
நாங்கள் அம்மாவையும் இழந்த அனாதைகளே நாங்கள் ஐயா
உங்களை நம்பி இருந்தோமே ஐயா!

இன்று (15.08.2003) எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இணுவில் தெற்கு,
அங்களப்பாய். (21432) (36)

# தெய்வீக ஸ்தலங்களில்



நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவ தினங்களில் 25 தினங்கள் 'மகாபாரதம்' என்னும் பொருளில் தொடர் சொற்பொழிவாற்றிய யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவன் தமிழ்வேந்தன் 'செஞ்சொற் தமிழ்வித்தகன்' பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பாக இடம்பெற்ற நிகழ்வில் தமிழ்வேந்தன் உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். நல்லை ஆதீன முதல்வர் மற்றும் பிரமுகர்கள் அருகில் காணப்படுகின்றனர். (எ)



மாதகல் இந்துசமய விருத்திச் சங்கமும், அறநெறிப்பாடசாலையும் இணைந்து அண்மையில் நடத்திய சைவசமய அறிவுப் போட்டியின் பரிசளிப்பு விழா மாதகல் அரசடி சித்திவிநாயகர் ஆலயத்தில் நடைபெற்றபோது இளைப்பாறிய அதிபர் கா.அழகரத்தினம் வெற்றிபெற்ற மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (எ-135)



இரண்டாவது உலக இந்துமாநாட்டை முன்னிட்டு தவசிகுளம் கண்ணகை அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற வில்லிசை நிகழ்வைப் படத்தில் காணலாம். (எ)




நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவ காலத்தை முன்னிட்டு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் இளம் கலைஞர் மன்றத்தின் ஆதரவில் நடத்தப்பட்டு வரும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் கடந்த வாரம் கலாபூஷணம் - தாவடியூர் கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்தன் பண்ணிசைக் கச்சேரி நிகழ்த்தியதைப் படத்தில் காணலாம். (எ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வோர்ன் என்னை கட்டியணைத்து முத்தமிட்டார்! 17 வயது மாணவி நீதிமன்றத்தில் வாக்குமூலம்!!

## ஷேன்வோர்ன் மீதான மற்றொரு பாலியல் குற்றச்சாட்டு விசாரணை ஆரம்பம்

"ஆஸி. கிரிக்கெட் வீரர் ஷேன் வோர்ன் என்னைக் கட்டியணைத்து முத்தமிட்டார்" என 17 வயது மாணவியொருவர் நேற்றுமுன்தினம் மெல்பேர்ன் நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளித்தார்.

தென்னாபிரிக்க பெண்ணொருவருக்கு தொலைபேசி மூலம் ஆபாச அழைப்பு விடுத்தார் என்று ஷேன் வோர்ன் மீது கடந்த வாரம் குற்றம் சுமத்தப்பட்டது. இந்நிலையில் கடந்த வருடம் மாணவியொருவருக்கு விரும்பத்தகாத வகையில் முத்தமிட்டார் என்ற குற்றச்சாட்டுத் தொடர்பாக நேற்றுமுன்தினம் விசாரணை ஆரம்பமாகியுள்ளது.

அந்த மாணவியின் பெயர் அலீசா பிளாக். 2002ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இவரை வோர்ன் முத்தமிட்டு விட்டாராம். இந்தத் தகவலை அப்போதே அலீஷாவின் மாமா கிறிஸ்டோபர் கென்ட் வெளியிட்டார்.

உடனே, 'அவர் 5000 டொலர்கோரி எங்களை பிளாக் மெயில் செய்கிறார்' எனப் புகார் கூறி ஆஸ்திரியேலிய கிரிக்கெட் சபை, மெல்பேர்ன் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. நேற்றுமுன்தினம் இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது மாணவி அலீஷா ஆஜராகி அளித்த வாக்குமூலம் வருமாறு:-

2002ஆம் ஆண்டு ஜனவரிமாதம் நான் என்னுடைய நண்பர்களுடன் சவுத்போர்ட் பகுதியில் சென்று கொண்டிருந்தேன். அங்கு ஒரு சிறுகூட்டம் நின்றது. மத்தியில் கிரிக்கெட் வீரர்களான வோர்ன், பிரெட்லீ இருவரும் இருந்தனர். நாங்களும் அங்கு சென்றோம். கிரிக்கெட் பற்றி சிறு உரையாடல் நடந்தது.

வோர்ன் கிளம்பும்போது என்னைப் பார்த்து, "நீ மிகவும் அழகாய் இருக்கிறாய், என்னோடு வா" என்றார். அவருடைய காரைப் பின் தொடர்ந்து நான் என் காரில் சென்றேன். 'போக்கஸ் ஹோட்டலுக்கு' கார்கள் சென்றன.

அங்கு நான் என்னை அறிமுகப் படுத்திக்கொண்டேன். பிரிஸ்பேன் போகவேண்டி உள்ளது. ஆனால், மீண்டும் உன்னைச் சந்திக்க விரும்புகிறேன். உன் தொலைபேசி இலக்கத்தைக்கொடு எனக்கேட்டார். நான் என்னுடைய சிநேகிதியின் தொலைபேசி இலக்கத்தைக் கொடுத்தேன். ஏனென்றால் எங்கள் வீட்டுத் தொலைபேசி பழுதுபட்டிருந்தது.

நான் வோர்னின் அவரை விட்டுப் பிரிய நினைத்தபோது 'குட்நைட்' முத்தமொன்று பெறலாமா என்று கேட்டேன். வோர்ன் சுற்றும்முற்றும் பார்த்துவிட்டு, 'சரி' என்றார்.

நான் காருக்குள் என் தலையை விட்டு எனது இடது கன்னத்தைக் காட்டினேன். கன்னத்தில்தான் அவர் முத்தமிடவேண்டும் என்று எதிர் பார்த்தேன்.

ஆனால், நான் எதிர்பாராத வகையில் வோர்ன் எனது முகத்தை காருக்குள் இழுத்து வாயோடு வாய் வைத்து முத்தம் கொடுத்தார். 30 விநாடிகள் இது நடந்தது. பிறகு நான் என் தலையை வெளியே இழுத்துக் கொண்டேன்.

பின்னர் நான் அங்கிருந்து ஓடிவிட்டேன். வீட்டில் என் தாயாரிடம் போய் சகலவற்றையும் கூறினேன். என் தாயார், 'புதியவர்களிடம் பேசும்போது, பழகும்போதும் ஜாக்கிரதையாக இரு' என்று எனக்கு அறிவுரை கூறினார்.

- இவ்வாறு அலீஷா வாக்குமூலம் அளித்தார்.

நேற்றுமுன்தினம் இந்த நீதிமன்றத்தில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் முகாமையாளரான கிளமண்டஸூம் சாட்சியம் அளித்தார்.

"இந்த புகார் பற்றி எங்கள் கவனத்திற்கு வந்த உடனேயே வோர்ன், லீ இருவரையும் அழைத்து விசாரித்தோம். அவர்கள் அப்படி ஒரு சம்பவமே நடக்கவில்லை என்று மறுத்துவிட்டார்கள்" என்று அவர் கூறினார்.

மாணவி அலீஷாவின் மாமா கென்ட் நிருபர்களிடம் பேசும்போது, "வோர்ன் ஒரு மோசமான முன்னுதாரணமானவர். நான் எவரையும் 'பிளாக் மெயில்' செய்யவோ, மிரட்டவோ இல்லை என்று கூறினார்.

# வரிவிலக்கு தொடர்பான வழக்கில் டெண்டுல்கருக்கு நீதிமன்றம் நோட்டீஸ்

இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு அன்பளிப்பு வழங்கப்பட்ட காருக்கு வரிவலக்கு அளிக்கப்பட்டதற்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் அவருக்கு நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

'பியட்' நிறுவனம் டெண்டுல்கருக்கு வழங்கிய 1.5கோடி இலங்கை ரூபா பெறுமதியான காருக்கு சுமார் 2.30கோடி ரூபா இறக்குமதி வரி செலுத்துமாறு கோரப்பட்டது.

பின்னர் டெண்டுல்கரின் வேண்டுகோளின் பேரில் இந்திய மத்திய அரசாங்கம் மேற்படி காருக்கு வரிவிலக்கு அளித்தது.

ஆனால், செல்வந்த வீரரான டெண்டுல்கருக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டமைக்கு எதிராக புதுடில்லி மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் இவ்வழக்கு விசாரணையை ஆரம்பித்த நீதிபதி விக்ரம் ஜித்சென், இதுதொடர்பாக விளக்கம் அளிக்குமாறு கோரி, டெண்டுல்கர், இந்திய மத்திய விளையாட்டுத்துறை அமைச்சு, நிதி அமைச்சு ஆகியவைக்கு நோட்டீஸ் அனுப்பினார்.

ஓகஸ்ட் 19ஆம் திகதி மீண்டும் இவ்விசாரணை ஆரம்பமாகும் எனவும் அவர் அறிவித்தார்.

தனிநபர் ஒருவருக்கு மாத்திரம் வரிவிலக்கு அளிப்பது இந்திய அரசியலமைப்பின் 14ஆவது விதிக்கு (சகலருக்கும் சமவுரிமை) முரணானது என்பதைச் சுட்டிக்காட்டிய நீதிபதி இவ்வழக்கு மிகுந்த பொதுநல முக்கியமுடையது என்று கூறினார்.

இந்திய விளையாட்டு நட்சத்திரங்களுக்கான அர்ஜுனா விருது கூடுதலானோருக்கு வழங்கப்பட வேண்டுமென கோரப்பட்டது. எனினும், நிதிப்பற்றாக்குறை காரணமாக இக்கோரிக்கையை நிறைவேற்றமுடியாது என விளையாட்டுத் துறை அமைச்சு தெரிவித்தது.

இதைச் சுட்டிக்காட்டிய நீதிபதி, கிரிக்கெட்டுக்கு செலவழிப்பதில் ஊதாரித்தனமாக நடந்துகொள்வதற்கும் ஏனைய விளையாட்டுக்களில் கஞ்சத்தனமாக நடப்பதற்கும் இது வோர் உதாரணமாகும் எனவும் கூறினார்.

# விளையாட்டு

## சிறுவர் இல்லங்களின் மெய்வன்மை போட்டி

யாழ்ப்பாணம், ஓக.15

யாழ். மாவட்டத்தில் உள்ள பதிவு செய்யப்பட்ட சிறுவர் இல்லங்களுக்கிடையிலான மாவட்டமட்ட மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி திலகநாயகம் போல் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தைப் பராமரிப்புச் சேவைகள் திணைக்கள அனுசரணையுடன் நடத்தப்படும் இவ்விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெறும் போட்டியாளர்கள், எதிர்வரும் 25ஆம் திகதி இடம் பெறும் மாகாணமட்டப் போட்டியில் கலந்துகொள்ளவுள்ளனர்.

(எ-9)

## துர்க்கை அம்மன் ஆலய உற்சவம்பற்றி கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஓக.15

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய மஹோற்சவ ஒழுங்குகள் தொடர்பான கலந்துரையாடலொன்று இன்று வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

வலி. வடக்கு பிரசேத செயலர் தலைமையில் இடம்பெறும் இக்கலந்துரையாடலில் உற்சவகால போக்குவரத்து ஒழுங்குகள், சுகாதார மற்றும் குடிதண்ணீர் வசதிகள், கலாசார நலன் பேண ஒழுங்குகள் போன்றன தொடர் பாக ஆராயப்படவுள்ளது.

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய மஹோற்சவம் எதிர்வரும் 28ஆம் திகதி முதல் செப்ரெம்பர் மாதம் 08ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(எ-150)


## யா/இணுவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும்

காலம் - 17.08.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி.
இடம் - கல்லூரி மண்டபம்.

*அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்கவும்.*

பழைய மாணவர் சங்கம். ச.முகுந்தன் செயலாளர்.
(21441) (32-12-18-31)

## நூலக உதவியாளர் தேவை

எமது கல்லூரி நூலகத்திற்கு சமயோசித அடிப்படையில் நூலக உதவியாளர் ஒருவர் தேவையாக உள்ளது. 40 வயதிற்கு உட்பட்டவராகவும் நூலக அறிவுடையவராகவும் இருத்தல் வேண்டும். நூலக விஞ்ஞான டிப்ளோமா பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 25.08.2003இற்கு முன் கிடைக்கும்படியாக கல்லூரி முகவரிக்கு அனுப்பிவைக்கவும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

அதிபர்,
சாவகச்சேரி இந்துக்கல்லூரி,
சாவகச்சேரி.

(21449) (31-12-18)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நாடறிந்த தமிழ், சமய, கலை, இலக்கிய சமூகத்தொண்டனும் எமது வட்ட உறுப்பினருமாகிய

'ஆசிரியமணி'
எம். சின்னத்தம்பி ஸ்ரீதயாளன்
(உதவிக் கல்விப்பணிப்பாளர், யாழ். வலயம்)

அவர்கள் இலங்கைத்தீவு முழுவதற்குமான சமாதான நீதிவானாக இன்று சத்தியப் பிரமாணம் செய்வதையிட்டு கல்விச் சமூகம் அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றது.

கல்வி வட்ட உறுப்பினர்கள்
யாழ். கல்வி வலயம்.

(21444) (32-12-18-31)

## கண்ணீர் அஞ்சலி

திருமதி சண்முகராசா கைலாசபதி (கைலாசம்)

யா/வைத்தீஸ்வராக் கல்லூரி பழையமாணவர் மன்றத்தின் உப செயலாளர் திரு.ச.ஜெகதீஸ்வரராஜா, உறுப்பினர் திரு.ச.இந்திரகுமார் அவர்களின் தாயாரும்,
நிர்வாகசபை உறுப்பினர் திரு.ஜெ.ஜனகனின் பூட்டியுமான
திருமதி சண்முகராசா கைலாசபதி (கைலாசம்)
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மசாந்திக்காக்வும் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் மன்றம்
யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி.

(21448) (32-12-18-31)

## தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவம் வாய்ந்த
ஆண், பெண்
இருபாலாரும் தேவை
உடன் நேரில் வரவும்.

மிலேனியம் பஷன் &
பொம்பே பஸார
10,11, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

(C/29517) (29-12-18-31)

## நாரந்தனை-சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்

மேற்படி ஆலயத்தின் வருடாந்த மகாசபைக் கூட்டம் 16.08.2003 சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் பரிபாலன சபைத் தலைவர் திரு. க.நடராசா அவர்கள் தலைமையில் ஆலய முன் மண்டபத்தில் நடைபெறும்.

முருகன் அடியார்கள் அனைவரும் வருகை தந்து ஆலயத்தின் வளர்ச்சிக்கு உதவுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாரந்தனை. - பரிபாலன சபையினர்.
(21450) (31-12-18)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
25 - 03 - 1925



மறைவு
28 - 07 - 2002

திருமதி
நல்லம்மா தம்பிமுத்து
(Retd. Nursing Officer, Jaffna Teaching hospital)

கண்மணி போல் எமை வளர்த்த அம்மாவே!
விண்ணுயர வஸந்தகான சபாவை வளர்த்துவிட்ட விளைநிலமே!
மண்ணதனில் உன்னுருவம் மறைந்துதான் போனாலும்
எண்ணமதில் எந்நாளும் வாழ்கின்றாய் எம்முடன் நீ.

*T.ஈஸ்வரமூர்த்தி*
*T.கணேசமூர்த்தி*
*"கரிஸ்தான்"*
*மானிப்பாய் வீதி,*
*உடுவில், சுன்னாகம்.*

மக்கள், மருமக்கள்,
பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

(21453) (29-12-18-31)

## மரண அறிவித்தல்

### திருமதி சண்முகராசா கைலாசபதி

நல்லூர், முத்திரைச் சந்தையைப் பிறப்பிடமாகவும் கில்னர் ஒழுங்கையை வதிவிடமாகவும்கொண்ட சண்முகராசா கைலாசபதி 11.08.2003 காலை இறைவனடி எய்திவிட்டார்.

அன்னார் அமரர் சண்முகராசா (வர்த்தகர்) அவர்களின் அன்பு மனைவியும் கமலாதேவி (ஜேர்மனி), ஜெகதீஸ்வரராஜா, விஜேந்திரா, இந்திரகுமார், வாலாம்பிகை (அமெரிக்கா), அமரர் ஆனந்தவேல், கைலாசநாதன் (கனடா), உமாதேவி (வவுனியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் அமரர் இராமானந்தம்பிள்ளை, நிர்மலாதேவி, செல்வராணி, இதயகுமார், சசிகலா, திருச்செல்வம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜெனகன், ஜெனார்த்தனன் - வீஜினி, நிஷாந்தினி, கார்த்திகேயன், கபிலேஸ்வரன், ஜெயகௌரி, கௌசல்யா, கௌதமி, கேசினி, ஆனந், விஜிதரன், கஸ்தூரி, கோபிநாத், அசோக், நவீனன் ஆகியோரின் பேர்த்தியும் லக்ஷனாவின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.08.2003 அன்று மாலை 4.00 மணியளவில் நடைபெற்று, கொட்டடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உமா ஸ்ரோர்ஸ்,*
*யாழ். சிவன் கோயிலடி.*

தகவல்:
S.ஜெகதீஸ்வரராஜா,
S.விஜேந்திரா, S.இந்திரகுமார்,
S.கைலாசநாதன் (மகன்மார்).

(C29520) (32-12-18-31)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புத்தளம் நிலைமை காரணமாக

# ஐ.தே.கவுக்கு எச்சரிக்கை விடுக்கிறார் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம்

புத்தளம் மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா முஸ்லிம்காங்கிரஸின் உறுப்பினர்களுக்கு எதிராக நடத்திவரும் அநாகரிகமான அரசியல் பழி வாங்கல்களை உடனடியாக நிறுத்திக்கொள்ளவேண்டும். தவறினால் முஸ்லிம் காங்கிரஸ் வித்தியாசமான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

- இவ்வாறு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், துறைமுக அபிவிருத்தி, கப்பல்துறை, கிழக்கு அபிவிருத்தி மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சருமான ரவூப் ஹக்கீம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அண்மைக்காலமாக புத்தளத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மீதும் மற்றும் கட்சியின் முக்கிய உறுப்பினர்களுக்கும் எதிராக ஐக்கிய தேசியக்கட்சியின் அமைப்பாளர்களும், அமைச்சர்கள் உட்பட ஏனைய சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் கடைப்பிடித்து வருகின்ற அரசியல் விரோதப் போக்கை உடனடியாக கைவிட வேண்டுமென்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் அழுத்தமாகக் கோரிக்கைவிடுத்துள்ளார்.

ஐக்கிய தே.கட்சியின் நடவடிக்கைகளால் தேசிய அமைபாளரும், புத்தளம் மாவட்ட அமைப்பாளருமான கே.ஏ. பாயிஸ், அரசியல் உயர்பீட உறுப்பினரும் புத்தளம் பிரதேச சபையின் உறுப்பினருமான எஸ்.எச். எம்நியாஸ், கல்பிட்டி பிரதேச சபை உபதலைவர் எஸ். ஏ.எஹியா, ஆராய்ச்சி கட்டுவ பிரதேச சபை உறுப்பினர் எஸ்.எம்.எம். நசார், புத்தளம் நகர சபைக்கு நியமிக்கப் பட்டுள்ள புதிய தலைவர் ஏ.ஒ.அலிகான் ஆகியோர் பாதிக்கப்பட்டனர்.

புத்தளம் மாவட்டத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கான ஆதரவு அதிகரித்து வருவதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் எமது கட்சியின் உறுப்பினர்கள் மீது பொய்க்குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. அத்துடன் அரசியல் அழுத்தங்களைப் பிரயோகித்து போலியான சட்ட நடவடிக்கைகள் மூலம் எமது உறுப்பினர்களின் உத்வேகத்தை மலினப்படுத்தவும் முயல்கின்றனர்.

சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் மூலம் இனக்கலவரம் ஒன்றை ஏற்படுத்தி அரசியல் இலாபம் தேடவும் திட்டமிடப்பட்டு, எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் வன்மையாகக் கண்டிக்கின்றது.

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் அரசியல் சகவாழ்வு போன்ற உன்னத விடயங்களைப் பற்றிப் பேசுவதோடு, நாகரிகமான அரசியல் சமூகமொன்றை உருவாக்கும் முயற்சியில் சகல அரசியல் தலைவர்களும் ஈடுபட்டுள்ளனர். இக்காலகட்டத்தில் இத்தகைய ஒரு சிலரின் பிற்போக்குத்தனமான நடவடிக்கைகள் இந்நாட்டில் மேலும் பல புதிய பிரச்சினைகளையே உருவாக்கும்.

சகல மக்களும் விழிப்புணர்வுடன் செயற்படும் இச்சந்தர்ப்பத்தில் அரசியல் வெற்றிகளை, மக்களின் மனங்களை வெல்லுவதன் மூலம் எய்துகின்ற உன்னதமான நடவடிக்கைகளையே ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் முழு நம்பிக்கை கொண்டு செயற்படுத்தி வருகின்றது. இந்நிலையில் கோழைத்தனமான சதிமுயற்சிகளில் ஈடுபட வேண்டாம் என்று நாம் சம்பந்தப்பட்டவர்களுக்கு மேலும் வேண்டுகோள் விடுகின்றோம்.

இந்நிலை நீடிக்குமானால் சற்று வித்தியாசமான அரசியல் நடவடிக்கைகளில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்றும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம் - என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

# கொல்லப்பட்ட தமது உறுப்பினருக்கு ஈ.பி.டி.பி.யினர் கண்ணீர் அஞ்சலி

மட்டக்களப்பு நகரப் பகுதியில் எமது கட்சியின் நீண்டகால உறுப்பினராக இருந்த தோழர் ரதீஸ் இன்று (14.08.2003) நண்பகலில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். அரசரட்ணம் ரதீஸ்வரன் (வயது -28) என்னும் அதிகார் வீதி, மட்டக்களப்பைச் சேர்ந்த, இளம் குடும்பஸ்தரான இவர், தமிழ் மக்களின் பொது நலனின் அக்கறையுடன் செயற்பட்டவர்.

- இப்படி ஈ.பி.டி.பி வெளியிட்ட அனுதாப அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் கொல்லப்பட்ட உறுப்பினரின் குடும்பத்துக்கு தமது கண்ணீர் அஞ்சலியையும் அது தெரிவித்துள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கட்சிப் பணியில் ஈடுபடுவதற்காக மோட்டார் சைக்கிளில் வரும் வழியில் சைக்கிளில் வந்த இருவர் இவரை வழிமறித்து துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். இத்துப்பாக்கிப் பிரயோகத்தில் ரதீஸ் அதே இடத்தில் உயிரிழந்துள்ளார்.

மக்களின் ஜனநாயக அரசியல் சுதந்திரத்தையும், மாற்றுக் கட்சிகளின் அரசியல் சுதந்திரத்தையும் மறுதலிக்கும் வகையிலான செயற்பாடுகள் தொடர்கின்றன. இதற்கு இந்தச் சம்பவம் மற்றுமொரு எடுத்துக்காட்டாகும். இலங்கைக்கான நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் மட்டக்களப்புக்கு விஜயம் செய்துள்ள இனறைய தருணத்தில் இக்கொடூரக் கொலை நிகழ்த்தப்பட்டுள்ளது என்பது கொலைக்குப் பொறுப்பானவர்கள எந்தளவுக்கு சமாதானத்தை நேசிக்கிறார்கள் என்பதையும் புலப்படுத்துவதாகும்

-என்றுள்ளது

(ம)

### வன்னி எம்.பி.பேசுகிறேன் என்று கூறி

# வவுனியா பொலீஸ் அத்தியட்சகருக்கு தொலைபேசி மூலம் அச்சுறுத்தல்

வவுனியா சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகருக்கு அநாமதேய தொலைபேசி அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

புதன்கிழமை மன்னாரில் இருந்து வவுனியா சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகருக்கு தொலைபேசி அழைப்பு ஒன்று வந்துள்ளது. அந்த அழைப்பை மேற்கொண்டவர் ஒரு வன்னி எம்.பியின் பெயரைக் குறிப்பிட்டு அவர் தான் நான் என்று அறிமுகப்படுத்திக் கொண்டு தனது கட்சி அலுவல்களைத் தான் மேற்கொள்வதற்கு மன்னார் பகுதி பொலீஸார் தொடர்ந்து அச்சுறுத்தலாக இருக்கிறார் என்று கூறியுள்ளார்.

உடனடியாக இவை நிறுத்தப்படாத பட்சத்தில் பொலீஸார் பாரிய விளைவுகளை எதிர்நோக்க வேண்டி வரும் என்று அந்த நபர் அச்சுறுத்தியுள்ளார்.

இதன் பின்னர் வவுனியா பொலீஸார் அழைப்பு வந்த இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பார்த்தபோது அது ஒரு தனியார் தொலைத் தொடர்பு நிலையத்தில் இருந்து வந்த அழைப்பு என்றும் ஒரு போதைப்பொருள் வியாபாரியே அவ்விதம் தொடர்பு கொண்டார் எனவும் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் டி.ஜே.மிஸ்கின் தெரிவித்தார்.

இதனை அடுத்து உடனடியாக அந்தத் தனியார் தொலைத் தொடர்பு மையத்தில் இருந்து யார் தனக்கு அழைப்பு எடுத்தார் என்றும் கண்டுபிடித்து அவரை உடனடியாக கைது செய்யுமாறு பொலீஸ் அத்தியட்சகர் கட்டளை பிறப்பித்தார்.

அவ்விதம் தொடர்பு கொண்ட நபர் வன்னி நாடாளுமன்ற உறுப்பினரின் பெயரினைப் பயன்படுத்திய காரணம் என்ன? உடனடியாக அதனைக் கண்டு பிடிக்குமாறும் உத்தரவு பிறப்பித்தார்.

இதேவேளையில்,

தென் இந்தியாவிலிருந்து மன்னார் ஊடாக இலங்கைக்கு அதிகளவான போதைப்பொருள்கள் கடத்தப்படுகின்றன. மன்னாரில் இளம் சமுதாயத்தின் அதிகளவினர் போதைக்கு அடிமையாகியுள்ளனர் என்று பொது அமைப்புக்கள் கவலை தெரிவிக்கின்றன.

## அமைதி....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

யும் ஏற்படுத்தியுள்ளது.

முஸ்லிம் - தமிழ் சமூகங்களுக்கிடையில் புரிந்துணர்வை வளர்ப்பதன் மூலம் ஒரு புதிய சுமுகமான, சமாதான சூழலை வடக்கு - கிழக்கில் உருவாக்குவதற்கான முயற்சிகள் பல மட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இக்காலகட்டத்தில் இவ்வாறான படுகொலைச் சம்பவங்கள் இடம்பெறுவது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

இந்நாட்டில் சமாதானம், சகஜ வாழ்வு என்பவை மீண்டும் ஏற்படுவதை விரும்பாத சில சக்திகள், இவ்வாறான காட்டுமிராண்டித்தனமான மனிதப் படுகொலைகளைச் செய்வதன் மூலம் இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளுக்கு உயிர் கொடுப்பதையே நோக்காகக் கொண்டுள்ளன.

இந்நாட்டைச் சின்னாபின்னமாக்கிக் கொண்டிருக்கும் இனப் பிரச்சினைக்கு ஜனநாயக ரீதியான தீர்வே பொருத்தமானது என்ற ஒரு கோட்பாட்டை மையமாகக் கொண்டு மனிதாபிமான முறையில் போராடி வரும் முஸ்லிம் காங்கிரஸ் போராளிகள், இவ்வாறான கபடத்தனமான முறையில் தண்டிக்கப்பட்டு வருவதை ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட சகல சக்திகளும் கண்டிக்க வேண்டும்.

இவ்வாறான சம்பவங்களால் உணர்ச்சி வசப்பட்டு வன்முறையைத் தூண்டிவிடுவதன் மூலம் பெரும் அழிவுகளுக்கு வழி கோலலாம் என மனப்பால் குடித்துக் கொண்டிருக்கும் பிற்போக்குச் சக்திகளின் வலையில் வீழ்ந்து விடாது அமைதியாக இருக்குமாறு சகல சமூகத்தினரையும் முஸ்லிம் காங்கிரஸ் வேண்டிக் கொள்கின்றது - என்று உள்ளது.


**லஷ்சுமி சினிமா** இணுவில்



ரம்யாகிருஷ்ணன், லிவிங்ஸ்டன், மூர்த்தி ஆகியோர் நடித்த

**அன்னை காளிகாம்பாள்** ரீல்ஸ்

சிறுவர்கள், பெரியோர்கள் குடும்பத்துடன் பார்க்கக் கூடிய படம். 11.00, 3.00, 7.00 (புதியநேரம்) (2123)

**ராஜா** யாழ்ப்பாணம்



இன்று முதல்....

புரட்சிக்கலைஞன் விஜயகாந்த் மற்றும் கிரண் நடித்த

**தென்னவன்** (ரீல்ஸ்)

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதின வெளியீடு.

தினசரி: 10.30, 2.30, 6.30. (C/29233) (12-18)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

அஜித், சிம்ரன் நடித்த

**வாலி**

தினசரி காட்சி: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு

**BLUE STREAK**

தினசரி 8.45 இரவு. (C29213) (12-18)

**லிபேட்டி** அச்சுவேலி

சரத்குமார். சிம்ரன். வையாபுரி. மணிவண்ணன்

**அரசு** (ரீல்ஸ்)

தினசரி: 3.00, 7.00

காலை 11.00 **JUDGE AND JURY**

(C/29373) (12-18-29)

**நாகம்ஸ்** சுன்னாகம்

ஒரே தடவையில் 27 திரையரங்குகளில் திரையிடப்பட்டு 10ஆவது வெற்றி வாரத்தை எட்டிய வெற்றிப்படைப்பு

நித்தியவாணி நடித்த

**சின்ன தேவதை** (தமிழ்) (ரீல்ஸ்)

(14-29) (C29232)

**இரசாயனவியல்**

**GROUP CLASSES**

DIAS BSC.(Hons) Spl.in chem

- GENERAL
- INORGANIC
- ORGANIC
- PHYSICAL

(துரித மீட்டல் வினா விடை)

முழு அலகு உள்ளடக்கலான Paper Class

(விரைவில் ஆரம்பம்)

74,Palaly,Rd.Thirunalvely.

(21439) (18)


**யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை**

**பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்**

தவிர்க்க இயலாத காரணத்தால் 16.08.2003 இல் நடைபெறவிருந்த கூட்டம் 30.08.2003 சனிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

அ.அருள்வேல்
செயலாளர்.

(C29519) (32-12-18)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

### அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 21 - 04 - 1933



ஆண்டவன் அடியில் 16 - 07 - 2003

**அமரர் பரமநாதன் சோதிநாதன்**

இறைவன் திருவடி நிழலில் நித்திய ஆறுதல் தேடிய அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம்சாந்தி!

எங்கள் குடும்ப ஒளி விளக்கின் மறைவு கேட்டு ஓடோடி வந்து உதவிய அயலவர்கள், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் T.P.மூலமாக அனுதாபந் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றிகள்

இன்று (15.08.2003) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் வீட்டுக்கிருத்தியம், மதியபோசனம் ஆகிய நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

*125, பருத்தித்துறை வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்*

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

(21456) (29)

## மரண அறிவித்தல்

### நவரட்ணம் கணேசலிங்கம்

முல்லாத்தணை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட நவரட்ணம் கணேசலிங்கம் அவர்கள் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரட்ணம் மற்றும் இராஜலக்சுமியின் மூத்த மகனும் பத்மாதேவியின் அன்புக் கணவரும் நவரூபனின்(கனடா) அன்புத் தந்தையும் கல்பனாவின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற கதிர்காமநாதன்(லண்டன்) மற்றும் விஜயகுமாரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராமலிங்கம் - பஞ்சாமிர்தத்தின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.29, குளப்பிட்டி வீதி,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

தகவல்:
இ.ஜெயபாலன் (மைத்துனர்).

(C/29522) (13-12-16-31)


**சுலபமாக - சொகுசாக - சிக்கனமாக**

**சிங்கப்பூர் சுற்றுலா**

யாழ்ப்பாணத்திலிருந்து 1 நாளில் சிங்கப்பூர்!

31-8-2003 இல் எக்ஸ்போ எயர் விமானம் மூலம் இரத்மலானை செல்ல.

01-09-2003 இல் SQ401 மூலம் 1.35 மணிக்கு சிங்கப்பூர் செல்ல.

- யாழ்ப்பாணம் - இரத்மலானை - கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் - இலவச தொடர்பு கட்டுநாயக்கா - இரத்மலானை - யாழ்ப்பாணம்.
- சிங்கப்பூர் - தங்கும் Summer View Hotel - சிங்கப்பூர் இலவச போக்குவரத்து.
- Summer View Hotel 3 நாள் இலவச தங்குமிட வசதி (ஒரு அறை - பதிவு வேண்டும் - இருவர்/மூவர்)
- காலை உணவு இலவசம்.

04-09-2003 - சிங்கப்பூர் விமான நிலையம் - 19.00 மணி

05-09-2003 - பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் எக்ஸ்போ எயர் மூலம் மு.ப. 11.45 இற்கு பலாலி விமான நிலையம்.

இத்தனை வசதிகளுடன் கூடிய உல்லாசப் பயணம் செய்வதற்கு -

போக்குவரத்துக் கட்டணம் : ரூபா 45,000 - (ஒருவருக்கு)
ரூபா 30,000 - (சிறுவர்களுக்கு தனிப்படுக்கை இல்லை)
ரூபா 37,000 (சிறுவர் - தனிப்படுக்கை வசதி)

சிங்காரச் சீமையில் சொர்க்கம் போன்ற அழகு மிகு இடங்களுக்கு சுற்றுலா செல்ல வசதிகள் செய்து தரப்படும். இவற்றுக்குரிய கொடுப்பனவுகளை நீங்களே செய்யவேண்டும்.

இனி ஏன் தயக்கம் - சகல விவரங்களுக்கும் உடனே தொடர்புகொள்ளவும்.

COS MOS MARKETING SERVICES,
200, K.K.S. ROAD,
JAFFNA. T.P - 222-5461.

(C29521) (32-12-18)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17 ஆயிரம் பேரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சேர்ப்பின் போது இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

இலங்கையில் முப்படைகளுக்கும் சம்பள உயர்வுகள் வழங்கப்படவுள்ளன. திறைசேரி இதற்கு அனுமதியை வழங்கும் புதிதாக இணைபவர்களுக்கு இந்த அதிகரிப்பு கிடைக்கும். இதன்படி 8,065 ரூபா முதல் 13 ஆயிரம் ரூபா வரை சாதாரண சிப்பாய்க்கு சம்பளம் கிடைக்கும்.

சமாதானம் நிரந்தரமானால் இலங்கை இராணுவம் சமாதானப் படையாக மாற்றியமைக்கப்படும். சர்வதேச சமாதானப் படையில் இலங்கை இராணுவத்தை இணைத்துக் கொள்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறு உள்வாங்கப்படவுள்ள இராணுவத்தினர் ஒரு பகுதியினருக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஐ.நா.சமாதானப் படையில் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த நான்கு உயர் அதிகாரிகள் தற்போது கடமையாற்றி வருகின்றனர். கொங்கோ மற்றும் ஆபிரிக்க நாடுகளில் இவர்கள் கடமை புரிகின்றனர். அமைதிப்படையில் கடமையாற்றும் ஒருவருக்கு 1500 டொலர் வரை ஊதியம் கிடைக்கிறது.

விடுதலைப் புலிகளின் குரங்குபாஞ்சான் முகாம் விவகாரத்தில் இராணுவம் கடுமையான நடவடிக்கைகளில் ஈடுபடாது. இப்படியான சிறு பிரச்சினைகளை பூதாகரமாக்கிப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நாம் சீர்குலைக்கமாட்டோம்.

இருபது வருட கால யுத்தம் ஓய்ந்து தற்போது அமைதி நிலை உருவாகியுள்ளது. தொடர்ந்து யுத்தம் செய்தவர்கள் உடனே இயல்பு வாழ்க்கைக்கு வருவது என்பது சாதாரண விடயம் அல்ல.

யுத்தம் ஓய்ந்திருக்கும் இந்தச் சூழ்நிலையில் சிறுசிறு பிரச்சினைகள் இடம்பெற்று வருகின்றமை உண்மைதான். ஆனால், அவற்றிற்கு உடனடியாகத் தீர்வு காணமுடியாது. காலப்போக்கில் அவை தானாக ஒழிந்து விடும். குரங்குபாஞ்சான் முகாம் விவகாரம் காலப்போக்கில் தீரும் என நாம் நம்புகிறோம்.

இராணுவத்தில் இருந்து சுமார் ஐம்பதாயிரம் பேர் தப்பிச் சென்றுள்ளனர். அவர்களைச் சட்டபூர்வமாக பதவியிலிருந்து நீக்குவதற்கு இராணுவத் தலைமையகம் முடிவு செய்துள்ளது.

இதன்படி செப்ரெம்பர் மாதம் கம்பஹா மாவட்டத்தில் இடம்பெறவுள்ள நடமாடும் சேவையில், தலைமறைவாகியுள்ள இராணுவத்தினர் தமது இராஜினாமாக் கடிதங்களைக் கையளிக்கலாம்.

அவ்வாறு இராஜினாமா கடிதங்களைக் கையளிப்பவர்கள் இராணுவத்திலிருந்து நீக்கப்பட்டவர்களாக கருதப்படுவர். அவர்கள் வேறு தொழில்களில் ஈடுபடலாம். ஆனால், இராணுவத்திலிருந்து ஆயுதங்களுடன் தப்பிச் சென்றவர்களுக்கு எந்தவித மன்னிப்பும் வழங்கப்படமாட்டாது. 54 பேர் ஆயுதங்களுடன் தப்பிச் சென்றுள்ளனர் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் பலர் சட்ட விரோத செயல்களில் ஈடுபட்டு வந்தமை தெரிய வந்துள்ளது.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த செய்தியாளர் மாநாட்டில் பிரிகேடியர் சனத் கருணாரட்ண, பிரிகேடியர் சிறிநாத் ராஜபக்ஷ ஆகியோரும் உரையாற்றினர்.

## மனித....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தனது விஜயத்தின் போது குடாநாட்டிலுள்ள மனித உரிமைகள் ஆர்வலர்களையும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து மனித உரிமைகளின் இங்குள்ள நிலை பற்றி கலந்து உரையாடவுள்ளார்.

இன்று காலை 9.00 மணிக்கு சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் பிரதிநிதி வணபிதா ஏ.ஐ.பேர்ணாட்டைச் சந்தித்து உரையாடவுள்ளார். நண்பகல் 12 மணிக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ்.அலுவலகத்தில் அதிகாரிகளுடனான கலந்துரையாடலில் கலந்துகொள்ளும் அவர் பிற்பகல் 3 மணிக்கு யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நடைபெறும் மனித உரிமைகள் தொடர்பான கலந்துரையாடலிலும் பங்குபற்றுவார்.

## கொழும்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதுவரை 6இலக்கங்களைக் கொண்டிருந்த தொலைபேசி இலக்கங்கள் இன்று முதல் 7 இலக்கங்களைக் கொண்டிருக்கும். அதாவது ஏற்கனவே உள்ள தொலைபேசி எண்களுக்கு முன்னால் 2 என்னும் இலக்கத்தை மேலதிகமாகச் சேர்க்கவேண்டும்

உதாரணமாக முன்னர் 501321 என இருந்த இலக்கம் இன்று முதல் 2501321 என வழங்கும். வெளியிடங்களில் இருந்து இந்த இலக்கத்துடன் தொடர்பு கொள்ள வேண்டியவர்கள் முன்னர் போல் 01-இலக்கத்தைப் பயன்படுத்தி பின்னர் 2501321 எனத் தொடர்பு கொள்ளவேண்டும். கீழே குறிப்பிட்டுள்ள சகல பிரதேசங்களுக்கும் இந்த விதி பொருந்தும்.

மஹரகம, வெலிக்கட, வத்தளை, கல்கிசை, மருதானை, ஹோமாகம, பியகம, கோட்டே, கொழும்பு மத்தி, ஹெவலொக்ரவுண், மொறட்டுவ கொம்பனி வீதி, நுகேகொட, ரத்மலானை, அங்கொட, கடவத்தை, பிலியந்தல, களனி.

இருப்பினும் முன்னர் 2 என்னும் இலக்கத்துடன் ஆரம்பித்த தொலைபேசிகளுக்கு இந்த மாற்றம் பொருந்தாது. (ம)

## அரசு- புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆவணத்தில் இரண்டு அல்லது ஒரு தலைமை இருக்கலாம் எனக் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் ஜனாதிபதி தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசின் இணைப்பாளர் குறிப்பிட்டது போல இந்த இரு கடிதங்களுக்கும் இடையில் முற்றுப் புள்ளி, காற்புள்ளி ஆகிய விடயங்களில் மட்டும் வேறுபாடு இருக்கவில்லை. இவற்றுக்கிடையில் பாரிய வேறுபாடுகள் உள்ளன என்றும் ஜனாதிபதி தனது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

## மட்டக்களப்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நடந்த இடத்திலேயே அவர் மரணமானார்.

சடலம் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இச்சம்பவத்தில் உயிர் தப்பியவர் அக்ஸ்மின் என்றழைக்கப்படும் முஸ்லிம் நபர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளே இக் கொலையைச் செய்திருக்கின்றனர் என்று ஈ.பி.டி.பியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் கூறியுள்ளார்.

# இலவச மருத்துவமுகாம்

யாழ்ப்பாணம்,ஓக.15

தீவக லயன்ஸ்கழக ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3.00 மணி வரை அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தில் இடம்பெறும். (ம)

## 21 முதல் 27 ஆம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசின் வரைவு தொடர்பாக நோர்வே சமாதான அனுசரணையாளர் எரிக்சொல்ஹெய்ம், புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனுடன் விரிவாகக் கலந்துரையாடியுள்ளார். இச்சந்திப்பு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. அரசின் வரைவிலுள்ள குறைநிறைகள் தொடர்பாகப் பரிசீலனை செய்வதற்காகவே புலிகள் பிரான்ஸில் கூடுகின்றனர்.

மூன்று வாரங்களில் புலிகளின் மாற்று ஆலோசனைகள் நோர்வே அனுசரணையாளர்கள் மூலம் அரசுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று புலிகள தெரிவித்துள்ளனர்.

எனவே, தடைப்பட்டுள்ள அரசு - புலிகள் பேச்சு செப்ரெம்பர் மாத இறுதிக்குள் மீண்டும் நடைபெறும். அப்போது அடுத்து நடைபெறும் பேச்சுக்கான அட்டவணை இரு பக்கத்தாலும் கூடித் தயாரிக்கப்படும்.

- இவ்வாறு அமைச்சர் பீரிஸ் கூறினார்.

## திருமலையில் இரு இளைஞர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிரேத பரிசோதனையை திருகோணமலை பொது வைத்தியசாலையில் சுகாதார அத்தியட்சகர் டாக்டர் திருமதி ஞானகுணானந்தன் மேற்கொண்டார். மரண விசாரணையை பதில் நீதிவான் செல்வி சுபாஷினி சித்திரவேல் நடத்தினார்.

மூளையூடாகத் துப்பாக்கிச்சூட்டுச் சன்னங்கள் சென்றதால் இந்த மரணங்கள் சம்பவித்தன என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணைகளின் பின்னர் சடலங்கள் இரண்டும் மூதூருக்கு எடுத்துச்செல்லப்படுவதற்காக நேற்றுப்பிற பகல் 1.30 மணியளவில் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன.

இந்தக் கொலைச்சம்பவம் பற்றிய தகவல் நேற்றுக்காலை மூதூரில் பரவியதையடுத்து அங்கு பதற்றம் ஏற்பட்டது; கடைகள் மூடப்பட்டன; வீதிகள் மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடின. அரச அலுவலகங்கள், பொது நிறுவனங்களுக்கு ஆள்கள் சமுகம் தரவில்லை. எந்தநேரம் என்ன நிகழுமோ என்ற அச்சம் நிலவியது

மூதூரில் தமிழ் இளைஞர் ஒருவரைக் காணவில்லை என்று நேற்று முற்பகல் திருகோணமலைக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

சம்பவத்தைக் கேள்விப்பட்டதும் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நேற்றுக்காலை உடனடியாகத் திருகோணமலை நோக்கி விரைந்தார்.

உயிரிழந்த இருவரின் நல்லடக்கம் நேற்றுப்பிற்பகல் மூதூரில் நடைபெறவிருந்தது.

மூதூர்பகுதியில் மேலதிகப் பொலீஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

திருகோணமலை நகரம், கிண்ணியா போன்ற பகுதிகளில் அமைதி நிலை நிலவியது.

(ம)


**N.E.I. நல்லூர்**
சிங்கள வகுப்புகள்
By:A.இராஜரட்ணம்
ஆரம்பம் : 16.08.2003
சனி 10.00 a.m.
3 ஆம் தவணைக்கான வகுப்புகள் அனைத்தும் ஆரம்பமாகிவிட்டன.
(21416)(12)

**வெளிவாரிப் பட்டப் படிப்புகள்**
கல்வியாண்டு 2004/2005
★ கலைமாணி B.A.
★ தொழில் நிர்வாகமாணி B.BA.
★ வணிகமாணி B.Com.
★ விஞ்ஞான மாணி B.Sc.
விரிவுரைகள் 07.09.2003இல் ஆரம்பமாகின்றன.
விபரங்களுக்கு:
இயக்குநர்
பட்டப்படிப்புகள் கல்லூரி
57/13, ஸ்ரான்லி வீதி,
(இலங்கை வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்.
(C/29496)(29)

**NIRU**
KONDAVIL
A/L 2005
COM.MATHS
BY:KANTHAVANASELVAN
ஆரம்பம்:18.08.2003
(திங்கள்)
(சி-21452)

**SUBRA(14)**
சித்தன்கேணி
A/L DAY CLASS
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள்
ஆரம்பம்:15.08.2003
காலை 7.30 மணி
★ எமது வழமையான ஆசிரியர் குழு.
★ வாரத்தில் 18 மணி நேர வகுப்புகள்
★ மாதாந்தம் பயிற்சிப் பரீட்சை.
★ கடந்தகாலப் பெறுபேறே எமது திறமை.
(C-29452)(12-)

**BRIGHTMAN**
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்.
A/L 2003
கணித, உயிரியல் பிரிவுகள்
DAY CLASS
PHY. திரு.ஜெயசீலன் (B.Sc.)
CHE. திரு.பவான் (B.Sc.)
C.Maths திரு.ஐங்கரன் (B.Sc.)
BIO.திரு.ஞானேந்திரன் (B.Sc.)
ஆரம்பம்: 16.08.2003 SAT. 7.30 a.m.
(21300)(12)

**வணிகக் கல்வி**
PAPER CLASS
A/L 2004
By: திரு.S.மகேசா
Sat.,Sun.4-6 p.m.(S.L.T.)
ஆரம்பம்: 16.08.2003 (Sat.)
Note: பகுதி I, II முழுமையாக அலகு ரீதியாக மீட்கப்படும்.
விக்னா கல்வி நிறுவனம்
(21424)(12-)

**தென்னிந்தியாவில் இருந்து**
யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு யாழ்ப்பாண மக்களின் வேண்டுகோளுக்கிணங்கி 2ஆவது முறையாக வருகைதந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர்



ராஜகுருசாமி
அவர்கள்
★ கைரேகை ★ ஜாதகம் ★ எண்கணிதம்
★ பெயர்ராசி ★ திருமணப்பொருத்தம்
கைரேகை மட்டும் 9 மணிமுதல் 2 மணிவரை.
இவற்றில் பல வருட அனுபவமும் புகழும் பெற்றவர்.
காலை 9.00மணிமுதல் மாலை 6.00மணிவரை.
(24-12-18) ராஜகுருசாமி T.P. 5867
மிலன்ஸ் மல்ரி கொம்பிளக்ஸ்
60/1 [112], TEMPLE ROAD [Near ICRC], JAFFNA.
(21180)

**அறிவித்தல்**
**கவின் கலைகள் பயிலக இடம்மாற்றம்**
இதுவரை காலமும் இல.16,மாட்டின் வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த எமது கவின் கலைகள் பயிலகம் நாளை (16.08.2003) சனிக்கிழமை முதல் இல.160, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்டடத்தில் (புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்துக்கு அருகில்) இயங்கும் என்பதை எமது பயிலக ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம். - திருமறைக் கலாமன்றம்.

**LOGIC**
S.R.J.சுதன்
A/L DAY
ஆரம்பம்: 16.08.2003
சனி 12.00 p.m.
பிறைற்றின் கல்வி நிலையம்
சங்கத்தானை, சாவகச்சேரி.

**இந்திய சாஸ்திரியார் வருகை**



முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணியபூமிக்கு வருகைதந்துள்ளார்
பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற
S.N.குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.
(காலை 8மணிமுதல் மாலை 5மணிவரை)
ஸ்ரான்லி லொட்ஜ்
இல.711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 077-6080660, 021-2226188
(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)
(31-12-18-30) (20411)

**விக்னா கல்வி நிறுவனம்**
A/L DAY CLASS
கலைப்பிரிவு


| | | |
|---|---|---|
| E.co. | திரு.விக்கி | - 7-8 |
| Tam. | திரு.குழந்தை | -8-9 |
| H/C. | திரு.பத்மராஜ் | - 7-8 |
| Geo. | திரு.பாபு | -10-11 |
| Hin. | திரு.தரன் | -11-12 |
| Hist. | திரு.சுதன் | -12-1 |
| P/Sci. | திரு.றொபின்சன் | -1-2 |
| Chri. | திரு.வசந்தன் | - 9-10 |
| Drama | திரு.மதி | -11-12 |
| Log. | திரு.சயந்தன் | |


சனி.ஞாயிறு 2 – 3 வரை.
ஆரம்பம்: 18.08.2003 Mon. 7a.m.
(21425)(12)


## மரண அறிவித்தல்கள்

### சண்முகராசா கைலாசபதி

நல்லூர், முத்திரைச் சந்தையைப் பிறப்பிடமாகவும் கில்னர் ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட சண்முகராசா கைலாசபதி 11-08-2003 காலை இறைவனடி சேர்ந்தார். அவரது மரண அறிவித்தலை ஏற்பதில் ஏற்பட்ட தவறு காரணமாக அது நேற்றைய பத்திரிகையில் பிரசுரமாகவில்லை. இன்று 10 ஆம் பக்கத்தில் அது பிரசுரமாகியுள்ளது. இதனால் அவர்களது குடும்பத்துக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்காக மனம் வருந்துகிறோம்.

### கந்தையா சிவயோகநாதன்

கோப்பாய் வடக்கு, கிராமன் ஒடையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னம்மா தம்பதிகளின் மகன் கந்தையா சிவயோகநாதன் நேற்று (14.08.2003) வியாழக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் மங்களேஸ்வரி (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆசிரியை) இன் பாசமிகு கணவரும் சிவதர்சனின் பாசமிகு தந்தையும் சோமசுந்தரம், பத்மநாதன், காலஞ்சென்ற பரமேஸ்வரன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பி.ப 2 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் கந்தன் காடு இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இதனை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் வடக்கு,
கோப்பாய். (சி-29524)(32-12-18)

தகவல்:
மங்களேஸ்வரி
(மனைவி)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.08.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகள் என்ற மீன்களுக்கு மக்கள் என்ற சமுத்திரமே பலமாகும்!

## மகளிர் துணைப்பொறுப்பாளர் உரை

வலி.வடக்கு,ஓக.15

விடுதலைப் புலிகள் என்ற மீன்கள் மக்கள் என்ற சமுத்திரத்தில் வாழ்கின்றனர். மக்களால்தான் புலிகளுக்குப்பலம்.

மேற்கண்டவாறு விடுதலைப் புலிகளின் மகளிர் அமைப்புத் துணைப் பொறுப்பாளர் செல்வி க.தமிழ்விழி குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரணி பேராளர் மாநாடு கடந்த ஞாயிறன்று பளை மகா வித்தியாலயத்தில் சொலமன் சூ.சிறில் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய செல்வி தமிழ்விழி மேலும் தெரிவித்ததாவது:-

இந்த மக்களுக்கென்று சுதந்திரமான சமூக பொருளாதார அபிவிருத்தி கொண்ட நாடு அமையவேண்டியது அத்தியாவசியமாகும். இத்தகைய ஒரு போராட்டத்தில் நான் இணைந்து கொண்டதையிட்டு பெருமைப்படுகிறேன்.

இன்று இப்போராட்டம் வளர்ச்சி அடைந்து உலகின் முன் தலை நிமிர்ந்து நிற்கின்றது என்றால் மக்களின் பங்களிப்பே காரணமாகும்.

கடலில் வாழும் மீன் நீருக்கு வெளியே வருமாக இருந்தால் அந்த மீன் இறந்துவிடும். அதேபோன்று, மக்கள் என்ற சமுத்திரத்தின் மத்தியில்தான் விடுதலைப் புலிகள் இருந்து வளர்ந்து கொண்டிருக்கின்றோம்.

அரசுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தைத் தொடர்ந்து மக்களிடம் அரசியல் நடவடிக்கைக்காக ஆயுதம் இன்றி செல்கின்றீர்கள். மக்கள் உங்களுக்கு ஆயுதங்களாக இருந்து பாதுகாப்புத் தருவார்கள் என்று தலைவர் எம்மிடம் கூறியிருந்தார்.

தலைவர் மக்கள்மீது வைத்த நம்பிக்கையையும் அவரது தீர்க்கதரிசனத்தையும் வேலணை, நெடுந்தீவு, மானிப்பாய், திருமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் சீருடையினர் எம்மீது வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டபோது உணர்ந்து கொண்டோம். தலைவரின் தீர்க்கதரிசனப்படி மக்கள்தான் ஆயுதமாக இருந்து அப்போது எம்மீதான வன்முறையைத் தடுத்து நிறுத்தினார்கள்.

இம்மண்ணில் போராட்டம் இடம் பெற்றுக்கொண்டு இருந்தபோது போராளிகளும் மக்களும் கைகோத்துக் கொண்டு எதிரியுடன் போராடி வெற்றிகளைக் கண்டோம். அதேபோன்று சமாதான காலத்திலும் எமக்குள் பிரச்சினைகள் எதுவும் இன்றி கைகோத்துச் செல்ல வேண்டியது அத்தியாவசியமாகும்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு பலமாதங்கள் கடந்த நிலையிலும் எமக்கு இயல்பு வாழ்க்கை இன்னும் கிடைக்கவில்லை. எமது இயல்பு வாழ்க்கை கிடைப்பதற்காக நாம் அனைவரும் இணைந்து குரல் கொடுக்கவேண்டும் - என்றார் தமிழ்விழி.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசியல்துறை விரிவுரையாளர் க.சகாயசீலன் உரையாற்றும்போது தெரிவித்ததாவது:-

தேசிய எழுச்சிப் பேரணியென்பது இன்று நேற்று உருவாக்கப்பட்டவை அல்ல. 1956ஆம் ஆண்டு தனிச் சிங்கள மொழிச்சட்டம் கொண்டு வரப்பட்டபோதும் 1961 ஆம் ஆண்டு சத்தியாக்கிரகத்தின்போதும் 1968ஆம் ஆண்டு மாணவர் எழுச்சியின்போதும் எழுச்சிகொண்டு மக்கள் தம்மாலான எழுச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

இதேபோன்று, இந்திய இராணுவம் இம்மண்ணில் காலடி வைத்த போதுங்கூட எழுச்சி கொண்டு செயற்பட்டு இருக்கின்றார்கள். ஆனால், தற்போது உருவாக்கப்பட்டுள்ள தேசிய எழுச்சிப் பேரவையானது புதிய எழுச்சிப் பரிமாணத்துடன் கட்டமைக்கப்பட்டுள்ளது.

போர்க்காலத்திலும் பார்க்க கூடிய பயத்துடன் சமாதான காலத்தில் வாழ வேண்டிய நிலைமையில் இன்று இருந்துகொண்டிருக்கின்றோம். போர்க்காலத்தில் பொது எதிரிக்கு மட்டுமே பயந்துகொண்டு வாழ்க்கை நடத்தினோம்.

ஆனால், சமாதான காலத்தில் பல்வேறு வகையான எதிரிகளுக்கும் முகங்கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். இன்று கொலைகள், கொள்ளைகள், வல்லுறவுகள் வழிப்பறிகள் எனப் பல அச்சங்களில் பயந்து வாழ்கின்றோம். இந்தநிலை மாற விடுதலைப் புலிகளிடம் நிர்வாகம் வரவேண்டும் - என்றார்.

அருட்திரு. டேவிற் அடிகளார் தனது உரையின்போது தெரிவித்ததாவது:-

இறைவன் என்பவன் எப்பொழுதும் அடக்குபவர் பக்கம் இருப்பதில்லை. அடக்கப்படுபவர் பக்கமே இருந்து வருகின்றார். என்னிடம் சிலர் போராட்டம் வெற்றி பெறுமா என்று கேட்பார்கள் இறைவன் அடக்கப்படுபவர் பக்கம் இருப்பதினால் வெற்றி பெறும் என்று கூறியுள்ளேன்.

இம்மண்ணில் இடம்பெற்றுக் கொண்டு இருக்கும் போராட்டத்தை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும். இதேபோன்று எல்லா மக்களும் போராட்டத்தின் நோக்கத்தை அடுத்தவர்களுக்கு எடுத்துக் கூறக்கூடிய அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

இங்கு கூடியுள்ள மக்கள் அடிமட்டத்தில் இருந்து வந்துள்ளீர்கள். உங்கள் உங்கள் கிராமத்தில் உள்ள மக்களிடையே போராட்டத்தின் நோக்கத்தை எடுத்துச்சென்று கூறுவது உங்களுடைய கடமையாகும் - என்றார்.

(ஒ-4-86)

# கல்வியியற் கல்லூரிகளுக்கு விண்ணப்பிக்கும் மாணவருக்கு

யாழ்ப்பாணம்,ஓக.15

தேசிய கல்வியியற் கல்லூரிக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு உதவும் வகையில், அவர்களது சந்தேகங்களைத் தெளிவாக்கும் நோக்குடனான கருத்தரங்குகளை கோப்பாய் லயன்ஸ் கழகம் நடத்தவுள்ளது.

கல்வி வலயங்கள் ரீதியாக இக் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.

கருத்தரங்கு நடைபெறவுள்ள இடங்கள் மற்றும் நாள்கள் பற்றிய விவரம் வருமாறு:-

நாளை சனிக்கிழமை தீவக வலயத்தில் வேலணை வைத்திலிங்கம் துரைச்சாமி ம.ம.வித்தியாலயத்திலும், யாழ். வலயத்தில் யாழ். இந்துக் கல்லூரியிலும், வலிகாம வலயத்தில் இராமநாதன் கல்லூரியிலும் கருத்தரங்குகள் இடம்பெறும்.

மறுநாள் 17ஆம் திகதி வடமராட்சி வலயத்தில் மத்திய மகளிர் கல்லூரியிலும் தென்மராட்சி வலயத்தில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும் கருத்தரங்குகள் இடம்பெறவுள்ளன.

மேற்படி கருத்தரங்கில் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் கலந்துகொண்டு சந்தேகங்களைத் தெளிவாக்கிக்கொள்ளலாம் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ஒ-6)

## கருத்தரங்கு

வலி.வடக்கு,ஓக.15

தீவக கல்வி வலய உடற்கல்வி ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள் நாளை காலை முதல் யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

உதைபந்தாட்ட விதிகள், ஒழுங்குகள் சம்பந்தமான விரிவுரைகள் நடைபெறுவதற்கான ஒழுங்குகளை உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.மகாலிங்கம் செய்துள்ளார்.

(எ-86)

# தொலைபேசி எண் மாற்றம்

யாழ்ப்பாணம்,ஓக.15

திருகோணமலை மாவட்டத்துக்கான தொலைபேசி இலக்கத்தில் மாறுதல் செய்யப்பட்டுள்ளது. இனிமேல் திருகோணமலைத் தொலைபேசி இலக்கங்களில் மேலதிகமாக 22 என்ற இலக்கம் சேர்க்கப்படவேண்டும்.

இதன்படி திருகோணமலைக்கு 'ரெலிகொம்' தொலைபேசி அழைப்பினை ஏற்படுத்த பிரதேச குறியீடான 026 என்ற இலக்கத்தை அழுத்திவிட்டு மேலதிகமாக 22 என்ற எண்ணையும் அழுத்தவேண்டும். அதனைத் தொடர்ந்து அழைப்பை ஏற்படுத்தவேண்டும். அதனைத் தொடர்ந்து அழைப்பை ஏற்படுத்த வேண்டிய தொலைபேசி இலக்கத்தை அழுத்தித் தொடர்பை ஏற்படுத்தலாம்.

இத்தகவலைப் பொதுமக்கள் நலன்கருதி 'ரெலிகொம்' யாழ். அலுவலகம் அறிவித்துள்ளது. (ஒ)

# வங்கிகள் அறிவிக்கும் சலுகைகள் இறுதிவரை வழங்கப்படவேண்டும்

## யாழ். செயலகக் கணக்காளர் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஓக.15

வங்கிகள் சேமிப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தும்போது அறிவிக்கும் சலுகைகளை இறுதிவரை வழங்க வேண்டும்.

- இவ்வாறு வலியுறுத்தினார் யாழ். செயலகப் பிரதம கணக்காளர் என். சண்முகரத்தினம்.

யாழ். செயலகப் பகுதியில் இடம் பெற்ற மக்கள் வங்கியின் நடமாடும் சேவையின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

பெரும்பாலான வங்கிகள் தாம் வழங்குகின்ற கடன்களுக்கு அதிக வட்டி அறிவிடுகின்றன.

அதேசமயம், தமது வாடிக்கையாளர்கள் வைப்பிலிடும் பணத்துக்கு அதைவிடக் குறைந்தளவு வட்டியே வழங்குகின்றன. மேலும் வரிகள், சேவைக்கட்டணங்கள் எனப் புதிதாக அறவீடுகளையும் வங்கிகள் மேற்கொள்கின்றன. இத்தகைய நடைமுறைகளை வங்கிகள் மீள்பரிசீலனை செய்யவேண்டும் - என்றார்.

இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் பிரதிநிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய எஸ்.சுபசீலன் தெரிவித்ததாவது:-

மக்கள் வங்கியினால் அறிமுகப்படுத்தப்படும் சேமிப்புத் திட்டங்களுக்கான சலுகைகள் இடையறாது வழங்கப்படுகின்றன. அரச ஊழியர்களுக்குக் குறைந்த வட்டியில் வீடமைப்புக் கடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அரச அலுவலர்கள் சம்பளம் பெறும் திகதிக்குப் பின்னர் அவர்களது அலுவலகங்களுக்குச் சென்று அவர்களிடம் சேமிப்பு மற்றும் வங்கிக்குச் செலுத்தவேண்டிய பணம் பெற்றுக் கொள்ளப்படும். இந்த நடைமுறை அரச ஊழியர்கள் வங்கிக்குச் சென்று திரும்புவதில் உள்ள சிரமங்களை நீக்குகிறது - என்று அவர் தெரிவித்தார்.

(ஒ-139)

# குடாநாட்டுக் கடலில் இந்திய மீனவர்கள் பிரவேசிப்பதை உடன் தடுத்து நிறுத்துக!

## இந்தியத் தூதரிடம் கடற்றொழில் சமாசம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.15

யாழ். குடாக்கடல் பிரதேசத்தில் இந்திய மீனவர்கள் அத்துமீறிப் பிரவேசிப்பதைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவும்.

- இப்படி வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் இந்திய உயர்ஸ்தானிகரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக கடற்றொழில் சமாசம், இந்திய உயர்ஸ்தானிகரிடம் தெரிவித்துள்ளதாவது:-

இந்தியக் கடற்பரப்பின் 19கடல் மைல் தூரத்தை கடந்து இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசிக்கும் இந்திய மீனவர்களால் யாழ். குடாநாட்டு மீனவர்கள் மிகவும் பாதிப்படைந்துள்ளனர். எமது கடற்பரப்பின் 12கடல் மைல் எல்லைக்குள் சட்டவிரோத மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றனர். எமது கடற்கரையிலிருந்து சுமார் 500 மீற்றர் பிரதேசம் வரையும் இந்திய மீனவர்கள் பிரவேசிக்கின்றனர்.

எமது மீனவர்களின் கடல்வளங்களை இவர்கள் எடுத்துச் செல்வது மட்டுமன்றி, அவர்களின் மீன்பிடி வலைகளையும் சேதப்படுத்தியும் திருடிச் சென்றும் உள்ளனர்.

இந்திய மீனவர்களின் இந்நடவடிக்கை காரணமாக சுழிபுரம், மாதகல், பருத்தித்துறை, வடமராட்சி கிழக்கு, காரைநகர், நெடுந்தீவு போன்ற பிரதேச மீனவர்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெறும் எட்டுக் குதிரைவலு கொண்ட படகுகளில் தொழில் செய்யும் எமது மீனவர்கள், சுமார் 90 குதிரைவலுக்கொண்ட படகுகளில் அத்துமீறிப் பிரவேசிக்கும் இந்திய மீனவர்களால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். முன்னிரவில் எமது கடல் பகுதிக்குள் பிரவேசிக்கும் இவர்கள், மீன்பிடித்து விட்டு அதிகாலையிலேயே திரும்பிவிடுகின்றனர்.

இது தொடர்பாக இலங்கைக் கடற்படையினரும் பாராமுகமாக உள்ளனர். எனவே, உங்கள் மீனவர்கள், எமது கடற்பகுதியினுள் பிரவேசிக்காது தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள் - இப்படி கடற்றொழில் சமாசம் இந்திய உயர்ஸ்தானிகரிடம்கேட்டுள்ளது. (எ-9)

## விவசாயப் பயிற்சி

தெல்லிப்பழை,ஓக.15

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 30 விவசாயிகளுக்கான வதிவிட பயிற்சிநெறி ஒன்று திருநெல்வேலி விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 18ஆம் திகதிமுதல் மூன்று தினங்கள் நடைபெறவுள்ள இந்த வதிவிட பயிற்சி நெறியில் பழமர நாற்று மேடை அமைத்தல் தொடர்பான தொழில்நுட்ப செய்முறை பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. (எ-150)

# ஒப்பந்தகாரர் தெரிவு குறித்து அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.15

யாழ். மாவட்டத்தில் அமைக்கப் படவுள்ள நீதிமன்றக் கட்டடத் தொகுதியை அமைப்பதற்கான கட்டட ஒப்பந்தகாரர்கள் சர்வதேச ஒப்பந்த விதிமுறைகளுக்கு அமைவாகத் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இது தொடர்பான விண்ணப்பங்கள் நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு, தேசிய ஒருமைப்பாடு அமைச்சின் செயலாளரினால் தற்போது கோரப்பட்டுள்ளன.

ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்ள விரும்பும் கட்டட ஒப்பந்தகாரர்கள் இது தொடர்பான மேலதிக விவரங்கள் தேவைப்படின் திட்டப் பணிப்பாளர், சட்ட மறுசீரமைப்புத் திட்டம், 2 ஆவது மாடி, 'சியுறுசெவன' 46/12, நவம்மாவத்தை, கொழும்பு-02 என்ற முகவரியுடனோ அல்லது 94-01-478452, 478453 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடனே தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நீதி மன்றக் கட்டடத் தொகுதியை அமைப்பதற்கான நிதியை சர்வதேச அபிவிருத்திச் சபை [illegible] யுள்ளது.

(எ-10-ரி)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் கலந்துரையாடல்

யாழ். மாவட்ட பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடல் இன்று பிற்பகல் 1.30மணிக்கு யாழ். ஆரியகுளம் சந்தியில் உள்ள உயர்கல்வி நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான பொதுவான அமைப்பொன்றை ஏற்படுத்துவது தொடர்பாக இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளது. (எ-150)



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபையினால் நடத்தப்பட்ட நிகழ்வு ஒன்றில் சபையின் செயலாளர் எஸ்.பாலச்சந்திரன் மாணவி ஒருவருக்கு இலைக்கஞ்சி வழங்குவதைப் படத்தில் காணலாம். (எ)



சுன்னாகம் விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வில்லமான வாழ்வகத்தின் 15 ஆவது ஆண்டு நிறைவுநாள் விழாவில், வாழ்வகத்தைச் சேர்ந்த செல்வி நா.துஷ்யந்தி மங்களவிளக்கேற்றுகிறார். வாழ்வகப் பொறுப்பாளர் செல்வி அ.சின்னத்தம்பி, பிரதமவிருந்தினரான முன்னாள் சமூக சேவை உத்தியோகத்தர் பி.இராமநாதன் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (எ-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடகப் பயிற்சி பட்டறை

யாழ்ப்பாணம்,ஒக.15

முல்லைத்தீவு மற்றும் உரும்பிராய் பிரதேச நாடகக் கலைஞர்களுக்கான திருமறைக் கலாமன்றம் நடத்தும் மூன்றுநாள் பயிற்சிப்பட்டறை ஒன்று எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 23 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

நாடகக் கலைஞர்களின் ஆளுமை மற்றும் திறன் விருத்தியை நோக்காகக் கொண்டு நடத்தப்படும் இப் பயிற்சிப் பட்டறை யாழ்.மறைக்கல்வி நடு நிலையத்தில் இடம்பெறவுள்ளது. தினமும் காலை 9மணிமுதல் முழுநாளும் இடம்பெறும் இப்பயிற்சிப் பட்டறையில் சுமார் 40 கலைஞர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-9)

## பழமரக்கன்று விநியோகம்

மானிப்பாய்,ஒக.15

மானிப்பாய் ஸ்ரீசத்தியசாயி மனித மேம்பாட்டு வித்தியாலயத்தில் எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பழமரக்கன்றுகள் மா, தோடை, பலா, கொய்யா போன்றவை இலவசமாக வழங்கப்படவுள்ளன.

காலை 9.00 மணிமுதல் இவை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-90)

## வீதி பலத்த சேதம்

மானிப்பாய்,ஒக.15

மானிப்பாய் - சுதுமலை அண்ணாமலை வீதி நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இதனால் இந்த வீதியில் பயணம் செய்யும் பாதசாரிகள் வரும் சிரமங்களை அனுபவிக்க நேரிடுவதாகக் கூறப்பட்டது. (எ)

## வாராந்த நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக.15

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டுப் பேரவையால் வாரந்தோறும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தப்பட்டுவரும் நிகழ்வுத் தொடரில் இன்று காலை 10.30 மணிக்கு 'அமாவாசையில் பூரணை' எனும் விடயம் பற்றி சிவத்திரு. வ.குமாரசாமிஐயா சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். அறிமுகவுரையை வே.தர்மராஜா நிகழ்த்துவார். (ஒ-10-173)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஒக.15

வாசுதேவலிங்கம் முத்தழகன் எழுதிய 'புலம்பெயர்ந்தவர்களின் புலம்பல்' நூலின் வெளியீட்டு விழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு தேசிய கல்வியற்கல்லூரியின் உபபீடாதிபதி பா.தனபாலன் தலைமையில் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

நூலின் வெளியீட்டுரையை பேராசிரியர் அ.சண்முகதாஸ் நிகழ்த்தவுள்ளார். (ஒ-10-23)


### ஒப்பரேற்றர் தேவை

சங்கானை நிறைஞ்சனாஸ் தியேட்டருக்கு ஒப்பரேற்றரும், ஒப்பரேற்றராக வேலை பழக விரும்புவர்களும் தேவை. 17.08.2003 ஞாயிறு காலை 10.00 மணிக்கு நேரில் வரவும்.

★ தங்குமிட வசதி உண்டு.

-மனேஜர்.

(சி-29493) (26)



ZIA ICT BIT

Academic Year 2003/2004
1st semester
IT1101:Mathematics for computing I

Commence on
19th August 2003

Z to Infinity IT Academy
No. 7(1/6), Upstairs, Modern Market, Palaly Road, Thirunelvely Junction, Thirunelvely.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணம் பல.நோ.கூ.சங்கத்தின் புதிய தலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ள

உயர்திரு.

### சொலமன் சூ.சிறில்



அவர்களை மனமாரப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

போரினாலும் பொருண்மிய தடைகளாலும் பாதிக்கப்பட்ட வன்னிவாழ் மக்களுக்காக குரல் கொடுத்தும் போஷாக்கற்ற மாணவர்களுக்கு கூட்டுறவினூடாக மதிய இலைக் கஞ்சி திட்டத்திற்கு பெரும் பங்காற்றிய தங்களை நன்றியுடன் நினைக்கின்றோம். பணி தொடர வாழ்த்துக்கள்.

~ வன்னி வாழ் மக்கள்

தகவல்:
வைத்தியகலாநிதி,
வீ.கே.திருலோகமூர்த்தி
(J.P.U.M)

(21431) (25-21-14-16)



உ
கணபதி துணை



திருவருள்மிகு
### வரஸ்தலம் கற்பக விநாயகர் தேவஸ்தானம்
பன்னாலை

## மஹோற்சவ கால அபிஷேக விஞ்ஞாபனம்

சுபானு வருடம் - 2003

*ஆரம்பம்:* 16-08-2003 சனிக்கிழமை
*நிறைவு:* 27-08-2003 புதன்கிழமை
*வைரவர் பொங்கல்:* 28-08-2003 வியாழக்கிழமை

மேற்படி நாள்களில் காலை 9.30 மணியளவில் அபிஷேகம் ஆரம்பமாகி விசேட பூஜை நடைபெற்று 11.00 மணியளவில் நிறைவுபெறும்.

மேற்படி ஆலயத்தில் கர்ப்பக்கிரகம் தொட்டு இராஜகோபுரம் வரையிலான பல்வேறு திருப்பணிகள் எம் பெருமானின் திருவருளுடன் அடியார்களின் அரும்பொருளும் சேர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, இத்தர்மமப் பணிக்கு தொடர்ந்தும் கை கொடுத்து உதவுமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

இ.சபாரத்தினக்குருக்கள்
ம.மகேந்திரசர்மா
ஆதீனகர்த்தாக்கள்

(21442)(21-19-14)



## நெஞ்சினிலே ஓராண்டு

மண்ணில் 30 - 08 - 1925

விண்ணில் 28 - 07 - 2002



### அமரர் நல்லதம்பி நடராசா

(ஓய்வுபெற்ற தபால் விநியோகிப்பவர், தையிட்டி, காங்கேசன்துறை)

திதி: அபரபக்க சதுர்த்தி

நடராசா அண்ணை (தாத்தா) எங்கள் ஊர் அறிந்த பேர்
அவர் நகைச்சுவைப் பேச்சை அறியும் எங்கள் ஊர்
ஆண்டொன்று சென்றாலும் எங்கள் உள்ளத்தில்
உன் பேச்சும் செயலும் என்றும் அழியாது!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

திருமதி நடராசாவும்
குடும்பத்தினரும்,

கலட்டி வீதி, கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(21430) (19)



### யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)
### திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்

## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் பின்வரும் நிரந்தர பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எமது சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்களை அலுவலக வேலைநாள்களில் ரூபா10/- செலுத்திப்பெற்று பூர்த்திசெய்து 21.8.2003 ஆம் திகதி பி.ப.4.00 மணிக்கு முன்பு கிடைக்கத்தக்கதாக பொதுமுகாமையாளர், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

1. பதவி: விற்பனை உதவியாளர் (நிரந்தரம்)
2. பதவி இல: 165/88 இன் படி குறி: 308/15
3. சம்பளத்திட்டம்: 31/99 இன்படி 3500 - 65 x 10-70 x 10-4850
4. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:
   அ. கூட்டுறவுச்சங்க ஊழியர் 17ஆம் சம்பளத்திட்டத்தில் விற்பனை உதவியாளர் பதவி ஒன்றில் ஐந்து வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.
   அல்லது
   ஆ. கூட்டுறவுப்பணியாளர் தராதரப்பத்திரம் (சாதாரணதரம்) சான்றிதழ்/ க.பொ.த. (சாதாரணதரம்) சான்றிதழ் எண்கணிதம்/ வர்த்தக எண்கணிதம்/கணிதம் மற்றும் சிங்களமொழி/தமிழ்மொழி உட்பட 6 பாடங்களில் சித்தி.
5. வயது:
   விண்ணப்பதாரிகள் 21.08.2003 இல் 18 வயதிற்குக் குறையாதவர்களாயும் 45வயதிற்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
6. பொது நிபந்தனைகள்:
   1. யாழ். மாவட்டத்தில் இரண்டு வருடங்களுக்கு மேலாக வசித்தமையை உறுதிப்படுத்துவதற்குச் சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும்.
   2. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு பிரமாணங்களுக்கு அமைவாக நிர்வாகத்தினால் விதிக்கப்படும் பிணையைச் செலுத்துதல் வேண்டும்.
   3. ஆள்சேர்ப்புச் செய்யப்படுபவர் இரண்டு வருட கால தகுதிகாண காலப் பகுதிக்கு அமைந்தவராதல் வேண்டும்.
   4. கல்வித்தகைமைகள், அனுபவம், வயது, வதிவிடத்தை உறுதிப்படுத்துதல், நற்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இதற்கமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
   5. தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன் அவர்கள் பதவிகளுக்காக விண்ணப்பிக்கும்போது தமது விண்ணப்பங்களைச் சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்புமிடத்து விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அது வெளிப்படுமிடத்து நியமனத்தை இல்லாதொழிப்பதற்கும் வழிவகுக்கும்.
   6. விண்ணப்பத்தில் காட்டப்படும் தகவல்களும், இணைப்புகளும் உண்மையானதும், செம்மையானதும் என உறுதிப்படுத்துவதோடு ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் இதில் ஏதேனுமொன்று பிழையானதெனவோ அல்லது பொய்யானதெனவோ காணப்படுமிடத்து நஷ்டஈடு எதுவுமின்றி உடனடியாக பதவிநீக்கம் செய்யப்படுவீர்கள் என்பதனை தாங்கள் அறிந்து கொள்ளவேண்டும்.

– பொது முகாமையாளர்.

(சி-29513)(25-21-19-16)



## இரண்டு வீடுகள் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்துக்கு அருகில் 3பரப்பு 7குழிகள் கொண்ட காணியில் இரண்டு வீடுகள் உடனடி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

S. தனராஜா
48/3,முதலாம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(26-21-14-19) (21437)



## உடனடி வேலைவாய்ப்பு

யாழ். நகரில் இயங்கும் உணவகத்திற்கு பின்வருவோர் தேவை.

★ ரீ மேக்கர்
★ உணவு பரிமாற்றுவோர் (Waiter)
★ கொத்துரொட்டி தயாரிப்பாளர்
★ மேலைத்தேய, கீழைத்தேய, இந்திய உணவு தயாரிப்பாளர்கள்

மேற்குறிப்பிட்டவர்கள் பகுதிநேரமாகவும் வேலை செய்யலாம்.
அனுபவத்திற்கும் திறமைக்கும் ஏற்ப ஊதியம் வழங்கப்படும்.
மாலை 5மணிக்கு பின் நேரில் வரவும்.

சண்ஜெயபூட்லாண்ட்
இல.414, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

SHAN JAEYA FOOD LAND
No. 414, Hospital Road,
Jaffna.

(21436) (26-21-14-16)







உலகப் புகழ் பெற்ற L.G
குளிர்சாதனப் பெட்டிகள்
Abans நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோக சேவையில் பெற்றிட



LG

JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans

141, POWER HOUSE ROAD, JAFFNA
TEL: 021-222-5766
(C-26637)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் வைத்து

# பொதுமகன் தாக்கப்பட்ட சம்பவம் பொலீஸார் ரூ.5 ஆயிரம் வழங்கினர்

யாழ்ப்பாணம்,ஓக.15

கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் வைத்து பொதுமகன் ஒருவர் பொலீஸாரினால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான பிணக்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகம் சுமுகமான முறையில் தீர்த்துவைத்துள்ளது.

கோண்டாவிலைச் சேர்ந்த நா.கந்தசாமி என்பவர் தான் கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் வைத்துப் பொலீஸாரால் தாக்கப்பட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின யாழ் அலுவலகத்தில் முறைப்பாடொன்றைச் செய்திருந்தார்.

இது தொடர்பான பூர்வாங்க விசாரணையை மனித உரிமை ஆணைக்குழு மேற்கொண்டிருந்தது. இறுதி விசாரணை கடந்த 12 ஆம் திகதி நடைபெற்றது. தாக்கப்பட்ட நபருக்கு நஷ்ட ஈடாக 5 ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கு பொலீஸார் முன்வந்ததை அடுத்து அப்பணம் மனித உரிமை ஆணைக்குழு ஊடாக தாக்குதலுக்கு இலக்கான நபருக்கு வழங்கப்பட்டது. இதனை அடுத்து இரு தரப்பினரும் சமரசமாகச் செல்ல முன் வந்தனர். (எ-8)

# சாரதிகள் பற்றி பல்வேறு முறைப்பாடுகள் விவரம் அறிந்து 'ஓட்டோவில்' ஏறுங்கள்!

## வீண் சிரமத்தை தவிர்க்க சங்கம் ஆலோசனை

யாழ்ப்பாணம்,ஓக.15

ஓட்டோக்களில் பிரயாணம் செய்யும் பயணிகள், குறித்த ஓட்டோ தொடர்பான விவரங்களை அறிந்து வைத்திருப்பதன் மூலம் ஏற்படும் பல்வேறு அசௌகரியங்களிலிருந்து பாதுகாப்புப் பெறமுடியும்.

- இவ்வாறு வடபிராந்திய ஓட்டோச் சங்க அலுவலர் ஒருவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:-

வடபிராந்திய ஓட்டோச்சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட ஓட்டோக்களின் வலது பக்க மேல் மூலையில் ஓட்டோ தரிப்பிட இலக்க விரைம் பொறிக்கப் பட்டிருக்கும். அதனுடன் ஓட்டோவின் இலக்கத்தையும் பயணிகள் கவனத்தில் கொள்வது நல்லது.

எமது சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட ஓட்டோக்களில் பயணஞ் செய்யும் பிரயாணிகள், அவர்களின் உடைமைகள் தொடர்பில் ஏற்படும் வசதியீனங்கள் மற்றும் முறைப்பாடுகள் தொடர்பில் மட்டுமே எமது சங்கம் நடவடிக்கை மேற்கொள்ளமுடியும்.

எமது சங்கம் நடவடிக்கை எடுக்க முடியாது.

அண்மைக்காலத்தில் ஓட்டோ சாரதிகள் தொடர்பில் பல முறைப்பாடுகள் எமது சங்கத்துக்கு கிடைத்துள்ளன. வேகமாக ஓட்டோவைச் செலுத்துதல், உரத்த சத்தத்தில் ஓட்டோவினுள்பாட்டுப் போடுதல், கட்டண அறவிடலில் நியாயமற்ற வகையில் பயணிகளுடன் முரண்படுதல், பயணிகளின் பொருள்களுடன் தலைமறைவாதல் போன்ற முறையற்ற செயற்பாடுகளில் ஓட்டோ சாரதிகள் ஈடுபடுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

எவ்வாறாயினும், பதிவு செய்யப்படாத ஓட்டோசாரதிகளே இவ்வாறான செயல்களில் ஈடுபடுவது தெரிய வந்துள்ளது.

எனவே பயணிகள், தமது பிரயாணம் தொடர்பில் கவனஞ்செலுத்த வேண்டும்.

இதுவரை யாழ். குடாநாட்டிலுள்ள சுமார் 400 ஓட்டோக்கள் சங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஓட்டோக்களை சங்கத்தில் பதிவு செய்யவேண்டியதன் அவசியம், அதன் தார்ப்பரியம் மற்றும் அதனால் ஏற்படும் நன்மைகள் தொடர்பில் தெளிவில்லாத சாரதிகளே இன்று வரை தமது ஓட்டோக்களை எமது சங்கத்தில் பதிவு செய்யவில்லை.

எனினும், சகல ஓட்டோக்களையும் சங்கத்தில் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - இப்படி அந்த அலுவலர் தெரிவித்தார். (எ-9)

## கண்ணீர் அஞ்சலி

H.N.D.A 2 ஆம் வருடத்தில் கல்வி கற்கும்
எமது சக மாணவி
செல்வி சி.சிவநந்தினி அவர்களின் அன்புத் தந்தை
**சிவராசா**
அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திருநெல்வேலி.
யாழ்.உயர் தொழில் நுட்ப நிறுவனம்
H.N.D.A. 2ஆம் வருட மாணவர்கள்.
(21375) (32-11-16-31)

## இளவாலையில் சாரணிய பாசறை

யாழ்ப்பாணம்,ஓக.15

சாரணிய பாசறை இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் மூன்று தினங்களுக்கு இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலத்தில் மாவட்ட ஆணையாளர் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ)






## கண்ணீர் அஞ்சலி

சங்கானை வைத்தியசாலை பொறுப்பதிகாரி
Dr.அ.யோகராஜா
அவர்களின் பாசமிகு தாயார்
**திருமதி அப்புத்துரை பூமணி**
அவர்கள் காலமானதையிட்டு ஆறாத்துயரில் இருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அரசினர் வைத்தியசாலை.
சங்கானை.
உத்தியோகத்தர்களும்
ஊழியர்களும்.
(21434) (19)

## தவறிவிட்டது

10.08.2003 அன்று நீர்வேலிக்கும் சிறுப்பிட்டிக்கும் இடையில் வீடியோ நாடா ஒன்று தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும் சன்மானம் வழங்கப்படும்.

பொ.நடராசா
நீர்வேலி ப.நோ.கூ. சங்கம்
நீர்வேலி.
T.P : 0777-074718
(21440) (25-11-16-31)


முடிந்தது | முடிந்தது | முடிந்தது | முடிந்தது | முடிந்தது

விற்று முடிந்தது | விற்று முடிந்தது | விற்று முடிந்தது | விற்று முடிந்தது | விற்று முடிந்தது

விற்று முடிந்தது | விற்று முடிந்தது | விற்று முடிந்தது | விற்று முடிந்தது | விற்று முடிந்தது

விற்று முடிந்தது | விற்று முடிந்தது | விற்று முடிந்தது | விற்று முடிந்தது | மேலும் நீடிப்பு

எமது வாக்குரிமையற்ற 20 மில்லியன் சாதாரண பங்குகள்
மிகச் குறுகிய காலத்தினுள் விற்று முடிந்துவிட்டன

முன்னேற்றத்தில் அக்கறையுள்ள உங்களைப் போன்ற முதலீட்டாளர்கள் காட்டிய பேராதரவு எமக்கும் பெரும் உற்சாகம் தருகின்றது. அதன் காரணமாக மேலும் 20 மில்லியன் வாக்குரிமையற்ற சாதாரண பங்குகளை வழங்கும் வகையில் இப் பங்கு வழங்கலை நீடித்துள்ளோம். இந்த அரிய வாய்ப்பை நழுவ விடாதீர்கள்.

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியில் விபரமஞ்சரியைக் கேட்டுப் பெறுங்கள். வாக்குரிமையற்ற சாதாரண பங்குகளே வழங்கப்பட இருக்கின்றன.

உங்கள் முன்னேற்றத்திற்கு எங்கள் பங்களிப்பு

செலான் வங்கி

நீடிக்கப்பட்டுள்ளது
வாக்குரிமையற்ற சாதாரண பங்குகளின் வழங்கல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# D.C.M.

பருத்தித்துறை வீதி - யாழ்ப்பாணம்
(இந்துகுருகுலத்திற்கு முன்பாக)

## A/L DAY CLASS

| | | |
|---|---|---|
| பொருளியல்: | - | வரதராஜன் |
| கணக்கீடு | - | முகுந்தன் |
| வணிகக்கல்வி | - | உமாகாந்த் |
| அளவையியல் | - | உதயா |
| தமிழ் | - | அருண் |
| இந்துநாகரிகம் | - | ஸ்ரீஸ் |
| நாட. அரங்கியல் | - | சுதன் |
| புவியியல் | - | குமரன் |

(21418)

**ஆரம்பம்: 18.08.2003**
திங்கள் 8.00 மணி (ப.நே.)

S.வரதராஜன்
இயக்குநர்.
D.C.M.

(26-21-19-18)

---

லண்டன் மாநகரில் இருந்து வருகை தந்த

## செல்வி பிருந்தாஜினி ஸ்ரீதரன்

(திருமதி சுமதி சிவமோகனின் மாணவி)
அவர்களின்

## தெய்வீக இசை நிகழ்ச்சி

*இடம்:* நல்லை ஆதீன கலாமண்டபம்
*காலம்:* இன்று (15.08.2003) வெள்ளிக்கிழமை
*நேரம்:* மாலை 7.00 - 8.00 மணிவரை
*தலைமையுரை:* பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா
*ஆசியுரை:* ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

நிகழ்ச்சி

*பாட்டு:* செல்வி பிருந்தாஜினி ஸ்ரீதரன்
(திருமதி சுமதி சிவமோகனின் மாணவி)
*வயலின்:* வித்துவான் A.ஜெயராமன்
*மிருதங்கம்:* கலாவித்தகர் T.ராஜன்
*முகர்சிங்:* வித்துவான் K.நந்தகுமார்
*நன்றியுரை:* ஆதீன மேலாளர்

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

(21433) (26-21-11-16) - குடும்பத்தினர்.

---

## கண்ணீர் அஞ்சலி

நவாலி Y.M.C.A யின் நீண்டநாள் உறுப்பினராகிய

**W.N.தேவகடாட்சம்**

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**Y. M. C. A.** நிர்வாகசபை உறுப்பினர்கள்.
அங்கத்தவர்கள். ஊழியர்கள்.

நவாலி (21415)(21-11-15)

---



# சனிக்கிழமை அதிர்ஷ்டம்



உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 2859214 இருந்து
2877422 வரை
சீட்டிழுப்பு இல. 1426
திகதி 13.08.2003

## வெற்றி எண்கள்

**05 06 07 10 52**

போனஸ் எண் **39**

## ஜக்பொட் பரிசு

**ரூபா.1,500,000/-** வெல்லப்படவில்லை.

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 1,500,000/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 100,000/- | 200,000/- |
| 4 | 112 | 10,000/- | 1,120,000/- |
| 3 | 5,679 | 500/- | 2,839,500/- |
| 2 | 94,913 | 20/- | 1,898,260/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 05ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 116,012 | 10/- | 1,160,120/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.7,217,880/-

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்

**ரூபா.2,397,500/-**

தொடர் இல. 3843403க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2003 ஆகஸ்ட் 16ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

**2861304-4-09**
**2876938-2-00**
**2861816-3-02**
**2860133-4-81**
**2863357-8-56**

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX O&M

---




**சமாதானத்தை உறுதிப்படுத்துவோம்.**

பிள்ளைகள் வளர்ந்த பிறகு அவர்களது விளையாட்டுப் பொருட்களுக்கு ஏற்படும் நிலை போல, சமாதானமும் கவனிப்பாரற்றதாகி விடுமா? சமாதானத்தின் செழுமையை இன்று நம்பிள்ளைகள் அனுபவித்து மகிழ்கின்றனர். அவர்களை மீண்டும் இருள் சூழ்ந்த வாழ்வில் வீழ வைப்பது சரியா? அவர்களின் நிரந்தர சமாதானக் கனவை கலைப்பது முறையா? சமாதானத்தை தங்கு தடையின்றி முன்னெடுப்போம். இது நம் கடமை.

**Save the Children**
**in Sri Lanka**

Grant McCann

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org